R. PUKKERYAPILLI

கடவுட்டுணை.

சிவாலயச்
செந்தமிழ்ப்பா.

இஃது

ரெசவேர் அதழூவேன் - என்றுவழங்கும்

மணியம்-ம-ா-ா-ஸ்ரீ

புதுவை

பெ. நாராயணசாமிநாயுடு

அவர்களாற்செய்யப்பட்டு

புதுவை-ம-ா-ா-ஸ்ரீ தையல்மேஸ்திரி

அ = கோவிந்தசாமிபிள்ளை

அவர்கள் முயற்சியால்

புதுவை-குருசாமிப்பிள்ளை அவர்கள்

திருவளரெந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

சுபம்.

1904.

ஸ்ரீ

புதுவை - ஸ்ரீமாந்

வெ. நா. இராமசாமிசெட்டிகாரவர்கள்

இந்நூ லாசிரியருக் கன்புகூர்ந்தளித்த

ஆசீர்வாதம்.

நிலமண்டிலவாசிரியப்பா.

உலகெலாம்பூத்த வொருதனிமுதல்வ
னலகிலாவிளை யாட்டினைச்செய்வான்
அரனுக்குக்கலி யாணஞ்செயவெணித்
தரிதலையனைக்கூய்ச் சதமகன்றன்னைற்
குபேரனைக்கொண்டு குறைவிலாத்திரவியஞ்
செலவிடப்புரிந்து தேவதச்சனு
மயனையழைத்து மகாமண்டபம்புரிந்
தயனுமிந்திரனு மளகாபுரியனுந்
தயையுடன்மண்டபந் தகையுறச்செய்தபின்
சிவபிரானென்றதோர் திருப்பேர்கொடுத்துத்
தவமுனிதேவருந் தக்கனுஞ்சேர்ந்துள
கோட்டிகள்கூடிக் குலாவுதல்செய்தபின்
அச்சுதாவனந்தா வாதிமூலமே
னச்சரவின்மே னடித்தவவென்றே
யிச்சகந்தன்னில் யாவருந்துதித்து
நிச்சயமாகவே நின்பின்பிறந்த
மாயையாங்காளியை மணத்தினுக்கருளென
வாயவர்வேண்ட வகமகிழ்ந்தமலனு

2. புதுவைஸ்ரீசுவேதபத்துமாசனே அக்ஷரசாலைக்கதிபர்மகாராஜஸ்ரீ
ஸ்ரீநிவாச - ஆறுமுகம்பிள்ளை அவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

கற்றதுகொண்டுமேனெனவமைந்திராமற்கணித்தே
கவிகணுளும்
பற்பலவாயியற்றுதலேதொழிலாக்கொள்பண்பனின்றோர்
பரசிவம்வாழ்
நற்றலங்களாங்காங்குமமர்தேவம்மைப்பெயர்கள்
நன்றுக்காட்டிச்
சொற்றனனுநாராயணச்சாமியதைமதிப்பார்
தூய்மைதேர்ந்தே.

3. புதுவை வித்துவான்மகாராஜஸ்ரீபெரியசாமிப்பிள்ளை மாணாக்கர்
ஒர்லெயான்பேட்டை மகாராஜஸ்ரீ
நாராயணா - வெங்கடாசலநாயகரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

சீரார் சிவாலயச் செந்தமிழ்ப்பாவென்றோர் நூல்
பாரார் புகழப் பகர்ந்தனனு - னேராக;
நாராயணசாமி நாவலன் மெய்க்கொண்ட பயன்
ஆராயின் மற்றிதுவே யாம்.

4. இதுவும்ஷெபெரியசாமிப்பிள்ளை மாணாக்கரும்கவர்னமெண்டு
தமிழுபாத்தியாயருமாகிய மகாராஜஸ்ரீ
சி - பங்காருபத்தரவர்களியற்றிய
எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்தழைத்தபுலவரெலாஞ்சிறமேற்கொண்டு
தெள்ளமுதோசெம்பாகோதேனோவென்னப்
பேர்தழைத்தபத்திரசம்பெருக்கெடுப்பப்
பெரியதம்பிதவக்கடலிற்பிறந்ததோன்நல்
நார்தழைத்தகவிகணவநவமாயென்று
நவினாராயணசாமிநாவில்வல்லோன்
தார்தழைத்தசிவாலயச்செந்தமிழ்ப்பாவென்று
சாற்றுமொருநூலியற்றித்தந்தான்மாதோ.

5. இதுவும் ஷை பெரியசாமிப்பிள்ளை மாணுக்கருமகவர்ன மெண்டு தமிழுபாத்தியாயருமாகிய நெல்விமாநகரம் மகாராஜஸ்ரீ

கோ - இராமாநுஜசெட்டியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சீரார்ந்தொளிருஞ் சிவாலயச் செந்தமிழ்ப் பா
நாரா யணசாமி நற்கவிஞன் - பாரார்ந்த
மெய்ப் புலவரெல்லாம் வியக்கவுரைத் தானெக்கம்
பொய்ப்புலவர் கொள்ளும் பொருட்டு.

6. இதுவும் ஷை பெரியசாமிப்பிள்ளை மாணுக்கர் மகாராஜஸ்ரீ

சேஷ - சடகோப ஐயரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

உலகமெலாந்தன்னகட்டிற்பெறுதபெற்ற
வுமையவளாங்கௌரிகுலத்துதித்தசீலன்
வலவர்மிகுந்தார்கருக்களாம்பாக்கத்தின்
மணியமெனுமுத்யோகமருவப்பெற்றோன்
சலமறுநாராயணசாமிப்பேர்பூண்ட
சற்குணத்தோன்சிவாலயச்செந்தமிழ்ப்பாவென்னும்
புலவர்சிரங்கொளுமொருநூல்புகன்றச்சிட்டுப்,
புவியினல்லோர்க்கீந்தழியாப்புகழ்பெற்றானே.

7. இதுவும் ஷை பெரியசாமிப்பிள்ளைமாணுக்கர் மகாராஜஸ்ரீ

சி. கந்தசாமி உபாத்தியாயரவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருவளர்மருமக்கருமுகில்வண்ணன்றேவர்கட்கீந்ததெள்ளமுதின்
மருவளர்காவார்கருக்களாம்பாக்க மணியமுத்யோகன்வாலறிவன்
தருவளர்கைநாராயணசாமி சற்குணன்சிவலாயமீதில் [வினனே.
உருவளர்ந்தோங்குஞ்செந்தமிழ்ப்பாவொன் றுலகுயப்பகர்ந்துத
-

8. இதுவும் ஷை பெரியசாமிப்பிள்ளை மாணுக்கர் மகாராஜஸ்ரீ
சி - பழனிமுத்துவைத்தியரவர்களியற்றிய
நேரிசை ஆசிரியப்பா.

திருவளர்காக்ஷி தருதலினுளும், வதுவைமாருத புதுவையில் வாழ்வோன், கஞ்சனேமுதலாம் பஞ்சபிரேதா, சனத்தியென்றே த்துசற் சனத்திமுத்தனத்தியாய், நலந்தருங்கௌரி குலந்தழைத் திடுவான், பிரியாதுவந்த பெரியதம்பிமாற், கரியதவத்திற் குரிய புதல்வனும், பெருக்கமிகுத்த கருக்களாம்பாக்கத், தினின்மணி யமெனுமுத்தியோகன், பாரார்புகழும் பலகலைவல்லுந, ஞராய ணசா மிப்பெயர்நாவலன். தவாநிலையளிக்குந் தனிமுதன்மேவி டுஞ், சிவாலயச்செந்தமிழ்ப் பாவெனச்செப்பிடும், ஒருநூலிய ற்றி யுலகுக், கருளினனச்சிட் டறிஞர்மேற்கொளவே.

9. இதுவும் ஷை பெரியசாமிப்பிள்ளை மாணுக்கர் மகாராஜஸ்ரீ
சரவண - அருணசல - இரத்தினவேலு
உபாத்தியாரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

சிவாநுபவச் செல்வர் தினம் பரவுந் தேவாழ்
சிவாலயச் செந்தமிழ்ப்பாச் செய்தான் - றவாநிலைதேர்
நாரா யணசாமி நாவலன் பாவல்லீர்
சீரா ரமிழ்தெனவே தேர்ந்து.

10. இதுவும் ஷை பெரியசாமிப்பிள்ளை மாணுக்கர் மகாராஜஸ்ரீ
வே. கிருஷ்ணசாமி உபாத்தியாயரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

நாராயணசாமி நாவலவனன்குரைத்தான்
சீரார் சிவாலயச் செந்தமிழ்ப்பா - பாரார்
புலவீ ரதனேர் புயங்கப் பெருமா
னலதெவராற் சொற்றிடவிங் காம்.

11 இதுவும் ஷை பெரியசாமிப்பிள்ளை மாணாக்கர் பூத்துறை மகாராஜஸ்ரீ

பிரம - அரங்கநாதக்கவுண்டரவர்களியற்றிய

கட்டளைக்கலித்துறை.

சீரார்சிவாலயச் செந்தமிழ்ப்பாவொன்று தென்புதுவை
நாரார்நா ராயணசாமிமதிஞ னவின்றனனல்
ஏசாறெழுத்தாகம மறையேயென்ப ரின்புலவர்
பாரார்மெய்யோகியர் பார்ப்பாரந்நூலினைப் பார்த்தினினே.

12. புதுவை மகாராஜஸ்ரீ

மூத்து - குருநாதப்பத்தரவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பரமனுநமரும்பதிகளுமாங்குப் பதிந்திடுந்தளிகளும்யார்க்குஞ், சிரமமில்லாமலறிந்திடச்சொன்னான் சிவாலயச்செந்தமிழ்ப்பாவால், தரணியிற்கௌரிகுலமதிலுதித்தோன் றயாபரனடிமறவாதோன், உரமலிசொன்னாராயணசாமி யோங்குவான்புலவர்வாழ்த்திட [வே.

13. புதுவை மகாராஜஸ்ரீ

ஆ - முத்துசாமி உபாத்தியாயரவர்களியற்றிய

கட்டளைக்கலித்துறை.

சீரார்புதுவைநாராயணசாமிநற் செந்தமிழ்ப்பா
ஏரார்சிவாலயமாயிரத்தெட்டின்மீ தேத்தினைகைப்
பாரார்பணிக்கிறைவன்மாமுனியயன் பார்த்துவெட்கி
யாராதகிலம்வெற்பந்தரமோடி யடங்கினரே.

14. பெத்துசெட்டிப்பேட்டை மகாராஜஸ்ரீ

கைலாச - ஆறுமுக உபாத்தியாயரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சிலர்தொழு தேத்துஞ் சிவாலயச் செந்தமிழ்ப்பா
நூலியற்றிச் சன்மமெனு நோயறுத்தான் - வாலறிவ
னாராயணசாமி நற்கவிஞன் மற்றதனை
யாரா வமுதென்ன லாம்.

15. திருக்கைலாய பரம்பரைத் திருக்கோவலூராதீனம
திருப்பாதிரிப்புலியூர் சந்நிதி வீதி ஞானியார் மடாலயத்தில்
எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெஞ்ஞான
சிவாசாரிய சுவாமிகள் பிரதம மாணாக்கரும்
ஸ்ரீ - கந்தர்பத்தர் கழல்கட்குத் தொண்டுபூண்டொழுபவருமாகிய
ஷெயூர் புகையிலைமண்டி - சிவ - அதிகப்ப
வீ - சோமசுந்தரசெட்டியாரவர்களியற்றிய

இரட்டையெழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீருறுகமலப்பொகுட்டினிலுறையுந் திசைமுகன்படைப்பினி லினிய, சிந்துசூழ்பாந்தண்மௌலியிற்றுலங்குஞ் சீர்மிகுமலனியி லோங்கும், பேருறுமெந்தைமுருகவேள்தாதை பிறங்கிடுஞ்சிவாலயந்தமக்குப், பீடுசெந்தமிழ்ப்பாவெனுமொருநூலைப் பேசினன் கவிஞர்களுவக்க, ஏருறுங்கல்விதனிலகத்தியனே யின்சொலினலவரிச்சந்த்ரன், இகலுறுபொறையிற்றருமனைநிகர்க்கு மிசையதினாதனென்பாம், நாருறுங்கௌரிகுலமதிலுதித்தோ னண்ணுலம்பாமலைமறவான், நகர்கருக்ளாம்பாக் கம்மணியம்நா ராயணச்சாமியாம்புலவன்.

இதுவும் - நேரிசை வெண்பா.

பொற்சடையிற் பான்மதிசூழ் புத்தே ளெழுந்தருளும்
சற்சிவாலயச்செந் தமிழ்ப் பாவை - யற்புடனே
நாராயணசாமி நல்கினா னற்றமிழ்தேர்
பாரார் களிக்கப் பரிந்து.

16. இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவராகிய திண்டிவனம்
லோக்கல்பண்டு கண்ருக்ட்டர் மகாராஜஸ்ரீ வீ - பார்த்தசாரதி
நாயுடு அவர்கள் குமாரர் மகாராஜஸ்ரீ பா - வரதராஜலுநாயுடு
என்றுவழங்கும்
பா - பத்ராசலம் நாயுடு அவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

நாராயணசாமி நங்குலத்தா னன்குரைத்தான்
சீரார்சிவாலயச் செந்தமிழ்ப்பா — நீராரு
முக்கணனல்லாது முடியா திகன்புகழைப்
பக்குவமுடன் பகரப் பார்த்து.

17. இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவராகிய மகாராஜஸ்ரீ தெய்வசிகாமணிப்பிள்ளை அவர்களியற்றிய

இரட்டையாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட தென்புதுவையம்பதியில்வந்தவன் ஸ்ரீதேவியருள் வாய்ந்தவன், செப்பரியகலைமகள்கடாக்ஷமுற்றவனெடிய திருமாலைமறவாதவன், தெலுங்கொடுபிராஞ்சுதமிழ்முதலானபலபாஷை தேர்ந்தசங்கீதநிபுணன், தேசாதிபன்கௌரிகுலமதிலுதித்தவன் திகழ்பெரியதம்பிதனையன்;

தார்கொண்டபுத்தகச்சாலையாபீசின்முன் றனொருரயிட்டனுகத், தகையுடனிருந்துரெழிசேராகியிப்பொழுது தக்கரெசவேரானவன், சாரங்கதரன்மனுச்சோழனரனுக்குமைந் தனையறுத்தமுதளித்துச், சாயுச்யபதவியிற்சார்சிறுத்தொண்டன் சரித்திரப்பாக்களுடனே;

ஏர்கொண்டமயிலாசலக்கீர்த்தனங்களூற் றெட்டுத்திருப்பதிகளுக், கீடிலாக்கீர்த்தனம்பாடியச்சிட்டபண் டிதனெனப்பெயர்வாய்ந்தவன், என்னுயிர்க்குயிரானவொண்கண்மணியாய்வந்த வின்புள்ளவென்றனுசான், ஈராறுகரமுமெழிலோராறுசிரமுமுறு மெந்தைவேட்குரியதாசன்;

நார்கொண்டஞாலமதிக்கவந்தவனான நாராயணச்சாமிமால், நளியணிசிவாலயச்செந்தமிழ்ப்பாவின்று நன்குடன வின்றனிதை, நாகராஜன்கும்பமுனியயனுரைக்கவிந் நகரின்முடியாமல்வெட்கி, நதிபதியில் வெற்பில்வானிற் புகுவரேலெந்த நாவலர்கணவில்வர் மாதோ.

இதுவும் நேரிசை வெண்பா.

சீரார்புதுவையினிற் சேர்பெரியத் தம்பிதரு
நாராயணசாமி நாவல்லோன் — பாராரும்
கற்கண்டும்பாலுங் கனிரசமுங் கைக்குமே
சொற்கவிதை மேவுஞ் சுவைக்கு.

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

உ

கடவுடுணை.

புதுவை திருவளரெங்திரசாலைக்கதிபர் மகாராஜஸ்ரீ

க. குருசாமிப்பிள்ளை அவர்கள்மீது

இந்நூலாசிரியர் எடுத்தோதிய

புகழ்ப்பா.

பூமேவும் புதுவையினிற் புகழ வோங்கும்
புண்ணியனற் கண்ணியன்முக் கண்ணி தந்த
புத்திரனுஞ் சத்திவடி வேலன் மூளைப்
போதுமற வாதுமிக வோது மேலன்
மாமேவுங் கங்கைகுலந் தழைப்ப தற்கு
வுந்தகந்த சாமிமாற் றந்த பாலன்
மதிமிகுத்த வாணியினற் கருணை வாய்ந்த
மன்னவனுங் குருசாமி சற்கு ணாளன்
தேமேவு மிந்நூலைத் தனது சொந்தத்
திருவளரெங் திரசாலை யெனும்பேர் பூண்ட
செப்பரிய வச்சாபீ சினிலச் சிட்டென்
சிந்தைகளித் திடும்படியாய்த் தந்தா னிந்தப்
பாமேவும் பாவலரன் னேன் றிரத்தைப்
பார்த்துமிகப் பலவாறு புகழ யானும்
பல்லாண்டு நோயற்றுச் செல்வ முற்றுப்
பாரிலுறப் பரனடியைப் பணிகின் றேனே.

இதுவும்இவ்வச்சாபீசுகொம்போசித்தேர் ம-ா-ா-ஸ்ரீ

இராம. முனிசாமிசெட்டியார் அவர்கள்மீது

புகழ்ப்பா.

சீர்பூத்த வைசியகுலந் தழைக்க விந்தத்
தென்புதுவை யம்பதியிற் செனித்த தீரன்
தார்பூத்த மணிமார்ப னென ராம
சாமிசனுர்த் தனனருளாற் றருங்கு மாரன்
பேர்பூத்த முனிசாமி வேளிந் நூலைப்
பிழையில்லா தச்சிட்ட பெருமை தன்னைப்
பார்பூத்த பாவலர்பார்த் தாசிர் வாதம்
பலவிதமா யெடுத்தெடுத்துப் பகர்ந்தார் மாதோ.

உ

கடவுடுணை.

சிவாலயச்செந்தமிழ்ப்பா.

காப்பு.

சீர்பெறுங்கணேசன்றிவ்ய சேவடிசேவித்தாசான்
ஏர்பெறுங்கழலைப்போற்றி யிந்துவேணியனையேத்தி
வார்பெறும்வாணித்தாயின் மலரடிவணங்கிவாழ்த்தித்
தார்பெறுஞ்சிவாலயச்செந் தமிழ்ப்பாவைச்சாற்றுவேனே.

அவையடக்கம்.

சுந்தரஞ்சேர்மூவர்களாற் பதிகம்பெற்ற சொல்லருமச்சிவாலயச்செந் தமிழ்ப்பாத்தன்னை, அந்தமுறு மிலக்கணந்தேரறிஞர் முன்னே யறிவிலியானறைகுவதைமழலைச்சேய்கள், விந்தையுடனோலையினாலோடஞ்செய்து விட்டுவிளையாடமீகாமன்கண்டு, புந்தியினின் மகிழ்வதுபோற் புரையைப்போக்கிப் பூரிக்கப்பொன்னடியைப்போற்றினேனே.

அறிவிப்பு.

☞ இப்பரத கண்டத்திலே ஆதியில் 1008 சிவாலயங்களுண்டாயிருந்தனவாமென முன்னூற்றுணிபாம். ஆனாலிப்போது சைவசமயாசாரியர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகளாகிய இவர்களாற் பாடப்பட்ட தேவாரப்பதிகங்களை யுடையனவாயிருக்கின்ற சிவாலயங்கள் 274 இவைகளைப் பெரும்பாலுந் தரிசித்துவந்த அடியார்களைக் கண்டறிந்தும் பலசெய்யுள்களைப் பரிசோதித்தும் அந்தந்தச் சிவாலயங்களி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமான் உமாமகேஸ்வரி இவர்கள்திருநாமங்களும் ஆங்காங்கு நடந்த முக்கியமான மான்மியங்களும் அந்தந்தத்தலங்களில் முத்தியடைந்த நாயன்மார்களின் திருநாமங்களும் அங்கங்குந் தேவாரப்பதிகங்கள் திருவாய்மலர்ந்தருளிய சமயாசாரியர்களின் திருநாமங்களும் ஒவ்வோர் தலத்தினின்றுமற்றோர் தலத்துக்கேகும் வழியின்மைல்கல்லளவும் இவைகளையாவரு மெளிதாய்த் தெரிந்துக் கொள்ளும் வண்ணம் இச்சிவாலயச்செந்தமிழ்ப்பாவுக்குப் பின்னாலிருக்குஞ் சிவாலய மான்மியச் சுருக்கத்திற் கண்டெழுதப் பட்டிருப்பதால் இந்த நெம்பருக்குச் சரியாய் அதிற்பார்த்துக் கொள்ளலாம்.

சிவாலயங்கள். 274.

1	சோழநாட்டில் காவேரிக்குவடகரையிலுள்ளதலங்கள்	63
2	இதுவும் தென்கரையிலுள்ள தலங்கள்	127
3	ஈழநாட்டிலுள்ள தலங்கள்	2
4	பாண்டி நாட்டிலுள்ள தலங்கள்	14
5	மலைநாட்டிலுள்ள தலம்	1
6	கொங்கநாட்டிலுள்ள தலங்கள்	7
7	மகதநாடு அல்லது நடுநாட்டிலுள்ள தலங்கள் ...	22
8	தொண்டநாட்டிலுள்ள தலங்கள்	32
9	துளுவநாட்டிலுள்ள தலம்	1
10	வடநாட்டிலுள்ள தலங்கள்	5
	ஆக.	274

1 வது, சோழநாட்டிலே காவேரிக்குவடகரையிலுள்ள தலங்கள் 63

இவைகளுக்கு விபரம்.

1 தில்லை (சிதம்பரம்.)

சீர்பூத்ததிருவுருவேதித்திக்குஞ்செந் தேனேசெம்பாகேசெங்
கனியேமிக்க, கார்பூத்தகாளியுடன்காலைத்தூக்கிக் கனகசபையினி
னடித்தகருணைவாழ்வே, வார்பூத்தசிவகாமிவல்லிக்கேற்ற மரக
தமே மாசிலாமணிவிளக்கே, ஆர்பூத்த தில்லைநட ராஜனேயென்
னாண்டவனேயடியேனுக்கருள்செய்வாயே. 1

2 திருவேட்களம் (திருவகுளம்.)

ஆட்கொண்டென்னை யளித்தோனேயென்குறை
கேட்கவில்லையோ கிஞ்சித்துமுன்செவி
வேட்களத்து விமலனேநின்னிரு
தாட்களென்றலை தன்னில்வைத்தாள்வையே. 2

3 திருநெல்வாயில் (சிவபுரி.)

அத்தியுரித்தணிந்தோனையல்லோன்கங்கை யணிந்ததிருச்ச
டையோனையன்பருக்கு, முத்திக்குவித்தோனைமும்மூர்த்திக்கு மு
தலோனை முப்புரத்தைமுனிந்திட்டோனை, எத்திசையும்புகழ்வா
ய்ந்தவெம்பிரானை யின்னருளையிமயவனுக்கீந்திட்டோனை, நித்திய
னைநெல்வாயிலானையன்பாய் நீமறவாமற்படிசேவிப்பாய்நெஞ்சே.

4 திருக்கழிப்பாலை (காரைமேடு.)

ஆன்மகோடிகளையெல்லா மாதரிக்குந்தயாளா
வான்மீகிரிஷிபூசிக்க வந்தருளீந்தகோனே
தேன்கலிசோலைசூழுந் திருக்கழிப்பாலைமேவுங்
கூன்பிறையணிபால்வண்ணக் குருபராகோரினேனே. 4

5 திருநல்லூர்ப்பெருமணம் (ஆச்சாபுரம்.)

ஆதியாயனாதியா யமர்ந்தவந்திவண்ணனைச்
சோதிலாதநாரிபால் குடித்திடுஞ்சம்பந்தனைச்
சோதியிற்கலக்கவைத்த சூவினையக்கபாலியைத்
தீதிலாநல்லூர்ப்பெருமணத்தனைச்சேவிப்பேனே. 5

6 திருமயேந்திரப்பள்ளி (கோயிலடிப்பாளையம்.)

கள்ளிதழித்தொடையானைக்கனலையேந்துங் கையானைக்காம னைக்கண்ணாற்காய்ந்தோனைத், தெள்ளியவோரெலிக்குமுன்மாவெ லியாயிந்தத் திரிபுவனந் தனையாள வரந்தந்தோனை, வள்ளிதெய் வயானைமணாளனையீன்றோனை வாரிதிசூழுலகமெலாம்புகழ்மயே ந்த்ரப், பள்ளியெனுமூரானையெம்பிரானைப் பதமலரைப்பகலிரவும் பணிகுவேனே. 6

7 திருமுல்லைவாயில்.

திங்களொடுகங்கையணியுஞ்சதாசிவனையென் சிந்தையிற்சிக் கினவனைத், தங்கமிகுமங்கையைப்பங்கில்வைத்தவனையொரு சூ லாயுதத்தலைவனைச், செங்கண்மாலும்புகழவந்தகங்காளனைத் திரு முல்லைவாயிலானை, எங்குமொருதெய்வமாய்நின்றபெருமானைநிச் மேத்தித்துதிப்பேனரோ. 7

8 திருக்கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை.)

உருக்கமுடனின்புகழைப்பாடிப்பாடி யோடிவந்தேனொருவ ழியுங்காணேனென்னைச், செருக்கடையும்பாவியெனக்கைவிட்டா யோ சேயலவோயானுனக்கென்னுளத்திலென்றும், இருக்கமனமு னக்கிலையோவெந்தாயெந்தா யென்செய்கேனேழையந்தோவந் தோ, திருக்கலிக்காமூர்வாசாசுந்தரேசா திருவடியைத்தினந்தோ றுஞ்சேவிப்பேனே. 8

9 திருச்சாய்க்காடு (சாயாவனம்.)

அக்கரவாபரணமெனவணிந்திட்டானை யறுமூன்றிரண்டுகர த்தானைவென்ற, சக்கரத்தான்சோதரியைத்தழுவினானைச் சந்திர னைத்தரித்தசெழுஞ்சடையுளானை, நக்கனைநான்முகனைந்தசிரசி லொன்றை நாடிநகத்தாற்கிள்ளினானைத்துட்ட, தக்கனைமாமுடிதறி த்ததகையுளானைச் சாய்க்காட்டெம்மானைவந்துசார்வாய்நெஞ்சே.

10 திருப்பல்லவனீச்சரம்

(காவிரிபூம்பட்டணம். காவேரிபட்டணம்.)

அல்லமருங்குழலுறுமம்பிகையையென்று மகலாதவற்புதவா னந்தத்தேனே, கல்லடியும்வில்லடியும்பட்டன்பர்க்குக் காட்சிதந் துகாத்தளித்தகருணைவாழ்வே, கொல்லவந்தகயமுகனைக்கொம்பா ல்மாய்த்த குஞ்சரத்தைக்குழவியெனக்கொண்டகோவே, பல்லவ னீச்சுரமமர்ந்தபரமனேயென் பாவில்வந்துன்பதநிழலைப்பாலிப் பாயே. 10

11 திருவெண்காடு (சுவேதாரணியம்.)

குன்றையெரிந்தோனையீன்றோனேயிந்தக் குவலயத்திற் தல
தெய்வமாய்வந்தோனே,'என்றைக்குமறவாதவேழையேனுக் கிணை
யடியைத்தரவிதுவே சமயஞ் சேயைக், கொன்றைமரமாயன்று
செய்துவைத்த குற்றமிலாக்குணக்குன்றேகோவைக்காணுக், கன்
றைப்போற்கதறுகின்றேன்கண்பார்த்தாள்வெண் காட்டினடமிடு
கின்றகருணைவாழ்வே. 11

12 திருக்காட்டுப்பள்ளி

ஆட்டுக்கிசைந்தவனே யானை யாடையணிந்தவனே
பாட்டுக்குகந்தவனே சூல பாணியனே துயரை
ஓட்டுவதுன்கடனே யன்ப ருள்ளத்தெழுந்தவனே
காட்டுப்பள்ளியில்வளர் நீல கண்டனேகாப்பாயே. 12

13 திருக்குருகாவூர் (திருக்கடாவூர்.)

மருவாருங்கொன்றையணி மார்பாநின்மலரடியை
ஒருபோதும்யான்மறவே னுள்ளமிரங்காததுமென்
குருவேயீதென்குறையோ கோரிவந்தேன்குருகாவூர்த்
திருமேனிவெள்ளடையா சேவடிதந்தாளுவையே. 13

14 சீர்காழி (சீயாழி.)

ஆவலாய்ச்சம்பந்தர்க்கருட்பாலூட்டி யானந்தங்கொண்டவு
மைக்கன்புளானைச், சேவலாமுன்னுமிந்திரனுமாலுந் திசைமுகனு
ஞ்சேவிக்கப்பெற்றதேனை, மூவராலும்பாடப்பெற்றுமுத்தி முன்
னளித்தமுன்னோனைமோனஞான, தேவராலிருபுறமுஞ்சூழமேவு
ஞ் சீர்காழியானைநிதஞ்சிந்திப்பேனே. 14

15 திருக்கோலக்கா (திருத்தானமுடையார்கோயில்.)

வரதாநின்மலரடியையேத்திப்போற்றி வந்ததிருஞானசம்பந்
தமூர்த்தி, கரதாளகீதத்தைக்கேட்டுக்கேட்டுக் களிப்புற்றுப்பொற்
றாளந்தந்தகோவே, பரதாரநினையாமற்பாரிலிந்தப்பாவிக்குப்பாலி
க்கப்பாரமென்றோ, சரதாவென்சஞ்சலத்தைத்திருக்கோலக்காச்
சப்தபுரியீசாநீதவிர்த்தாள்வாயே. 15

16 புள்ளிருக்கும்வேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்.)

கள்ளிதழிமாலையணி கண்ணுதலேயிந்திரனும்
ஒள்ளியவேலேந்துகின்ற வுத்தமனுமுள்ளபடி
தெள்ளியநின்சேவடியைச் சேவிக்கப்பெற்றதிருப்
புள்ளிருக்கும்வேளூரா பொன்னடியைப்போற்றினனே;

17 குருமாணக்குடி (திருக்கண்ணார்கோயில்.)

கற்றவரும்மற்றவருங் கண்குளிரக்காணவுறும்
நற்றவமேநற்றுணையே நன்மணியேநாயேனைப்
பெற்றவனேயற்புதனே பேரின்பம்யான்பெறவே
குற்றமிலாக்குருமாணக் குடியானேகோரினனே. 17

18 திருக்கடைமுடி (கீழையூர்.)

படமுடியாதினித்துயரைப்பாவியேனைப் பாராதவிதமென்ன
பாரிலுனை, விடவொருவருண்டோவென்வினையொழிக்க மேனா
ள்வேதன்விதித்தவிதியானாலும், தடையுண்டோநீதடுக்கத்தமியனு
க்குத்தந்தைதாய்ப்போலிருக்கத்தளரலாமோ, கடைமுடியாசடை
முடியாகருணைகூர்ந்து கடையேனைவிடையேறிவந்தாள்வாயே.

19 திருநின்றியூர்.

ஒன்றிரண்டல வுன்புகழைச்சொல
உன்றிருப்பத முச்சியிலூன்றிலன்
நன்றிநானெந்த நாளுமறப்பேனோ
நின்றியூரினின் றுடியநித்தனே. 19

20 திருப்புன்கூர்.

மறைமுடியினடனமிடுமாசிலாமணியை மாலயனுக்கெட்டாத
மாணிக்கமணியைக், குறையகற்றவந்தகுணக்குன்றானமணியைக்
குருமணியைப்பெருமணியைக்கோதகன்றமணியைப், பிறையணி
செஞ்சடைமணியைப்பேசரியமணியைப் பித்தனெனப்பேரெடுத்
தபேரின்பமணியைச், சிறையிலழுமயனைவிடுத்தாண்டதிருமணி
யைத் திருப்புன்கூர்ச்சிவமணியைத்தினமுமறவேனே. 20

21 நீடூர்.

வாயினால்வழுத்துதற்கு வகையறியாமல்வாடும்
நாயினுங்கடையேனுக்கோர் நல்லுரைநவிலொணாதோ
வேயுறுதோளிபங்கா விண்ணிறைக்கருளுந்துங்கா
நீயெனையாட்கொள்வாயே நிகரிலாநீடூரானே. 21

22 அன்னியூர்.

பொன்னிறமானவனே புலித்தோலதைப்பூண்டவனே
என்னுயிருக்குயிரா யேய்ந்திட்டவிறையவனே
தன்னிகரில்லாதுன் றாளைத் தந்தருள்தற்பரனே
அன்னியூர்வாழரசே யடி யேனைநீயாளுவையே. 22

23 வேள்விக்குடி.

அருமறைக்குமெட்டாதவமலனேகண் ணுனகலியாணசுந்தரனேயெங்கும், பெருமையுறும்பெருமானேபிறையணிந்த பெம்மானேயெம்மானேபிதறியோடி, வருமொருமாதுக்காகமனமகிழ்ந்து மறையவனுய்வந்திருந்துமணமுடித்த, தருமகுண னேவேள்விக்குடியானேயுன் ருளேயெந்தவேளேயிலுந்தலைக்கொள்வேனே. 23

24 எதிர்கொள்பாடி.

அதிர்பெற வந்த வந்தகனழிய வடியினுலுதைத்தவானந்தன், பிதிர்வனமதனிற்பிறங்கிடும்பித்தன் பேயுடனுடியபெருமான், கதிர்முடியிறைபுத்திரியினம்மானுய்க் கண்ணெதிர்வந்தழைத்திட்டோன், எதிர்கொள்பாடியனுமெம்பிரானடியை யெப்பொழுதினுமிறைஞ்சுவனே. 24

25 திருமணஞ்சேரி.

ஒருமதிவேணியானே யுருவிலிக்குதவினுனே
அருவுருவாயமைந்த வாதியானந்தத்தானே
முருகனைப்பயந்தயாழின் மொழியமைக்குகந்ததேனேத்
திருமணஞ்சேரியானேச் சிந்தனேசெய்வாய்நெஞ்சே. 25

26 குறுக்கை.

வெறுக்கையார்மேனியானே விரிசடையானேவேளே
உறுக்கியேயொழித்திட்டானே யொருமுயலகனேத்தள்ளி
சுறுக்கெனமிதித்திட்டானேச் சுடரொளியாய்நின்ருேனேக்
குறுக்கைவீரட்டத்தானேக் குறையறக்கோருவேனே. 26

27 கருப்பறியலூர் (தலைஞாயிறு.)

ஆத்திமலரணிவோனேயாயிரங்கண் ணனேயுக்ரங்கொண்டடக்கியாட்கொண்டோனே, ஏத்திவந்தகுறுமுனிக்குமணக்கோலத்தோ டெதிர்நின்றுகண்காக்ஷியீந்திட்டோனேத், தோத்திரிப்போருக்கென்றுஞ்சுகஞ்செய்வோனேச் சுத்தசுயஞ்சோதிசொரூபனேநாயேனேக், காத்திரக்ஷித்திடவந்தகருணேயானேக் கருப்பறியலூரானேக்கண்டுய்வேனே. 27

28 குரக்குக்கா (திருக்குக்காவல்.)

அரக்கருக்கஞ்சி டாதவனுமனுக்
கிரக்கம்வைத்தரு ளீந்தவனேயெனைத்
தரக்கலாகுமோ தொல்வினைநீக்கியாள்
குரக்குக்காவுறுங் கொந்தளவீசனே. 28

29 வாழ்கொளிபுத்தூர் (வாழப்பூர்.)

ஊழ்வினையகற்றவல்ல வொருதனிமுதல்வனேயிவ்
வாழ்கடற்றுயின்றமாயோ னஞ்சலிக்கப்பெற்றோனே
பாழ்மனமுனைமறக்கப் பட்டுவெம்பாவியானேன்
வாழ்கொளிபுத்தூரானே வந்தினியருள்செய்வாயே. 29

30 திருப்பழமண்ணிப்படிக்கரை (இலுப்பைப்பட்டு.)

ஆலமுண்டவாயா வடி யேனுக்கிரங்காயா
மாலயனும்புகழும் வாம தேவனேவாராயா
பாலனைப்பாராயா பழ மண்ணிப்படிக்கரையா
நீலகண்டதூயா நித நீயெனையாளாயா. 30

31 ஓமாம்புலியூர்.

ஓதரியவொருமுதலே யுயிரையெல்லா முற்பவிக்கச் செய்துக
ந்து காக்குந்தேவே, கோதறியாவேடனொருபுலியைக்கண்டு கூவி
ளத்திலேறியிலைகொய்துபோட, ஆதரவாய்விழித்திருந்தார்ச்சித்தா
னென்றே யவனுக்குமப்புலிக்கு மருளீந்தாயே, பூதலத்திலெனைம
றந்ததேனேஓமாம் புலியூராபுலையேனைப்புரந்தாள்வாயே. 31

32 கானாட்டுமுள்ளூர் (கானாட்டாம்புலியூர்,)

வானாட்டுக்கரசேயென் வல்வினைபோக்காமலெனை
ஏனாட்டுகின்றனையோ விதையறியேனின்னருளை
நீநாட்டும்படியுனைநா னெஞ்சாறநிதநிதமும்
கானாட்டுமுள்ளூரா கைகுவித்தேன்காத்தருளே. 32

33 திருநாரையூர்.

ஒப்பிலாதவெனப்பனேதுணை யுன்னையல்லாலெனக்கிலை
அப்பணிந்தவனேயருந்துய ராலமுந்துமடியனை
இப்புவியிலெப்போதுகாக்க விருக்குமோமனமோர்வரம்
தப்பிலாத்திருநாரையூரானே தந்தருள்ஜகநாதனே. 33

34 கடம்பூர்.

ஒப்பிலாமணியேயும்பர்கட்கரசே யுலகெலாமொளிரும்மாண் மணியே, செப்புதற்கரியதிரிபுராந்தகனே தேவர்கோன்செய்மு றைக்கிரங்கி, அப்பொழுதமுதெழும்படியருளளித்த வண்ணலே யைந்தெழுத்தான, அப்பனேகடம்பூரமுதகடேச வத்தனேயடிய னுக்கருளே. 34

35 பந்தணைநல்லூர் (பந்தநல்லூர்.)

இந்துவேணியனேயென்னையாள்பவனே யிணையிலாதேவகன்னி யர்கள், வந்தனத்துடனேவந்துபூசிக்க மாவரந்தந்துகாத்தவனே. பந்தனைமுலைசாம்பன்னிதோளியையோர் பாகமதிருத்தியபரனே, பந்தணைநல்லூர்ப்பசுபதீஸ்வரனே பாவியைப்பாதுகாப்பாயே. 35

36 கஞ்சனூர்.

தந்தியுரியானைத்தயாளுவான தற்பரனைச்சசியுலவுஞ்சடையு ளானை, அந்திவணத்தோனையழற்கண்ணினலங் கசனையனலாயெ ரித்தவழகுளானை, இந்திரனுமக்கினியுமயனுமார்க்கண் டேயனு மேத்தித்துதிக்குமெம்பிரானைக், கந்திருவருங்கண்டுகைகுவிக்குங் கஞ்சனூர்க்கண்ணுதலைக்கருதுவேனே. 36

37 திருக்கோடிகா (திருக்கோடிக்காவல்.)

ஈடிலாமூன்றுகோடி யிருடிகளேத்தும்பேயோ
டாடியநடனத்தானை யரியுரியணிந்திட்டானைப்
பாடியபத்தருக்குப் பரகதிபாலிப்போனைக்
கோடிகாவுறுங்கோமானைக் குறுகியேகும்பிட்டேனே. 37

38 திருமங்கலக்குடி.

மங்கைபங்கனை மன்னனிதிகளை
இங்குவந்தழித் திட்டவோரன்பனைப்
பங்கமின்றிகாப் பாற்றும்பரமனை
மங்கலக்குடி வாழ்வைவந்திப்பேனே. 38

39 திருப்பனந்தாள்.

தனந்தாநற்கனந்தாசங்கரனேநின்றாளைநிதஞ் சரணஞ்செய்தும்
இனந்தாமதந்தானேவேழையிலுமேழையனெந்தாயெந்தாய்
முனந்தாடகைக்காகமலர்மாலையணியதிரு முடிசாய்த்தோனே
பனந்தாட்டிருத்தாடகையீசப்பதியானே பணிகின்றேனே. 39

40 திருவாய்ப்பாடி.

தேப்பானமதிபுனையுஞ்சடையானைவிடையானைச் சிவபிரானைக், காய்ப்பானமரத்தானைக்கைக்காதகனியானைக் கருணையானை, வாய்ப்பாகவோரிடையன் கொடுவாளால்வெட்டுண்டு வெளிவந்தோனை, ஆய்ப்பாடிப்பாலுவந்த வண்ணலைக்கண்டென்குறையை யறைகுவேனே. 40

41 திருச்சேய்ஞலூர் (சேங்கனூர்.)

பண்ணாலுன்னைப்பாடிப்பதம் பணியாப்பாவியேனைக்
கண்ணாற்காணக்கண்கூசுமோ கருணைக்கடலானே
தண்ணார்மதிதவிழும்விரி சடையாகரியுடையா
திண்ணார்சேய்ஞலூராபல செல்வந்தருவாயே. 41

42 திருந்துதேவன்குடி (திருத்தேவன்குடி.)

இருந்திருந்துவாடுகிறேனேழையின்மே லென்னகுறையென்னபிழையென்னகோபம், வருந்துகிறேன்வானவர்நண்டசுவமேத்த வந்துவரந்தந்தவனேஎழுத்தொணாத, பெருந்தகையேபெருமு[illegible]லேபெருமைவாய்ந்த பேரின்பவாழ்வேயென்பிழைபொறுப்பாய், திருந்துதேவன்குடிக்கற்கடகநாதா செய்யமலரடியிணையைச் சிந்தித்தேனே. 42

43 திருவியலூர்.

அன்னையென்னப்பனண்ண னனுசனாண்டவனீயென்று
பன்னியதெல்லாம்வீணே பாரில்வேறுருண்டந்தோ
சென்னியையேறெடுத்துத் திருவியலூருளானே
என்னைநீகண்பார்த்தாளே காந்தவீஸ்வரனேபோற்றி. 43

44 கொட்டையூர்.

எட்டியெட்டியோடுகின்ற வென்றனெஞ்சமேயுனைத்
தொட்டெமன்பிடிக்குமுன் றுளிப்பால்வாயிலூற்றுமுன்
கட்டியேயழும்முனேசெங் கட்டையிற்கிடத்துமுன்
கொட்டையூர்க்கோடீசனைக் குதித்துகோருவாயரோ. 44

45 இன்னம்பர்.

ஆத்திசூடி யமர்ந்தவானந்தனைத்
தோத்திரத்தாற் றொடராதேதொல்வினை
எத்தியின்னம்ப ரெம்பிரானைத்தினம்
போற்றிப்போற்றிப்பூ ரிப்பாயென்னுள்ளமே. 45

46 திருப்புறம்பயம்.

அப்பணிந்தவனேயைம்முகத்தரசே யரியுரியணிந்தவற்புதனே
மூப்புரமெரித்தமும்மணிவிளக்கே மூவரின்முதன்மையானவனே
இப்புவியரவாலிறந்தவனச்சம் பந்தராலெழுப்பிவைத்தவனே
செப்புதற்கரிதாம்பூம்புறம்பயமார் தேவனேயென்றனக்கருளே.

47 விஜயமங்கை.

கண்ணேயென்கண்மணியே கற்பகமேகனிரசமே
பண்ணாரும்பார்க்குனற்கோர் பாசுபதந்தந்தவனே
எண்ணேன்வேறொருவரையும் ஏழையைநீகாத்தருள்வாய்
தண்ணாரும்மதிதவழ்வி ஜயமங்கைவாழ்பவனே. 47

48 திருவைகாவூர் (வில்வவனம்.)

அருவேயுருவேயருவுருவே யழியாப்பொருளேயாரமுதே
குருவேமருவேகுலக்கொழுந்தே குன்றேகொடியேன்குறைதீர்க்க
வருவாய்வருவாய்வானமுதே மறைமாமுதலேமணிவிளக்கே
திருவைகாவூர்வில்வவனத் தேவாவுன்றனடைக்கலமே. 48

49 வடகுரங்காடு (குரங்காடுதுறை.)

மறைமுதல்வனேயுனதுசமுகமதுநான்றேடி வந்துன்னைவாயா றவாழ்த்தினதுமறியேன், குறையகலமுன்னின்றுகும்பிட்டுமறியேன் கோயில்வலமாய்வந்துகுந்தினதுமறியேன், பிறையணிநின் பெருமையையான்பேசினதுமறியேன் பேயேனைப்பெருலகிற்பெற்றெடுத்ததேனோ, நறைகமிழும்வடகுரங்காடப்பனேயென் னாளுமினிநான்மறவேனம்புவாயே. 49

50 திருப்பழனம்,

இருப்பதுபொய்யிறப்பதுமெய்யென்றெண்ணிவீணாயேமாந்துபோயந்தோவந்தோவென்றாய், கருப்பகன்றிகலியுகத்தில்வந்தநாளாய்க் கலங்குகிறேன் மண்பெண்பொன்னாசையாலே, விருப்பமுடன்றிக்குப்பாலகர்பூசித்த வித்தகனேமிடியேனைபினியாளாயோ, திருப்பழனநகரானேதேவர்கோனே சேவடியைத்தேடி வந்துசேவித்தேனே. 50

51 திருவையாறு.

அருமறைக்கெட்டாதவற்புதனையப்பருக் காகச்சராசரமெலாம்
ஒருசததியுஞ்சிவனுமாகிநின்றவனையிங் குற்றசுந்தரமகிபனுக்
கிருகரையிரண்டோடுநதியிடையிலொருவழியை யேற்படுத்தியவி
சனைத், திருவையாறுற்றசெம்பொற்சோதிநாதனைக் சிந்தையிலி
ருத்துவேனே. 51

52 திருநெய்த்தானம் (தில்லைத்தானம்.)

மையார்சடைமுடியான்றிரு மாலாகியவிடையான்
துய்யாரரியுடையான்வாணி துதிகொள்சூலப்படையான்
நெய்யாடியநிமலன்றிரு நெய்த்தானத்தினமலன்
மெய்யாயெனையாட்கொண்டிடும் விவலனவன்றானே. 52

53 பெரும்புலியூர்.

அரும்பொருளானவுனைவணங்காத வறிவிலாதவர்களையடுத்து,
வரும்படியென்னைவைத்ததுமெதற்கோ மாதர்மோகத்தினால்வாடி,
இருந்திடத்தானோவில்லையேல்வேறே யெதற்கதையெடுத்துரை
யிதுவோ, பெரும்புலியூராவுனக்கழகலவுன் பேரருளினியெனக்
கருளே. 53

54 திருமழபாடி (திருமுல்லைவாடி.)

பார்த்தனாலடி பட்டேயவன்குறை
தீர்த்ததைப்போற் றிருவுளங்கொண்டொரு
கார்த்தபம்போற் கதறுங்கடையனைப்
பார்த்தருள்மழ பாடிப்பரமனே. 54

55 திருவழுவூர் (பழுவூர்)

மழுவோடுமானேந்துமதியுளானை மதமாவைமாய்த்ததனையு
ரித்திட்டானைத், தொழுவோரைத்தொல்வினையைத்துரத்துவோ
னைத் தம்பிமுகற்கொருசூதக்கனிதந்தோனை, அழுகாமற்சம்பந்
தர்க்கருட்பாலூட்டியாதரித்தவருந்தவநாயகிக்கொத்தோனை.வழு
வூரில்வந்தவீரட்டத்தானைமலரடியைமறவாமல்வணங்குவேனே.

56 கானூர்.

அண்டமுண்டமாயன் பணிந் தாடியவைம்முகனைத்
தொண்டர்களுக்குதவுங் கொன்றை சூடுஞ்சுகானந்தனை
அண்டர்புகழம்மைமுன் கன லாய்வந்துநின்றவனைக்
கண்டன்பாயென்மனமே திருக் கானூரனைப்பணியே,56

57 அன்பிலாலந்துறை,

குண்டலமணிந்தகாதன் கூற்றனையுதைத்தபாதன்
அண்டர்கோன்பணியுநாதன் அரியயனேத்தும்போதன்
தொண்டராரன்பிலாலந் துறையினிலமர்ந்தவேதன்
மண்டலமதிக்குந்தாளை வந்தனஞ்செய்வாய்நெஞ்சே, 57

58 மாந்துறை,

காந்தியாய்நின்றவீசா கண்ணுவர்க்கருள்விஸ்வேசா
ஏந்திழையார்மயக்க மெனுமலைகடலைவிட்டு
நீந்திமெய்க்கரையிலேறி நின்றிடமுடியாதென்னல்
மாந்துறைவாசாகண்பார் மலரடிவணங்கினேனே, 58

59 திருப்பாற்றுறை,

சதகோடியுயிரைத்தருந்தெய்வநீயெனச் சற்றுமறியாதமூட
ன், இதமாகநின்னடியிலொருநாளினும்விழுந் தேத்தித்தொழாத
மூடன், நிதமுனைமறந்துழலுநிர்மூடனுமென்னை நீபடைத்திட்ட
தேனோ, பதநிழலையினியாகிலுந்தரப்பார்திருப் பாற்றுறையமர்ந்
தபரனே. 59

60 திருவானைக்கா, (சம்புகேஸ்வரம்)

தண்ணார்மதிசெஞ் சடையாவிடையா
மண்ணாளரசன் மகிழ்தாரகலா
வெண்ணாவலுளா மிடியேன்றனையாள்
அண்ணாதிருவா னைக்காவரசே, 60

61 திருப்பைஞ்ஞீலி (லாடிகெடி,)

அத்தனேயரம்பைய ராதித்தரேத்துமுத்தனே
பித்தனேபினாகபாணி பேயோடாடுஞ்சித்தனே
எத்தனைவிதத்தினும்மெ டுத்துரைப்பேனுன்புகழ்
சித்தமில்லையோதிருப்பைஞ் ஞீலியாருஞ்செல்வனே, 61

62 திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி,)

மையுறுங்கண்டத்தானே மதகரியுரிபோர்த்தானே
பையரவத்தின்மீது பாதம்வைத்தருளுவோனே
வையகப்பாவியின்மேல் வஞ்சகஞ்செய்வதேது
ஐயனேயருள்வாய்பாச்சி லாச்சிராமத்துளானே, 62

53 ஈங்கோய்மலே (திருவிங்கிமலே,)

எரித்தானேயெதிரினிற்பூங்கணையெய்தானே யிறுமாப்பாயோடிவந்தகுஞ்சரத்தை, உரித்தானேயோதிமத்தையவுணனுக்க வொருவிரலேயூன்றியவனுருகிவாட,நெரித்தானேநிருமலனேநிகரிலானே நித்தியனேச்சத்தியனேப்புரநீறுகச், சிரித்தானேத்திருவீங்கோய்மலேயுளானேச் சேவடியைச்சிந்தித்துசேவிப்பேனே, 69

சோழநாடு - காவேரிக்கு வடகரை - முற்றிற்று,

2- சோழநாட்டில் காவேரிக்குத் தென்கரையிலுள்ளதலகங்ள் 127

இவைகளுக்கு விபரம்,

64 வாட்போக்கி (இரத்தினகிரி)

அந்தகனேக்காய்ந்தோனேயழகுளானே யமரர்களேயாதரித்தவன்புளானே, வந்துமன்னனுடைவாளாலுயிரைமாய்க்க மறுத்தானேமாமனுயிர்மாய்த்திட்டானேச். சந்திரனேத்தரித்தானேச்சகத்துக்கெல்லாந் தலேயானேமலேமகளேத்தழுவினனே, வந்தனேசெய்மைந்தனேயாட்கொள்ளவந்த வாட்போக்கியானேநிதம்வணங்குவேனே, 1

65 கடம்பந்துறை (கடம்பர்கோயில்,)

எந்தையேயெனதுகோவே யிணையிலாதேவரோடு
வந்தகண்ணுவருக்கன்மூேர் மரத்தினின்றருள்தந்தோனே
சந்ததமென்னேக்கண்பார் சங்கரிவாமத்தாரும்
சுந்தரனேகடம்பந் துறையுறைபவனேபோற்றி, 2

66 திருப்பராய்த்துறை (திருப்பளாத்துறை,)

சிற்பராபரை சேர்ந்தொளிர்செம்மலே
அற்பரானவ ரைப்பணியாமலே
நற்பராய்த்துறை நாடுந்தயாபரா
தற்பராவென்று தாள்துதித்தேனரோ, 3

67 கற்குடி (உய்யகொண்டான்மலே,)

நஞ்சையுண்டவனேயீழ நாட்டரசனேயாண்டோனே
குஞ்சரமுரித்தகோனே குன்றைவில்லாக்கினேனே
அஞ்சனுக்ஷிக்குகந்த வழகியவடிவுளானே
கஞ்சனேமாய்த்தோனேத்துங் கற்குடியானேபோற்றி, 4

68 மூக்கீச்சரம் (உறையூர்)

ஏவாயருளெழைக்கினி யீசாபரமேசா
வாவாஎனத்துதிமாயவன் மகனுக்கருளியவா
நாவாலுனைப்புகழவகை நாயேனறியேனே
மூவாமருந்தேவந்தருள் மூக்கீச்சரமுதல்வா, 5

69 திருச்சிராப்பள்ளி (திருச்சினாப்பள்ளி.)

சீராருஞ்செழுமணியைச்சிவந்தபாகைத் தெள்ளமுதைத்தித்திக்குந்தெவிட்டாத்தேனைத், தாராருமொருபத்தியாட்குச்சொந்தத் தாயைப்போல்வந்துமருத்துவம்பார்த்தோனைப், பாராருமுறையூரையாண்டுவந்த பதியழியமண்மாரிபெய்வித்தோனை, ஆராருமரியுரியானைத்திருச்சி ராப்பள்ளியானையடிவணங்குவேனே. 6

70 எறும்பியூர்.

எறும்பியையுரித்தணிந்த வெம்பெருமானேதேவர்
எறும்புருவாகவேவக் திணையடியேத்தப்பெற்ற
எறும்பீச்சுவரனேயிந்த வேழையைக்கடைக்கணோக்க
எறும்பியூரானேயுன்ற னிணையடியிறைஞ்சினேனே. 7

71 நெடுங்களம் (திருநெட்டாங்களம்.)

படுந்துயரகற்றப் பரமனேயுனக்குப் பாரமல்லாதுவேறுளதோ, கடுங்கொலைபுரியுங்கரவர்போலென்னைக்கருதிகைவிடுவதுமழகோ, சுடுங்கனலேந்துஞ்சுடர்விளக்கொளியே சுரர்தொழுந்துணையடிதுதித்தேன், நெடுங்களத்தோனே நித்யசுந்தரனே நின்னருளினியெனக்கருளே, 8

72 மேலைத்திருக்காட்டுப்பள்ளி.

ஆலைத்துரும்பதுபோலானேனாழ்கடனஞ்சை யாசித்தானே
வேலைத்துயின்றவனைவிடையாகக்கொண்டவனே விண்ணோர்கோ
மாலைத்தருங்குழலிவார்கொண்டமுலையழகி மகிழுந்தேனே [னே
மேலைத்திருக்காட்டுப்பள்ளியின்மேவும்பரனே வினைதீர்ப்பாயே. 9

73 ஆலம்பொழில்.

சூலப்படையா சோமச்சடையா
மாலம்பெனவாக் கியவல்லவனே
காலன்வருமுன் கண்பஞ்சடைமுன்
ஆலம்பொழிலாண் டவனேயருளே. 10

74 திருப்பூந்துருத்தி (திருப்பர்துருத்தி.)

பொன்னாரும்பூமானும்போதன்றானும் போயலைந்துங்காணாத புகழுளானை, மின்னாரும்வெண்பிறையைவேய்ந்திட்டானை மேருவைவில்லாய்வளைத்தவெற்றியானைத், தென்னாருஞ்சித்தசனைத்தீய்த்தினானைச் சிந்திப்போர்சித்தத்திற்செழிக்கின்றோனைப், பொன்னாருமேனியனைப்பூந்துருத்திப் புட்பவனநாதனைநான்பூசிப்பேனே.

75 கண்டியூர்.

அண்டினவர்க்கழியாதவருளளிக்குமாரமுதை யகிலந்தன்னைக் கிண்டினவனரும்புதல்வனைந்துசிரத்தினிலொன்றைக் கிள்ளியிந்த, எண்டிசையும்புகழ்வாய்ந்தவெம்பெருமானென்னுயிரா னெனையாண்டோனைக், கண்டியூர்வாழ்விரட்டத்துறையுங்கண்ணியனைக்கருதுவேனே. 12

76 சோற்றுத்துறை (திருச்சோத்துறை.)

மாற்றுயர்ந்தமணியை மலை மங்கையின்கண்மணியைப்
போற்றுவருக்கருளும் பூத நாதனைப்புண்ணியனைக்
கூற்றுவனையுதைத்த குணக் குன்றையென்றன்மனமே
சோற்றுத்துறையுறையுந் தொலை யாச்செல்வனைத்துதியே.

77 திருவேதிகுடி.

ஆதியைப்பாதிமதி யாடுமுடியானை
நீதியறியாதசிரு மூடனறிவானோ
ஓதியுணராதவெனை யுள்ளபடியாள
வேதிகுடிவேதபுரி வேளைமறவேனே. 41

78 தென்குடித்திட்டை (திட்டை)

பொன்பொடிபூத்தமேனிப் புனிதனையாதிசேடன்
பின்முடிவணங்கியேத்த வேண்டியவரந்தந்தோனை
என்குடிசெழிக்கவந்த வீசனையிமையோரேத்தும்
தென்குடித்திட்டையானைத் திருவடிபணிகின்றேனே. 15

79 புள்ளமங்கை.

அடித்தானையுரித்தானையமுதமாசித் தலைகடலைக்கடைந்தபொழுதாலந்தோன்றக், குடித்தானைக்கோரினவர்மனதையென்றுங் குடியாகக்கொண்டானைக்கொன்றைதும்பை, முடித்தானைமூவருக்குமுன்வந்தானை முனிவர்கண்மோனக்கடலில்மூழ்கவன்று, நடித்தானைத்திருப்புள்ளமங்கையானைநாடிமிகப்பாடிநமஸ்கரிக்கின்றேனே

80 சக்கரப்பள்ளி.

சக்கரத்தான்பின்வந்த தங்கையைத்தழுவினானைச்
சக்கரன்றவத்தில்வந்த சயந்தனஞ்சலிபெற்றானைச்
சக்கரத்தினிலுதித்த சசிதவிழ்சடையுளானைச்
சக்கரப்பள்ளியானைச் சந்ததஞ்சிந்திப்பேனே. 17

81 திருக்கருகாவூர் (திருக்களாவூர்.)

பொன்னிறம்போன்றதேகா பொங்கரவணிந்தவாகா
பன்னிருராசியோடு பங்கையன்பணிந்தயோகா
சென்னியில்வைக்கவுன்றாள் திருக்கருகாவூராவென்
முன்னினிவருவாயென்று முற்றுநானம்பினேனே. 18

82 திருப்பாலைத்துறை.

எத்தனையோவிதமாகத்துதித்துங்கேளா திருப்பதற்குன்னெஞ்சந்தானிரும்பென்பேனோ, இத்தரையிலிமையவரெண்கண்ணன்பாயிணையடியையேத்திடவின்னருளளித்த, சத்தியனேதாருகாவனத்துளோர்கடானனுப்பிவைத்தபுலிதனையுரித்த, வித்தகனே திருப்பாலைத் துறையில்வந்து விளையாடுபவனே யென் வினைதீர்ப்பாயே. 19

83 நல்லூர்.

குஞ்சிதபாதத்தானைக் குழையணிகின்றகோனைப்
பஞ்சவரோடுகண்ணன் பணிந்திடவருள்தந்தோனை
அஞ்சலிசெய்தஅப்பர்க் கடிமுடியினில்வைத்தோனை
நஞ்சதையுண்டநல்லூர் நாதனைநம்பினேனே. 20

84 ஆவூர்ப் பசுபதீச்சரம் (திருஆவூர்.)

காலனையுங்காமனையும் காய்ந்தொழித்தகண்ணுதலே
மாலயனுங்கண்டேத்தும் மங்களநாயகிமகிபா
பாலனைக்கண்பர்ராவூர்ப் பசுபதீச்சரமேவும்
நீலகண்டமாதேவா நின்னருள்தந்தாளுவையே. 21

85 திருச்சத்திமுற்றம்.

அன்னைநீயப்பனீயண்ணனீயனுசனீ யன்பானகுலதெய்வநீ
தன்னிகரிலாதசட்சமயமானவனுநீ சகலமுமறிந்தவனுநீ
முன்னமீஸ்வரியினால்முத்தமுற்றவனுநீ மூவர்க்குமுதல்வனீயே
என்னைவந்தாள்திருச்சத்திமுற்றத்துறையு மீசனேயிதுசமயமே.

86 பட்டீச்சரம்.

சங்கரனேபொங்கரவந் தாங்கியகங்காதரனே
தங்கமுத்துப்பந்தரொன்று சம்பந்தர்க்கீந்தவனே
இங்கெனக்குநீயருள வின்னமுனக்கேன்றடையோ
சங்கணிந்தோன்புகழ்பட்டீச் சரமமருந்தற்பரனே. 23

87 திருப்பழையாறைவடதளி (பழையாறை.)

குழையணியுங்காதோனேகொழுக்கொம்போனே கொடும்பத
கரான சமணரைக்கோமானால், கழுமரத்திலிட்டுச்சம்பந்தருக்குக்
காக்ஷிதந்தகற்பகமேகருணைவாழ்வே, எழுநரம்பைப்பூட்டியிசை
யாகப்பாட வீரைந்துதலையானுக்கருளீந்தோனே. பழையாறைவ
டதளியில்வந்தெழுந்த பசுபதியேபலசுகமும்பாலிப்பாயே. 24

88 திருவலஞ்சுழி.

அருவமாயுருவமாகி யாருயிராய்நின்றோனே
இருவகைப்பயனளிக்க வினியுனையல்லாமல்வே
றொருவரையர்சிப்பேனோ வுறுதியாய்நம்பிவந்தேன்
திருவலஞ்சுழியில்வாழுஞ் சிவபரம்பொருளேபோற்றி. 25

89 குடமூக்கு (கும்பகோணம்.)

கற்றவருண்ணுங்களியேகணுவில்லாச்செங் கரும்பேகற்கண் டேநற்கருணைவாழ்வே, பெற்றவன்னைதந்தைகுலதெய்வநீயே பேருலகில்யானுமொருபிள்ளையன்றோ, நற்றவமேநற்குணமேநவிலொணாத நவமணியேநரிபரியாக்கியநல்லோனே, குற்றமிலாக்குணக் குன்றே குடமூக்கானே கோரிவந்தகொள்கையைப்போற்கூட்டு வாயே. 26

90 குடந்தைக்கீழ்க்கோட்டம் (கும்பகோணம்,)

உருவாயருவா யுயிராயொளியாய்
மருவாய்மணியாய் வகைமெய்ப்பொருளாய்
குருவாய்குடந்தைக் கீழ்க்கோட்டரசாய்
வருவாயருள்வாய் வரம்யாவையுமே. 27

91 திருக்குடந்தைக்காரோணம் (கும்பகோணம்.)

அண்டிலேனின்ற னடியராசிடையை யல்லதுநின்னடிக்கன் பாய்த், தொண்டிலேதேனுஞ்செய்ததுண்டென்று சொல்வனோவு ன்றிருத்தளியைக், கண்டிலேனொருநாளேனுமிக்கடையேன் கதி பெறநனிமதியருள்வாய், பண்டிலேமிகுத்த திருக்குடந்தைக்கா ரோணமார்பசுபதிபரனே. 28

92 திருநாகேச்சுரம்.

வாருறுங்கொங்கை வல்லிமணாளனே
நீருறுங்கங்கை நீண்டசடையனே
நாருறுந்திரு நாகேச்சுரத்தனே
ஏருறும்புக ழேத்தித்துதிப்பேனே. 29

93 திருவிடை மருதூர் (மத்தியார்ச்சுனம்.)

பொன்போன்றமேனியனேபுரமெரித்த புண்ணியனேபூவுல கிற்புகழ்கொண்டோனே, மின்போன்றவரகுணதேவனையாண்ட ன்னேன் மெல்லியையுட்கொண்டமகாமேன்மையோனே, உன் போன்றபுகழுடையோரொருவரில்லை யுத்தமனேயிடமருதிலுற்ற தேனே, என்போன்ற பாவியிந்த வுலகிலுண்டோ வென்னரசே யினியேனுமெனையாள்வாயே. 30

94 தென்குரங்காடுதுறை (ஆடுதுறை.)

மன்குழைக்காதனேமணிமந்த்ரபோதனே மன்றுளாடியபாதனே
முன்குவலயத்தினிற்சுக்ரீபன்மிருகண்ட முனியிவர்க்கருள்நீதனே
என்குறையகற்றியிப்போதருளெவந்தையே யீதுனக்கழகாகுமே
தென்குரங்காடுதுறையாபத்சகாயனே சிறியனுக்கருள்புரிவையே.

95 திருநீலக்குடி (தென்னலங்குடி.)

பாலக்கலாநிதியைப் பண்பாய்முடித்தவனே
ஆலக்கரும்பாயென் னாவிமிகநையுதிதோ
சூலக்கரத்தானே சோரவிடாமற்படிக்கு
நீலக்குடியானே நின்னருள்தந்தாளுவையே. 32

96 வைகன்மாடக்கோயில்.

தண்டுழாயணிந்தவன் சதாதுதிக்கவந்தவன்
தொண்டுசெய்யுமன்பரைச் சுகத்திலாழ்த்தவல்லவன்
வண்டுலாவுஞ்சோலைசூழும் வைகன்மாடக்கோயிலான்
கண்டுகாக்ஷியைக்கொடுக்குங் காலமெந்தக்காலமோ. 33

97 திருநல்லம் (கோனேரிராஜபுரம்.)

கல்லடிதனையும்பட்டு கனத்தவில்லடியும்பட்டு
சொல்லருங்காக்ஷிதந்த சுகுணனேநாயேன்செய்த
அல்லலையறுக்கவின்ன மகமயங்கிடுவதென்னே
நல்லமாநகருளானே நம்பினேனம்பினேனே. 34

98 திருக்கோழம்பம் (திருக்கொழம்பியம்)

குன்றைவில்லாகக் கொண்டவனாதியை
மன்றைநாடிவந் தாடியவள்ளலைக்
கொன்றைசூடியைக் கோழம்பவாசியை
என்றைக்குந்துதிப் பேனிடரேகவே. 35

99 திருவாவடுதுறை (திருவாடுதுறை,)

நாதாநான்மாமறைக்குமெட்டாதோங்கு நவமணியேநாயே
ன்கண்மணியேயுன்னை, ஆதாரமாயடுத்தசம்பந்தர்க்கன் றாயிரம்
பொன்னளித்தவாண்டவனீயன்றோ, பாதாரமேகதியென்றஞ்சலி
க்கும் பாவியைப்போற்பாரிலுண்டோவின்னமென்மேல், வாதா
வாவடுதுறையில்வந்தமர்ந்த மாசிலாமணியீசாவரமீவாயே. 36

100 திருத்துருத்தி (குற்றாலம்.)

ஐந்துமுகத்தோனை முகிழாம்பிகையினுருயிரை யன்பாய்வந்த, சுந்தரனேயைத்தொலைத்த சுத்தசுயஞ்சோதியைநற் சுடர்விளக்கை, நந்திபகவானையொருநால்வேதங்கடந்தானை நாயேன்கொண்டு, சிந்தைகலிதீர்ப்பவனைத் திருத்துருத்தி வாழ்பவனைச் சேவிப்பேனே. 37

101 திருவழுந்தூர் (தேரழுந்தூர்.)

அருவமாயிருந் தாடுமரனைநல்
உருவமானசு வுந்தரியுத்தமி
மருவவந்தமா சில்லாமகேசனைத்
திருவழுந்தூரா னைச்சேவிப்பேனரோ. 38

102 திருமயிலாடுதுறை (மாயவரம்.)

கலைமகளுந்திருமகளுங்கஞ்சனுஞ்செங் கண்ணனுங்கண்ணுவனுங்கைதொழப்பெற்றானைத், தலைகளையாபரணமெனத்தரித்திட்டானைத் தமரகத்தையொருகரத்திற்றாங்கினானை,நிலைதவறுதம்பிணைகேதாரமாகி நின்றுதுதித்திடமகிழுநீதியானை,மலைசிலையாகப்பிடித்தவலியுளானை மயிலாடுதுறையானைவாழ்த்தாய்நெஞ்சே. 39

103 விளநகர்.

பதியேகிர்பாநிதியேமரைப் பாதாவரந்தாதா
கதிவேறேதுகருணாகர னேகாவிரிநதியில்
மதியுந்தடுமாறமறை யவனுக்கருள்புரிந்தந்
நதியில்துறைகாட்டும்விள நகரானேநீயருளே. 49

104 திருப்பறியலூர் (பரசலூர்.)

அக்கரவணிந்ததேவா வருமறையோதுநாவா
தக்கனைத்தலையைக்கொய்த சங்கரமகாநுபாவா
இக்கணம்வீரட்டத்தா னேயெனையாளவேயென்
பக்கநீவந்திருப்பாய் பறியலூரானேபோற்றி. 41

105 திருச்செம்பொன்பள்ளி (செம்பொனார்கோயில்.)

மதகரியுரிபோர்த்தானே மால்விடையூர்தியானே,
இதமுடன்குபேரனிந்த்ர னேத்தியபாதத்தானே
உதவிவேறொருவரில்லை யுனையலாலகையாலுன்
பதமெனக்கருள்வாய்செம்பொன் பள்ளியிலமர்ந்ததேவே. 42

106 திருநனிபள்ளி (புஞ்சை.)

நாதனேயெழி ஞன்மறைவேதனே
சீதளமதி சேருஞ்சடையனே
ஓதரும்புக ழோங்குங்குணளனே
பாதமீநனி பள்ளியூரீசனே. 43

107 திருவலம்புரம் (பெரும்பள்ளம்.)

உலகெலாந் துதிக்கப்பெற்ற வொருதனிமுதல்வனேயைம்
புலனையுமொடுக்கிவைத்து போற்றியதிருமாலுக்கு
வலம்புரிசங்களித்த வள்ளலேவழுத்தொணுத
வலம்புரத்தமர்ந்தவாழ்வே மலரடிபோற்றிபோற்றி. 44

108 தலைச்சங்காடு.

நிருத்தனஞ்செய்யவல்ல நிமலனேநெடியோனுக்கு
பருத்தவோர்பாஞ்சசன்யம் பண்புடன்பாலித்தோனே
ஒருத்தராதரவுமில்லை யுன்னையல்லாமல்வேறு
திருத்தலைச்சங்காட்டீசா சேவடிதந்தாள்வாயே. 45

109 திருவாக்கூர்த்தான்றேன்றிமாடம் (ஆக்கூர்.)

மான்மழுவேந்துவோனே மாதவர்க்கினியதேனே
வான்பதியானவிந்த்ரன் வணங்கவேவரந்தந்தோனே
மீன்விழியணிந்திட்டோனே விரிசடையானேயாக்கூர்த்
தான்றேன்றிமாடத்தானே சந்ததந்துதிசெய்தேனே. 46

110 திருக்கடவூர் (திருக்கடையூர்.)

ஜடமெடுத்துமுன்புகழைச்சாற்றிமோக்ஷ சாகரத்தையடையாமற்சகத்திலந்தோ, மடமையினல்மாதர்மயக்கத்திலமூழ்கி மதிமயங்குவதைநீக்கிவைக்கொணுதோ, படபடப்பாய்வந்தமரலியையுதைத்துப் பாலகனைப்பாதுகாத்தவனீயன்றோ, கடவூரில்வாழ்வீரட்டத்தானேநின் கண்குளிரவந்தெனதுகலிதீர்ப்பாயே. 47

111 திருக்கடவூர்மயானம் (திருமெஞ்ஞானம்.)

ஆர்மலர்த்தொடை யார்பரமேசனே
நீர்மதிபுனை நித்தியனேக்கட-
வூர்மயானத் துறைபவனேநிதம்
சீர்மரைப்பதஞ் சேவிப்பேனையரோ. 48

112 திருவேட்டக்குடி.

பொடியாருமேனியனைப் புரமெரித்த புண்ணியனைக் கண்ணி யனைப் புகலொணுத, அடியாருக் கடியவனைத்தவமிருந்த வர்ச்சு னனுக்கெதிரில்வந்தின் னருள்புரிந்து, கொடியாரும் வேடுவனுய் மற்றன்னேனைக் கிட்டியுத்தஞ் செய்தவனைச் சிவனைவேட்டக், குடியானைத் திருமேனி யழகுளானைக் குறையகற்றி யருள்கொடு க்கக் கோரினேனே. 49

113 தெளிச்சேரி (கோயிற்பத்து)

அத்தியுரியைத்தரித்த வழகுளானை யர்ச்சுனனுல் வில்லடிப ட்டன்னேன்செய்த, பத்திக்குப் பாசுபதாஸ் திரந் தந்தோனைப் பாரினிற்புத் தரைச்சைவராக்கிவைத்த, சத்தியசம்பந்தரினுற்பா டப்பெற்ற சங்கரனை யைங்கரனைத்தந்திட்டானைச், சித்திதருஞ் சத்தியையோர் பாகத்தானைத் தெளிச்சேரியானைநிதஞ் சேவிப் பேனே. 50

114 தருமபுரம்.

அருமறைக்கெட்டாதவனை யாலாலமுண்டவனைத்
தருமனும்பங்கேருகனுந் தாம்பணியப்பெற்றவனைத்
திருமகட்கன் பானவனைச் சேவாகக் கொண்டவனைத்
தருமபுரத் தானையிரு தாள்மலர்பூசித்தனனே. 51

115 திருநள்ளாறு.

அண்ணுவே யருள்பொழியு மமுதமேயென் னுண்டவனே யரியசுகானந்தவாழ்வே, தண்ணுருமதிபணிந்த சடையனேநின் ருளைமறவாத சம்பந்தமூர்த்தி, விண்ணுடுபுகழத் தீயிட்டவேடு வேகாமற்செய்துவைத்த விமலனன்றே, கண்ணுன நள்ளாறுவந் தெழுந்த கண்ணுதலே கடையேனைக்காத்தாள்வாயே. 52

116 கோட்டாறு (திருக்கொட்டாறம்)

இந்திரன் வெள்ளையானை யிணையடி தொழப்பெற்ருனே
சந்தனை யளித்திட்டோனே கனியினின் ருெழுந்தேனே
நந்திவாகனனே வந்த நகுதலை முடித்த கோனே
இந்துவேணியனே கோட்டாற் றீசனே யெனையாள்வாயே.

117 திருவம்பர்பெருந்திருக்கோயில் (அம்பல்கீழ்க்கோயில்)

எம்பெருமானேயுன்னையல்லாமல்வேறுதுணை யில்லையில்லை
நம்பிவந்தநாயேனை நட்டாற்றில்விடவுனக்கு ஞாயந்தானோ
உம்பர்மனதுக்கேற்றவுத்தமனே யுனைப்பாடியோடிவந்தேன் [யே.
அம்பர்பெருந்திருக்கோயில்வாழ்பவனேயடியேனுக்கருள்செய்வா

118 திருவம்பர்மாகாளம் (திருமாளம்)

சீரிலகுஞ்செங்கனியே செம்பாகேயென் சிந்தையினில்வந்து தித்திக்குந்தேனே, ஆரிலகுஞ்சோமாசிமாறநாய னார்யாகத்தினிற் புலயனாகச்சென்று, பேரிலகுமவிப்பாகம் வாங்கிவந்த பெருமானே மாகாளன்றுதிபெற்றோனே, வாரிலகுமாதேவிமருவுமம்பர் மாகாளமணியேநீ வந்தாள்வாயே. 55

119 திருமீயச்சூர் (பேராளம்)

காயுங்கனலேந் தியசங்கரனே
மாயப்பிரபஞ் சமயக்கமதால்
ஆயப்புவிமே லலையத்தகுமோ
மீயச்சூர்மே வியவித்தகனே. 56

120 மீயச்சூரிளங்கோயில் (பேராளம்)

பூவாரிறைபோற் றியபுண்ணியனே
காவாய்கருணா கரனேவரநீ
ஈவாய்மீயச் சூரிளங்கோயில்
தேவாநின்சேவடிநம்பினனே. 57

121 திலதைப்பதி (மதிமுத்தம்)

நிலவுலாவியநீண்டசடையனேயுன்னையா னினையாதவேளை யுண்டோ, உலைவாயிலிடுமெழுகு போலுருகநீதியோ வோதரிய தசரதற்குச், சிலையுறு மிராமலட்மணர்திலதருப்பணஞ் செய்திடப்பெற்றசிவமே, திலதைப்பதிக் கரசனாய்வந்த தெய்வமே சிறியனுக்கருள் புரிவையே. 58

122 திருப்பாம்புரம்.

என்னுயிர்க்குயிராயெனதுகண்மணியா யேழையையன்புடனின்ற, அன்னைதந்தையுமா யறிவினுக்கறிவாயமைந்தவெம் பரமனாய்வந்த, உன்னையல்லாமல் வேறொருவரையென் னுள்ளமேத்தாதொருபொழுதும், பொன்னடிநிழலைத் தாவருள்புரிபாம் புரமதிலமர்ந்த புண்ணியனே. 59

123 சிறுகுடி.

நான்படுந்துன்பநீயலாலறிய ஞாலமீதெவர்கள்வேறுண்டு [கக்
மான்மழுவேந்தும்வள்ளலேயென்றன் வல்வினையாவையுமொழிக்
க[illegible]ன்பிறையணிந்தகொற்றவனேயென்குலதருவேயினியருள்வாய்
தேன்மலியும்பூஞ்சோலைசூழ்ந்தொளிருஞ் சிறுகுடிமேவியசிவமே.

124 திருவீழிமிழலை.

குருவேயெண்குணனேயென் குறையைத்தீர்க்கக் குவலயத்திற்குலதெய்வமாய்வந்தோனே, பொருமானைவென்றவன்றன் கண்ணைக்கொண்டு பூசிக்கச்சக்கரந்தந்தாட்கொண்டோனே, மருவாருமப்பர்சம்பந்தர்பஞ்சம் வந்தலைப்பப்படிக்காசை வைத்திட்டோனே, திருவீழிமிழலையுறுஞ்செந்தேனேநின் சேவடியைத்தேடிவந்தேனருள்செய்வாயே. 61

125 வன்னியூர்.

கன்னியைப்பங்கில்வைத்தாய் கங்கையைச்சிரசில்வைத்தாய்
தன்னிகரில்லாதுன்றன் றாளையென்றலையில்வைக்க
உன்னியோசிப்பதேனோ வுன்றனக்கடிமையன்றோ
வன்னியூர்வாழுந்தேவே வந்தெனக்கருள்செய்வாயே. 62

126 கருவிலி.

ஆயிரங்கண்ணனும்மற் றமரருமஞ்சலிக்கத்
தாயினுஞ்சிறந்துவந்து சாற்றியவரந்தந்தாயே
நாயினுங்கடையேனென்னை நற்கருவிலியூரானே
நீயினியாதரிக்க நின்னடிபோற்றினேனே. 63

127 பேணுபெருந்துறை (திருப்பந்துறை)

வேணுகோபாலனளித்தபூவாளியை விழியாலெரித்தவனே
நாணுதேயென்மனநாயகனேயுனை நான்மறவேன்மறவேன்
தாணுவேயிங்குதயங்கிமயங்கித் தவிக்கவுனக்கழகோ
பேணுபெருந்துறைமேவுமகேசனே பேதையைக்காத்தருளே.

128 திருநறையூர்.

மறையோதியவாயாமலை மகளுக்கொருநேயா
பிறைசூடியபெருமானேயிப் பேதைக்கருளாயா
குறையேனுனக்கின்னந்துணக் குன்றேகோரிவந்தேன்
நறையூர்ச்சித்தநாதாநீயெங் நாளுங்கைவிடாதே. 65

129 அரிசிற்கரைப்புத்தூர் (அழகார்புத்தூர்)

நரியைப்பரியாக்குஞ்சக நாதாமலர்ப்பாதா
கரியைக்கடிந்தவனேகடைக் கண்ணுற்பார்க்கொணுதா
அரியைக்கொன்றதின்கொம்பை யணிந்தோயுனக்கபயம்
அரிசிற்கரைப்புத்தூரர சேநீயருள்வாயே. 66

130 சிவபுரம்.

ஆதியேயரனேயைம்முகத்தரசே யடிமுடிதேடியுங்காணுச் [னே
சோதியேசுடரேதொன்மறைப்பொருளே சுரரனுதினந்தொழுபவ
ஓதியேயுணராதுலகினிலென்போ லொருவருமிலையிலையிலையே
நீதியேயெனையாண்டிடசிவபுரமார் நிருமல னேயிதைநினையே. 67

131 கலையநல்லூர் (சாக்கோட்டை.)

மலையையொருசிலையெனச்செய்தவல்லாளனை மகேசனைமகாதேவனைத், தலைமாலையாகத்தரித்தசங்கரனைச் சதாசிவனெனுந்தாணுவை, அலைகடலில்வந்தவமுதுண்டவாதித்தரஞ் சலிசெயப்பெற்றவரனைக், கலையநல் லூரினி லமர்ந்தகரு ணாகரக் கடவுளைக்கண்டுய்வனே. 68

132 கருக்குடி (வலங்கிமான்.)

அற்புதனேபொற்பதனே யாடியசெஞ்சடையானே
சற்குணலிங்கேஸ்வரனே சர்வாலங்காரிமகிழ்
தற்பரனேதமியனைநீ தற்காக்கமனமிலையோ
கற்பகநேருங்கரனே கருக்குடியானேயருளே. 69

133 திருவாஞ்சியம்.

வெந்தவெண்பொடி மேனியனேமிகு
கந்தமார்நாகக் கன்னியையுட்கொள
வந்தநற்றிரு வாஞ்சியவள்ளலே
எந்தவேளையும் வந்தெனைக்காத்திடே. 70

134 திருநன்னிலத்துப்பெருங்கோயில் (நன்னிலம்.)

பன்னிமுடியாதபுகழ்வாய்ந்தவுன்னைப் பலநாளுமறவாமற்பத்திசெய்தும், அன்னியரைப்போலிருக்கவடியேன்செய்த வன்னீதமென்னவதையறையொணுதோ, உன்னியுன்னியான்பட்டதுன்பமெல்லா மொன்றிரண்டென்றலன்றேவுரைப்பேனப்பா, நன்னிலத்துப்பெருங்கோயில்மேவிவாழு நாதாநீயினியேனுநயந்தாள்வாயே. 71

135 திருக்கொண்டீச்சரம்.

ஓயாமலுன்புகழைப்பாடிப்பாடி யோடிவந்துமொருவழியுங் காணேனந்தோ, ஈயாதலோபியரைப்போயடுக்க வென்மனமொப் பாதொப்பாதாகையாலென், தாயாகவின்னியேனும்வந்தெனக்குத் த ந்தருள்வாய்சகலவிதசெல்வமெல்லாம், தீயாருங்கையானேதேவ ரேத்துந் திருக்கொண்டீச்சரமமருந்தேவதேவே. 72

136 திருப்பனையூர்.

உனையான்மறவே னொருநாளினுமே
எனைநீநினையா ததுவென்வினையோ
அனையாகியவம் பிகைமேரகனும்
பனையூரரசே பதமீய்குவையே. 73

137 திருவிற்குடி.

மாதவத்தால்மானிடதேகத்தைப்பெற்று வந்துதித்துமண் பெண்பொன்னாசையாலே, பாதகனாகியநாயேன்பரதவித்தால் பத விபெறநானுன்னைப்பஜிப்பதென்றோ, பூதலத்தினிற்சலந்திராசுர ன்றன் புன்றலையைப்போக்கடித்தபுண்யவானே, ஓதரியவிற்குடி வீரட்டத்தானே யுன்னடியைத்தந்தெனைநீயுகந்தாள்வாயே. 74

138 திருப்புகலூர்.

கருதரியகற்பகமேகருணைவாழ்வே கைக்காதகனிரசமேகலந் தபாகே, வருமப்பரைச்சிங்கரூபமாக மருவிமலர்ப்பாதத்திற்சேர் த்திட்டோனே, திருமருவுந்தேசிகனேசுந்தரர்க்குச் செங்கல்லைப் பொன்னாக்கித்தந்ததேனே, ஒருவழியுமில்லைதிருப் புகலூரானே யுன்னாணையினியென்னையுகந்தாள்வாயே. 75

139 திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்.

ஆத்திமலரணிகின்றவத்தனேயன்பர்களை யாதரித்தாயென்னைநீ, மாத்திரங்கைவிட்டதேன்கொடியபாவியோ வஞ்சக மூனக்கேனு னைத், தோத்திரஞ்செய்யாதிருக்கதுண்டோவினஞ் சோதித்துவரு வதழகோ, ஏத்தினேன்பூம்புகலூர்வர்த்தமானீச்சரத் திறைவனே யினியாள்வையே. 76

140 திருக்கண்ணபுரம் (இராமனதீச்சரம்.)

கண்ணுதலேகொன்றை தும்பை கங்கையணிந்தவனே
கண்ணைக்கொண்டர்ச்சித்தோனும் மிருகண்டனுமார்க்கண்டனும்
கண்ணுவனுங்கைதொழ நல்ல காக்ஷியளித்தவனே
கண்ணபுரத்தரசே யென்னைக் காக்கக்கடனிலையோ. 77

141 திருப்பயற்றூர் (பயத்தங்குடி.)

பதஞ்சலிவியாக்ரபாதர் பணிந்திடும்பாதத்தானே
நிதந்துதித்திடுநாயேனை நீயருளாதிருக்கும்
விதந்தெரியாமலந்தோ விழிக்கிறேன்றயைகூர்ந்துன்றன்
பதந்தருவாய்பயற்றூர் பரமனேபோற்றிபோற்றி. 78

142 திருச்செங்காடு.

அயனைந்துசிரசினிலொன் றழித்திட்டானே யன்பாகச்சென்றுசிறுத்தொண்டன்சேயை, உயிரோடறுக்கச்செய் தவன்மெய்யன்பை யுலகிலெவரும் புகழவருள்தந்தானைக், கயமுகசூரனைக்காயக்கருணையோடு கணபதியைக்கண்பூத்தகண்யவானை, முயலகனை மிதித்ததிருச்செங்காட்டானை முழுமனதாயஞ்சலிக்க முயலுவேனே. 79

143 திருமருகல்.

பூவிலென்போலொத்தபாவியெங்துண்டுண்டு பொய்யுரைப்பதுவேதொழில், தாவிமட வார்களிரு தாளில்விழு வதுதொழில் தானென்றமதமேதொழில், கூவியுனதன்பரைக் கொடுமைசெய்வதுதொழில் கொலைகளவு செய்வதுதொழில், ஆவியிவ்வாறலைய ஞாயமோமருகல்வா ழண்ணலேயருள்புரிவையே. 80

144 திருச்சாத்தமங்கைஅயவந்தி (சியாத்தமங்கை.)

கயல்விழியுமையாட்கேற்ற கருணைவாரிதியேபோற்றி
முயலகன்றனைமிதித்த முக்கணாயகனேபோற்றி
இயமனைவிழவுதைத்த வீசனேசாத்தமங்கை
அயவந்தியினிலமர்ந்த வப்பனேயருள்செய்வாயே. 81

145 நாகைக்காரோணம் (நாகப்பட்டணம்)

நாகபூஷணனேநான்மறைப்பொருளே நரிபரியாக்கிவைத்தவனே
ஏகவைபோகவீசனேயுன்னை யேத்தியசுந்தரர்க்கன்று
வேகமாகியபரிசுரிகையீந்தவனே விண்ணவர்க்கினியநேத்திரனே
யோகநாயகனேயோங்குநாகைக்கா ரோணனேயுன்னைநம்பினனே.

146 சிக்கல்.

அக்கரவணிந்தவைம்முகத்தரசே யடியராசிக்குமாரமுதே
தக்கனைமாய்த்தமுக்கணனேயுன் றனையேநம்பினேன்சதமாய்
இக்கணம்வந்தென்னிடரொழித்திடுதற் கின்னமுந்தாமதமேனோ
சிக்கலூரானேதிக்கிலாதலையுஞ் சிறியனைக்காப்பதுன்கடனே. 83

147 கீழ்வேளூர் (கீவளூர்)

குலதெய்வமேயெனது குறையொன்றிரண்டல்ல கோடான கோடிகோடி, பலதலமெலாந் திரிந்தோடியுனைநாடியுன் பதமதைத்தேடிவந்தேன், வலதுதிருவடிதரிசனங் குறுமுனிக்கீந்த வள்ளலேயவ்வடியையென், தலைதனிற்சூட்டகீழ்வேளூரில் வாழ்ந்திடுந் தற்பராவிதுசமயமே. 84

148 தேவூர்.

பாவகியையீன்றவனைப் பாதமறவேனே
ஆவலுடனேயவனை யஞ்சலிசெய்வேனே
நாவலர்கொண்டாடுநக ராகியதேவூர்வாழ்
தேவகுருநாதனையென் சிந்தையில்வைப்பேனே. 85

149 பள்ளியின் முக்கூடல் (அரியான்பள்ளி.)

ஒள்ளியசூலத்தானை யொருமதிவேணியானைத்
துள்ளியமான்கையானைச் சுடர்மழுவாளியானை
வள்ளியைச்சிறையெடுத்த வனையளித்தவனைமன்னும்
பள்ளியின்முக்கூடல்வாழ் பரமனைப்பணிவாய்நெஞ்சே. 86

150 திருவாரூர் (திருவாலூர்.)

கற்றவருண்ணுங்கனியைக்கலைமானேந்துங் கையானைக்கள்ளி தழித்தொடைபூண்டானைப், புற்றதனில்வந்தமர்ந்தபுண்ணியவானைப் போனவலக்கண்சுந்தரர்க்கீந்தானை, நற்றவத்தால்வந்தமனுச்சோழனீதி நானிலத்தினிலைநாட்டிவைத்திட்டானைச். சத்தவிடங்கத்தொன்றுமாரூரானைச் சந்ததமுமென்மனமேசாருவாயே. 87

151 திருவாரூரறநெறி (திருவாலூர்.)

மறலியைமாய்த்திட்டானை மான்மழுவேந்துவானைத்
துறவிகட்கருள்தந்தானைச் சுவேதவாகனன்முன்பாக
குறவனைப்போல்நின்றானைக் கோதிலாதோங்குமாரூர்
அறநெறியினில்வாழ்வோனை யனுதினந்துதிசெய்வேனே .88

152 திருவாரூர்ப்பரவையுண்மண்டளி (திருவாலூர்,)

அரவையாபரணமாக வாவலாயணிந்திட்டோனே
பரவைசூழுலகமெல்லாம் படைத்தவெம்பெருமானேயுன்
வரவையானெதிர்பார்க்கின்றேன் மனமினமிலையோ ஆரூர்ப்
பரவையுண்மண்டளித்தற் பரமனேபார்த்தாள்வாயே. 89

153 திருவிளமர் (விளமல்)

இளநிலாவணிந் தோனேயிவ்வேழைமேல்
உளமிரங்காத தென்கொலோவுண்மையாய்த்
தளருகின்றேன் றயைசெய்குவாய்திரு
விளமரில்விளை யாடும்விமலனே. 90

154 கரவீரம் (கரயபுரம்)

அத்தனைம்முக னாலத்தையுண்டவன்
பித்தன்பேயுட னாடியபிஞ்ஞகன்
கத்தன்பூங்கர வீரகங்காதரன்
சுத்தநற்கழ லைக்துதிப்பேனரோ. 91

155 பெருவேளூர் (காட்டுணாரயன்பேட்டை)

கோதைமின்னனையாள்நாதா குமரனைப்பூத்தநீதா
சீதையையெடுத்தோன் றோள்கள் சிதரிடநெரித்தபாதா
தாதையென்றெண்ணிவந்தேன் றயைபுரிந்திந்தவேளை
பேதையைப்பெருவேளூரா பிழைபொறுத்தாளுவாயே. 92

156 தலையாலங்காடு.

விருத்தமதிமுகத்துமைநாயகனைவிண்டு விடையானைச்சடையானைவெறித்துவந்த, கருத்தமுயலகனைமிதித்தாட்கொண்டானைக் காளியுடனொருகாலா லாடினானைப், பருத்தகரியுடையானைப் பகரொணாதபங்கயத்தோன் சிரசிலொன்றைப்பரித்திட்டானைத், திருத்தலையாலங் காட்டுச் சிவபிரானைச், சேவடியை யெத்தினமுஞ் சேவிப்பேனே. 93

157 குடவாயில் (குடவாசல்.)

தோடுடையதொன்முதலே சோதனையாகாதுசுடு
காடுடையகண்ணுதலே கற்பகத்தோனேயிருளிக்
கோடுடையகொற்றவனே குடவாயிலென்னுமொரு
நாடுடையநாயகனே நாயேனைக்காத்தருளே. 94

158 திருச்சேறை (உடையார்கோயில்.)

வெண்பொடிமேனியானே வெந்தணலேந்துவோனே
தண்மதிவேணியானே தலைகளைத்தரித்திட்டோனே
திண்டிவைவிடையாய்க்கொண்ட விமலனே திருச்சேரைக்கோர்
கண்மணியாய்வந்தோனே கடையனைக்காத்தாள்வாயே. 95

159 நாலூர்மயானம் (நாத்தூர்.)

கூனியமதியுளானே குஞ்சரமுரிபோர்த்தானே
நானிலம்புகழுவோனே நகுதலையணிந்திட்டோனே
நானினிமறப்பதேது நாலூர்மயானத்தானே
பூநிகரடியெப்போதும் போற்றினேன்புரந்தாள்வாயே. 96

160 கடுவாய்க்கரைப்புத்தூர் (ஆண்டாங்கோயில்.)

சுடுதீயணிந்தகையா சுருதிகளேத்துந்துய்யா
கடுவினையுண்டமெய்யா கவலையையொழிப்பாயையா
கடுவாய்க்கரைப்புத்தூரா கருணைவைத்தினிமேலேனும்
விடுவாய்கடுஞ்சினத்தை மெல்லடிபோற்றிபோற்றி. 97

161 இரும்பூளை (ஆலங்குடி.)

அரும்பாவியெனைப்போலுண்டோ வமலாசுத்தநிமலா
இரும்போமனமறியேனிதை யீசாபரமேசா
வரும்பாவிக்கினிவேறொரு வழியுங்காண்கிலேனே
இரும்பூளையிலெழுந்தோனேநீ யினியாகிலுமருளே. 98

162 அரதைப்பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்.)

உரகருண்டலமகிபனேயுனக்கேதே துரைத்துமனமுருகவிலையோ, பரமபதனொருபன்றியாயிரணியாக்கனைப் பாரிற்கிழிக்கவதனுல், உரமதிகரித்திடரியற்றவிருகொம்பையு மொடித்தணிந்தொளிர்மார்பனே, அரதைப்பெரும்பாழியம்பதித்தலைவனே யருள்புரியவிதுசமயமே. 99

163 அவளிவணல்லூர்.

திடமாக மலைவில்லு மாலம்பு மாகமுன் றிரிபுரமழித்தவுன்முன், படபடப் பாய்வந்த நமனுயிரை மாய்த்துசிறு பாலனைகாக்கவிலையோ, இடபவா கனரூட னுய்வந் தெனக்குநீ யினியகண்காக்ஷிதருவாய், தடமோங்கு மவளிவணல் லூர்க்கரச னேயுனைச்சந்ததமு நம்பினேனே. 100

164 பரிதிநியமம் (பருத்தியப்பர்கோயில்.)

அகரமுதலாயிருப்பதுபோல நீமுதல்வனானவாண்டவனல்லவோ, தகரதிலெழுந்து விளையாடு மறுமுகனையுந் தந்திமுகனையுமீன்றவா, சிகரமதெடுத்தகாலைந்துகர முடையோன் றிடுக்கிடநெரித்ததாளா, பகரரிய பரிதிநிய மத்தலைவனேயெனைப் பார்ப்பதுன் பாரமாமே. 101

165 வெண்ணியூர் (கோயில்வெண்ணி.)

பண்ணினுலுன்னைப் பாடியும்பாவியை
எண்ணிடாம லிருப்பதுமென்கொலோ
வெண்ணியூரானே மெல்லடியல்லாது
மண்ணில்மற்றிலை வந்தருள்வாயரோ. 102

166 பூவனூர்

தேவதேவனே தேவிக்குகந்தோனே
பாவநாச பராபரவஸ்துவே
ஆவலாயுன்னை யண்டினேனண்டினேன்
பூவனூரானே பொற்பதமீவையே. 103

167 பாதாளீச்சரம் (பாமுனை.)

நாதாகாரணனுன்முகனேத்திய
பாதாயான்பெரும் பாவியிலும்பாவி
பாதாளீச்சரப் பாண்டரங்காதுயர்
போதாதாநீயிப் போதருள்செய்வையே. 104

168 திருக்களர்.

ஆதியாய்நடுவாயந்தமாய்நிறைந்த வாண்டவனீ யெனவறிந்தும்
நீதியாயுன்னைத்தோத்திரஞ்செய்தும் நீயருளாதிருந்தாலுன்
வாதியாநடனதரிசனந்தூரு வாசகர்க்கருளியமணியே
ஜோதியாயொளிருந்திருக்களரானே துணையடிநிழலெனக்கருளே.

169 சிற்றேமம் (எழிலூர்நேமம்.)

அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்த்ர மளித்தவா னந்தனே நானுன், திருச்சமுகத்தை நாடியென்குறையைச் செந்தமிழ்ப் பாவெனு மலரால், அருச்சனைசெய்துமுன்மனமிரங்கா ததவுமுன் றிருவருட் கழலோ, திருச்சிற் றேமத் திறைவனே யெனக்குன் றிருவடி தந்தருள்வாயே. 106

170 திருவுசாத்தானம் (கோயிலூர்.)

கந்தனைக்கண்பூத்தோனே கனியினின்றொழுகுந்தேனே
அந்திசந்தியிலுமுன்னை யாவலாய்த்துதிப்பதற்கென்
சிந்தையில்மறந்ததேது திருவுசாத்தானமேவும்
மந்திரபுரேசனேநின் மலரடிதந்தாள்வாயே. 107

171 இடும்பாவனம்.

தற்பரனேயரனே சிவ சம்போசதாசிவனே
பொற்பதத்தையடியே னொரு போதுமறவேனே
பற்பலசோலைகள்சூழிடும் பாவனத்திற்பதியும்
சற்குணநாதனேநீ யென்னைச் சந்ததங்காப்பாயே. 108

172 கடிக்குளம் (கைப்பனுகுளம்.)

கற்பகத்தருவைப்போன்ற கையனேகருணைவாழ்வே
கற்பகப்பிள்ளையார்க்கோர் கனியளித்தாட்கொண்டோனே
கற்பகக்கோயிலென்னுங் கடிக்குளத்தினிலெழுந்த
கற்பகநாதனேயுன் கழலிணைபோற்றிபோற்றி. 109

173 தண்டலை நீணெறி (தண்டலைச்சேரி.)

அண்டர்தொழுமற்புதனே யாமையினோட்டைத்தரித்த வழகுளானே, மண்டலத்திற்செங்கீரைமாவடுசெங்நெற்குமிக மகிழ்கொள்வோனே, வண்டமரும்பூங்குழல்யா ளும்பிகையை மனமார மருவவந்த, தண்டலைநீணெறியானே சந்ததமுமுன்றாளைத் தலைக்கொள்வேனே. 110

174 கோட்டூர்.

ஆட்டுக்கிசைந்தவனே யானந்தத்தாண்டவனே
பாட்டுக்கிசைந்தெனைநீ பாராததென்சுறையோ
வாட்டுந்துயரகற்ற வந்துவரம்நீயெனக்குக்
கோட்டூரில்வாழுமொரு கொழுந்தீசனேயருளே. 111

175 வெண்டுறை (திருவெண்டதுறை.)

தண்டுலாவுஞ்செந் தாமரைப்பாதனே
வண்டுபூசிக்க வந்தமாணிக்கமே
கண்டுசக்கரை கற்பகமேயருள்
வெண்டுறைக்கொரு வீராதிவீரனே. 112

176 கொள்ளம்பூதூர் (செல்லூர்திருக்களம்பூர்:)

அப்பனேயென் றனுருயிர்க்குயிரே யரியயன்றேடியுங்காணு
ஒப்பிலாமணியேகாவிரிநதியி லொருவருமின்றியோடத்தில்
தப்பிலாச்சம்பந்தரைவரச்செய்து தரிசனந்தந்ததற்பரனே
செப்பருங்கொள்ளம்பூதூருறையும் தேவனே திருவடியருளே.

177 பேரியில் (பேரையூர்.)

வாரிதிக்கரசனான வருணனேத்தியபொற்பாதா
நாரிபெண்ணமிர்தமென்னு நாயகிக்கினியநாதா
கோரிவந்தேனெனக்கோர் குறையிலாமற்படிக்குப்
பேரியில்வந்தெழுந்த பிரபுவேயருள்செய்வாயே. 114

178 கொள்ளிக்காடு.

அத்தனேயாதி யானந்தனேயென்மேல்
சித்தமில்லையோ செய்தவறென்னையோ
கத்தனேகொள்ளிக் காடுறைவோனேநின்
பத்தனைக்கண்ணுற் பார்ப்பதுன்பாரமே. 115

179 தெங்கூர்.

ஒள்ளியசூலப்படையா வோடுபுலித்தோலுடையா
துள்ளியமானேந்திவருந் தூயாதிருத்தெங்கூர்
வெள்ளிமலையப்பாவென் வினையையறுத்தாளுதற்குத்
தெள்ளியசெந்தாமரைத்தாள் தேடிவந்தேனையருளே. 116

180 நெல்லிக்கா (திருநெல்லிக்காவல்,)

நல்லியுநீ தந்தையுநீ சற்குருவு நீயென்றே
அல்லிலும்ப கலிலுநா னஞ்சலிசெய்தேனேயினி
வல்லிடரை நீயொழித்து வைத்திடநெல்லிக்காவின்
நெல்லிவன வீஸ்வரனே நின்னையலால் வேறிலையே. 117

181 நாட்டியத்தான் குடி.

உள்ளபடி நின்சமுகமென்றுறை யெடுத்தெடுத் தோயாமல்வந்தோதியும், எள்ளளவு முளமிரங் காதிருந்தாலினிவே றெவரிடஞ் சொல்லியழுவேன். வள்ளலே நீபெற்ற பிள்ளையென் றெண்ணியென் வல்வினையெலாமொழிக்க, விள்ளரிய நாட்டியத்தான்குடியில்வாழ்கின்ற விமலனேயிதுசமயமே. 118

182 காறுயல் (திருக்காரவாசல்.)

மாறுதகோபமோ மாதவர்கள்சாபமோ மானிடர்மனஸ்தாபமோ
கூறுதபாபமேதேனுநான்செய்தனோ கொஞ்சமாகிலுமுன்செவிக்
கேறுதவிதமென்னவேடாயிரங்கொண்டு மெழுதிமுடியாதென்கு
காறுயல்வந்துவளர்கின்றகருணாகரக் கடவுளேகண்பாருமே.[றை

183 கன்றுப்பூர் (கன்னுப்பூர்.)

என்றுயுநீ யென்னப்பனு மெல்லா நீயேயுன்னை
என்றுகிலு மறந்தேனோவிவ் வேழை யென்னசெய்வேன்
ஒன்றுவிரண்டா வென்குறை யோதவசமாமோ;
கன்றுப்பூரில் வாழ்வோனேயிக் கடையேனைக் காப்பாயே.

184 வலிவலம்.

புலியதளுடையாய்க் கொண்ட பொன்னிறத்தானேயிந்தக்
கலியுகத்தினிலென்னைப்போற் கருமிவேறொருவருண்டோ
நலியுதேயுள்ளநீயெந் நாளிலுங்கைவிடாமல்
வலிவலத்தினிலெழுந்த வள்ளலேவந்தாள்வாயே. 121

185 கைச்சினம்.

பையரவணிந்திட்டானைப் பருவதராஜன்பெற்ற
தையலைப்பங்கில்வைத்து சந்ததம்புகழுவானை
வையகத்தினிலிலங்கு மதிதவழ்கைச்சினத்தோர்
ஐயனையெந்நாளு மடியையஞ்சலிசெய்வேனே. 122

186 கோளிலி (திருக்குவளை,)

காளியுடன்கரகரவென் றாடினானைக் கண்ணனையுங்கஞ்சனையுங்
கண்பூத்தானை, வாளியினால்தக்கன்முடிவாங்கினானைமதிசூடியானை
ப்பூதங்கடங்கள், தோளினானெற்பொதியைச் சுமந்து கொண்டு
சுந்தரர்க்குப் போடவைத்த ஜோதியானைக், கோளிலியில் வந்து
[illegible]த்தாடுவானைக் கூற்றையுதைத்தானைநிதங் கோருவேனே. 123

187 திருவாய்மூர்,

வாய்வுதேவன் வணங்கப்பெற்றோனேயுன்
சேய்மிகத்தளரச்செய்வதேனோவென்
தாய்போலிங்குநீ சத்தியமாய்வர
வாய்மூரப்பனே வாழ்த்தித்துதிக்கனே. 124

188 திருமறைக்காடு (வேதாரணியம்,)

ஒருநாளிலேனு முன்புகழைப்பாடி யுளமகிழாப் பாவியிருந்திற ந்துமென்ன, கருணாளனேதேவமந்திரத்தாற் கதவடைபட்டிருந் ததறிந்தப்பராலும், திருஞானசம்பந்தராலுமுன்போற் றிறக்கவு மூடவுமனுக்ரகஞ்செய்தோனே, வருவாயென்குறையகலயினியுன் றுணை மறப்பேனோ மறைக்காட்டில் வாழுந்தேவே. 125

189 அகத்தியான்பள்ளி.

அகத்தியேஸ்வரனேபோற்றி யருமறைப்பொருளேபோற்றி
அகத்தியமுனிபூசிக்க வருளளித்தவனேபோற்றி
அகத்தியான்பள்ளியில்வந் தாடிடுமரசேநீயென்
அகத்தினிற்குடியிருந்தே யனுதினமருள்செய்வாயே. 126

190 கோடிக்குழகூர் (கோடிக்கரை,)

மாமானை யேந்திவிளையாடுவானை மழுவானை மதிநதியைமரு வானைப், போமானையெய்த பெருமானைவாணிப் பூமானைப்பூவுல கிற்கண்பூத்தானைக், கோமானைக்குற்றமிலாவாயுதேவன் கோரவ ரங்கொடுத்தானைக்காமக்கோட்டி, சீமானைத்திருக்கோடிக்குழகூ ரானைத் திருவடியையெந்நாளுந் த்யானிப்பேனே. 127

சோழநாடு காவேரிக்குத் தென்கரை முற்றிற்று.

3 வது ஈழநாட்டிலுள்ள தலங்கள் 2,

இவைகளுக்குவிபரம்.

191 திருக்கோணமாமலை (திருக்கொணமலை.)

அந்திவண்ணனே யைம்முகத்தேவனே
இந்திரன்றேவ ரேத்தும்பொற்பாதனே
நந்திகேஸ்வர னேயெந்தநாளுநீ
வந்தருள்கோண மாமலைவாசனே. 1

192 திருக்கேதீச்சரம்.

அருமறைப்பொரு ளாகியவத்தனே
கருணையாளனே கௌரிமணாளனே
உருகுதேயுள்ள மோர்வரமாகிலும்
கிருபைசெய்குவாய் கேதீச்சரத்தானே 2

ஈழநாடு முற்றிற்று.

4வது பாண்டி நாட்டிலுள்ள தலங்கள் 14
இவைகளுக்குவிபரம்.

193 திருவாலவாய் (மதுரை.)

அருவாயுமுருவாயுமமர்ந்திட்டானை யறுபத்துநான்குதிருவிளை யாட்டானைத், தருவாருங்கொன்றையணி சடையுளானைச் சமண ர்களைக்கழுவிலிடுஞ் சம்பந்தர்க்குக், குருவாகவந்தவனைக் கோலக் கொம்பைக் கொண்டானைக் கொடியவிடமதையுண்டானைத், திரு வாலவாயிலுறுஞ் சிவபிரானைச் சேவடியை யனுதினமுஞ் சேவி ப்பேனே. 1

194 திருவாப்பனூர் (ஆவடையார்கோயில்.)

சந்திரசேகரனை யரிச் சந்திரன் சித்ரசேனன்
நந்திதேவன்பணியும் பூத நாதனைநான்முகன்றன்
ஐந்துசிரத்திலொன்றைக் கிள்ளி னானைத்திருவாப்பனூர்த்
தந்தியுரியோனை யேத்திச் சந்ததமுய்வேனே. 2

195 திருப்பரங்குன்றம்.

கருப்புவில்லேந்தினனைக் கண்ணினாற்காய்ந்திட்டானைப்
பருப்பதராஜனீன்ற பார்வதிபாகத்தானை
விருப்பமாய்த்யானம்வாங்க வேதியன்போல்வந்தானைத்
திருப்பரங்குன்றத்தானைச் சிரடிசிந்திப்பேனே. 3

196 திருவேடகம்.

அத்தனையத்திக் கருளளித்தவனை யம்பெனக்கொண்ட வற்பு தனை, வித்தகவிஜயன்வில்லினால்வீச மெய்குளிர்ந்தோனைவைகை யினில், எத்தியேபுகலியாரிடுமேடன் றெதிர்த்துவந்திடவருள்பு ரிந்த, கத்தனைத்திருவே டகத்துள்வாழ் பவனைக் கனவிலுங்கை தொழுவேனே. 4

197 கொடுங்குன்றம் (பிரான்மலை.)

பொன்னார்மேனியானைவரிப் புலித்தோலுடையானை
மின்னார்மதிநதிவிழுஞ்சடை யானைவிடையானை
எந்நாளுநாகேந்த்ரனுந்தே வேந்த்ரனுமிறைஞ்சும்
தென்னார்கொடுங்குன்றத்தானைத் தினமுந்தொழுவேனே. 5

198 திருப்புத்தூர்.

அத்தியையுரித் தன்பாயணிந்தோனைச்
சத்திவேலனைத் தந்ததயாளனை
முத்திதந்திடு முன்னவனைத்திருப்
புத்தூரீசனைப் போற்றிப்புகழ்வேனே. 6

199 திருப்புனவாயில் (திருப்புனவாசல்.)

பூதியைப்பூசினானைப் புரந்திரன்போற்றப்பெற்ற
ஆதியானந்தத்தானை யைந்தெழுத்தாய்நின்றானைத்
தீதிலாச்சோதியானைத் திருப்புனவாயிலானை
நீதியாயெந்நாளு நெஞ்சினினினைந்துய்வேனே.

200 இராமேச்சுரம்.

அகத்தியனக்கினியனுமனசுவத்தாம னயோத்திரவி குலராம
லட்மணன்முன், ஜகத்திடையில் வந்துதுதிசெய்யப்பெற்ற சங்க
ரனான் முகனைந்து சிரசிலொன்றை, நகத்தினாற்கிள்ளினவ னதிய
ணிந்த நாயகனான்மறைக்கெட்டா நந்திகேசன், இகத்திலிராமேச்
சுரத்திலாடுவானி ராமலிங்கேஸ்வரனடியை யேத்துவேனே. 8

201 திருவாடானை.

ஆட்டானையரவணிந்த வழகானையன்பருக்கோர்
விட்டானைவேணீறாக்கி விட்டவிழியானைவெள்ளை
மாட்டானைத்திருவாடானை வாழ்வானைமறைக்கெட்டாத
நாட்டானையெனதுநெஞ்சே நாளுநீநம்புவாயே. 9

202 திருக்கானப்பேர் (காளையார்கோயில்.)

கருதரியகற்கண்டே கனுவில்லாச்செங் கரும்பேகைக்காதகனி
ரசமேமிக்க, அருமையுறுமாமைக்கு மானைக் தம்வந் தருளளித்த
வாண்டவனேயறையொணாத, கருணைமிகுங்கற்பகமேசுந்தரர்க்குக்
காளையுருவாய்வந்துகாக்ஷிதந்த, ஒருமுதலேதிருக்கானப்பேருரா
னே யுன்னாணையென்னையுகந் தினியாள்வாயே. 10

203 திருப்பூவணம் (திரிபுவனம்.)

ஆவலுடனடியாருக் கருளளிக்குமாரமுதை யரியதேனைத்
தேவருக்குமூவருக்கும் யாவருக்குமேலான சிவபிரானை
மூவரசரும்போற்ற முன்வந்துசேவைதரு மூர்த்தியானைப் [னே.
பூவணத்தெம் பெருமானைப்பொன்னடியைப்பூசித்துப் பூரிப்பே

204 திருச்சுழியல்.

விழியினால்வேளை வெம்பொடியாக்கினாய்
அழிவிலாதரு ளன்பர்க்களித்திட்டாய்
பழியிலாமலிப் பாலனைக்காத்திடச்
சுழியல்வந்தவ னேதோத்தரித்தனே. 12

205 திருக்குற்றாலம் (திரிகூடாசலம்.)

வற்றாதவாரிதியேவாவிநீரை வந்துரிந்துசிதரியமாவைக்காத்தோனே, பெற்றாருமுற்றாருநீயென்றெண்ணிப் பேருலகிற்பேசிவரும்பேயேன்மீது, சற்றாகிலுந்தயையிராமலென்னைச் சஞ்சலத்திலுள்ளாக்கதருமந்தானோ. குற்றாலக்குணக்குன்றே குறையகற்றுங் குலதெய்வமேயுன்னைக்கோரினேனே. 13

206 திருநெல்வேலி.

நாரணனுன்முகனுகனாரதன்வா னாட்டிப னற்கும்பமுனிசுவேதன், வாரணமாதவமுனிவர்வாழ்த்தப்பெற்ற வடிவழகனேமாதர்வஸ்திரத்தைப், பூரணமாய்த்தந்துகரையேறவிட்ட புண்ணியனேபுரமெரித்தகண்யவானே, நீரணிவேணியனேநெல்வேலியானே நீயென்னைக்காத்தருளநீதிதானே. 14

பாண்டிநாடு - முற்றிற்று.

5 - வது, மலைநாட்டிலுள்ள தலம், 1
இதற்கு விபரம்.

207 திருவஞ்சைக்களம்.

நஞ்சுண்டநக்கனேநான்மறைக்கெட்டாத நாதனேசுந்தரர்க்குக்
குஞ்சரந்தந்தவருடன்சேரமானையுங் குலவிவரவைத்தகோனே
அஞ்சிடாநெஞ்சகத்தோன்பரசிராமனுக் கருளமுதளித்தவரனே
அஞ்சைக்களத்தில்வந்தாடுமருளாளனே யடியனுக்கருள்புரிவை
மலைநாடு - முற்றிற்று. [யே.

6 - வது, கொங்கநாட்டிலுள்ள தலங்கள் 7. இவைகளுக்கு விபரம்.

208 புக்கொளியூர் அவிநாசி (அவிநாசி.)

அக்கரவாபரணமெனக்கொண்டவனையம்பிகையை யகலாதோங்கு
நக்கனைவன்மீன்சேயைக்கக்கவைக்கும்படியாக ஞானவானுக்
கக்கணமேயருள்தந்தவைம்முகனையனலேந்து மழுவாளனைப்
புக்கொளியூரவிநாசிப்புண்ணியனையெப்போதும்போற்றுவேனே.

209 திருமுருகன் பூண்டி.

அருமறைக்கெட்டாதவனை யைந்தெழுத்தாய்நின்றவனை
முருகனனுஷ்டிப்பவனை முன்சுந்தரன்பொருளைத்
திருடிவரச்செய்தவனாற் சீர்பதிகம்பெற்றவனைத்
திருமுருகன்பூண்டியனைச் சேவடிசேவிப்பேனே. 2

210 திருநணு (பவானி.)

கற்றைவார்சடையாகரியமால்விடையா கருதருங்கரியுரியுடையா
நற்றபோதனரெந்நாளினுமறவா நளினசேவடியையிந்நாயேன்
பற்றினேன்றுணையாய்ப்பரமனேயின்னம் பராமுகமேனுனக்கழ
சிற்றறிவுடையசிறியனைக்கண்பார் திருநணுமேவியசிவனே. [கோ

211 கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்கோடு.)

அடிமுடியுங்காணாதவரியயனைக்கண்பூத்த வன்புளானைப், படி
புகழும்பிரங்கிமகாமுனிக்கருளவருமர்த்த பாகத்தானைத், துடியி
டையம்பிகைமகிழுந்துரையைமதுமலிகொன்றைதொங்கலானைக்
கொடிமாடச்செங்குன்றூர்க்கொற்றவனையனுதினமுங் கோருவே
னே. 4

212 வெஞ்சமாக்கூடல் (வஞ்சமாங்கூடலூர்.)

நஞ்சதைமகிழ்ந்துண்டேனே நகுதலையணிபெம்மானே
குஞ்சரமூர்ந்திலங்குங் கோடபதிக்கருளுவோனே
தஞ்சமென்றடைந்தபேரைச் சந்ததங்காக்குந்தேனே
வெஞ்சமாக்கூடலானே மெல்லடிதந்தாள்வாயே. 5

213 திருப்பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி.)

அரவணிந்திடு மப்பனையொப்பிலாப்
பிரமன்மான்மிகப் பேணித்துதித்திடும்
பரமனைத்திருப் பாண்டிக்கொடுமுடி
அரனையன்புட னஞ்சலிப்பேனரோ. 6

214 திருக்கருவூர்த்திருவானிலை (கருவூர்.)

மருக்கோதையைமணரும்பர மனைவாமதேவனையன்
பருக்காரமுதாகும்பசு பதியைக்கிர்பாநிதியை
ஒருக்காலினுனடனம்புரிந் தோனையுரித்திரனைத்
திருக்கருவூர்த்திருவானிலைச் சிவனைமறவேனே. 7

கொங்குநாடு - முற்றிற்று.

7 - வது, மகதநாடு - அல்லது - நடுநாட்டிலுள்ள தலங்கள் 22
இவைகளுக்கு விபரம்,

215 திருநெல்வாயிலறத்துறை.

சத்துச்சித்தாகியசங்கரா சம்பந்தருக்கன்று
முத்துக்குடைமுத்துச்சின முத்துச்சிவிகைகளும்
பத்திக்குளமகிழ்ந்தீந்தொரு பதிகம்பாடப்பெற்ற
அத்தாதிருநெல்வாயி லறத்துறையாவருளே. 1

216 தூங்கானைமாடம் (பெண்ணாடம்.)

ஓங்காரமாயெழுந்தவுத்தமனேயுன்னடிவிட் டொருநாளேனும்
நீங்காதஅப்பருக்குத்தோளிலிடபக்குறியு நிகரிலாத
பாங்காகவொருசூலக்குறியுமளித்தவனேநின பாதசேவை
தூங்கானைமாடத்தெம்பெருமானையான்காணத் துதிசெய்வேனே.

217 கூடலையாற்றூர்.

கீடலையணிந்தகோனே நிகரிலாச்சபையிலாடும்
ஆடலைக்கண்டசுந்த ரனைவழிமறித்தன்பாகப்
பாடலைப்பாடச்செய்த பரமனேபகரொணாத
கூடலையாற்றூரானே குறையறக்கோரினேனே. 3

218 திருவெருக்கத்தம்புலியூர் (ராகேந்திரப்பட்டணம்.)

அருக்கனுதிசே டன்றுதியார்ந்தநீ
இருக்கவெண்மறை யின்னமேலாததேன்
எருக்கத்தம்புலி யூராவிவ்வேழைமேல்
உருக்கம்வைத்தினி யோர்வரமீவையே. 4

219 திருத்தினை நகர் (தீர்த்தநகரி.)

புனையணி வேணியானே பொன்னிற மாய்நின்றோனே
உனை நினைந்துருகிவாடி யுளமெலிந் தேனனந்தோ
எனையினி யாள்வதெப்போ தேழையா னெந்தாயெந்தாய்
தினைநக ரானேசிருஞ் செல்வமுந் தந்தாள்வாயே. 5

220 திருச்சோபுரம் (தியாகவல்லி.)

ஆதிநடுவந்தமில் லாதொளிருமையனே யனலார்ந்திடுங்கையனே, பூதியணிமெய்யனே பொதிகைமலை யோன்வந்து பூசித்திடுந் துய்யனே, ஓதியுணராதவென் மீதிலின்னமுமுனக் குளமிரங்காததென்னே,ஜோதிசுடரேயெனைக்காத்தாளுவாய்திருச்சோபுரமமர்ந்தபரனே. 6

221 திருவதிகை (திருவதி,)

அரியானை யடிதூக்கியாடினானை யப்பருக்குச் சூலநோயகற்றிட்டானைத், துரிதமுடன் றொழுகுலத்தோனாகவந்து சுந்தரர்க்குத் திருவடியைச்சூட்டினானைக், கரியானையம்பாக்கிக் கனகமேருக் கல்வினையே வில்லாக்கிக்கடுகியோடி, திரிபுரத்தைச் சிரித்த திருவதிகையானைச் சேவடியை யெப்போதுஞ் சிந்திப்பேனே. 7

222 திருநாவலூர் (திருநாமநல்லூர்.)

குருநாதனேயுனது குஞ்சிதபாதம்பணிய
ஒருநாளும்யான்மறவே னுள்ளபடியென்முனநீ
வருநாளிந்நாளென்று வகையறியாப்பாதகனைத்
திருநாவலூரானே சேவடிதந்தாளுவையே. 8

223 திருமுதுகுன்றம் (விருத்தாசலம்.)

என்னுதனீயென்றிங்கென்குறையையுன்முனநா னெடுத்தெடுத்து
சொன்னாலுங்கேளாதவகையின்னதென்றறியேன் சுந்தரர்க்குப்[ச்
பொன்னாறிரண்டா யிரந்தந்தபுண்ணியனே புகழ்ந்துநீயென்
முன்னாக முதுகுன்றத்தானேவந் தருள்புரிய முயலுவாயே. 9

224 திருநெல்வெண்ணெய் (நெய்வெண்ணெய்.)

தண்ணிலாவணிந்தசெஞ் சடைமுடியோனேயுனைப்
பண்ணினாலெடுத்தெடுத்துப் பாடியும்பாராததேன்
மண்ணையுண்டோனும்பிதா மகனுமேத்தவந்தநெல்
வெண்ணெயப்பனேயெனக்கு வேறுதிக்கிங்கில்லையே. 10

225 திருக்கோவலூர் (கீழூர்.)

அம்மானையேந்திவிளையாடுவானை யந்தகாசுரனைவந்தழித்திட்டானை,ப் பெம்மானைப்பேரின்பந் தருங்கோமானைப் பித்தனெனும்பேரானை யென்னைப்பெற்ற, அம்மானை பரியயனரங்கத்தானை திருமறையின்முடியினடமாடுவானை, எம்மானைத்திருக்கோவலூர் வீரட்டா னேச்சுரனை யெந்நாளுமேத்துவேனே. 11

226 அறையணிநல்லூர் (அறைகண்டநல்லூர்.)

நறையுறுங்கொன்றைதும்பை நதிமதியணிந்தநாதா
மறைமுதலானபோதா வானவரேத்தும்பாதா
முறையதுசெவிக்கேருதா முத்திவீடளிக்குந்தாதா
அறையணிநல்லூர்வாழு மண்ணலேயருள்செய்வாயே. 12

227 இடையாறு.

சடையா கரியுடையாவருள் தடையா வெள்ளைவிடையா
கொடையாளனென்றுனைநாடினேன் குறைதீர்த்தருள்கொடையா
இடையாமலென்முனம்வந்தினி யெனையாள்சூலப்படையா
இடையாறுறு மிறையேயெளி யேனுன்னடைக்கலமே. 13

228 திருவெண்ணெய்நல்லூர்.

அப்பணிந்தா னரியுரிபோர்த்தானனுக்க மாபரணத்தானண்டரல்லல்நீங்க, முப்புரத்தைமுனிந்திட்டான் முனிவருக்கு முத்தியளித்தான்மொழியுமும்மூர்த்திக்குள், ஒப்பொருவரில்லாதான் சுந்தரன்முன் னோடிதடுத்தாட்கொளவோலையைக்காண்பித்தான், செப்பரியவேற்கண்ணி பாகத்தான்வாழ் திருவெண்ணெய் நல்லூரைச்சேவித்தேனே. 14

229 துறையூர் (திருத்தளூர்.)

கட்டரவணிந்தகருணாகரக்கடவுளே கருதரியசுந்தரர்க்கன்,றிட்டகுருவாகவந்துபதேசமதுசெய்த விறைவனே யிணையிலாத. துட்டரைச்சிட்டபரிபாலனஞ்செய்தவெண் டோளனேதுறையூரில்வாழ், சிட்டகுருநாதனேசெய்மரைப்பாதனே சித்தமுற்றெனையாளுமே. 15

230 வடுகூர் (திருவாண்டார்கோயில்.)

வடுகனேத்த வரந்தரவந்தவன்
வடுவகிர்க்கண்ணி மங்கைபனோகரன்
வடுகிசன்வலி மாமனைமாய்த்தவன்
வடுகூரானடி வாழ்த்தவந்தேனரோ. 16

231 திருமாணிக்குழி.

மாணிக்கம் வைத்துதிரு மால்வணங்கவந்தவனை
மாணிக்கவல்லிமணவாளனைமாமறைமுதலை
மாணிக்கவரதனெனும் வள்ளலைவானோர்க்கரசை
மாணிக்குழியானை வந்துதுதிப்பாய்மனமே. 17

232 திருப்பாதிரிப்புலியூர் (திருப்பாப்பூர்.)

ஆதியானந்தத்தானை யப்பரைக்கல்லைக்கட்டி
மோதியேகடலிற்போட முன்வந்துகாத்திட்டானை
மேதினிதன்னிலன்பாய் வியாக்கிரபாதரேத்தும்
பாதிரிப்புலியூரானைப் பரிவுடன்பணிகின்றேனே. 18

233 திருமுண்டீச்சுரம் (திருக்கண்டேஸ்வரம்,)

வானவருக்கிறைவந்து வாழ்த்தினானை மாமலரோன் பிரமஹத்தி நீக்கினானை, ஞானஅப்பர்பாடவுமை தாளம்போட நானிலமும்புகழநடனஞ்செய்தானைக், கானநரிபரியாக்கிக் காட்டினானைக் கற்றவருண்ணுங் கனியைக்கருணைவாழ்வைத், தீனதயாபரனையென்றன் சிந்தையானைத் திருமுண்டீச்சுரத்தானைச் சேவிப்பேனே.

234 திருப்பனங்காட்டூர் (பனையவரம்.)

அத்தனேயடியனல்லலையகற்றி யாதரித்திடவுனையல்லால், இத்தரையினில்வேறொருவருமிலை நீ யினமிரங் காவகையறியேன் சித்தம்வைத்துச்சிபிச் சக்ரவர்த்திக்கருள் செய்திடுஞ் சிவபெருமானே, பத்தர்சூழ்பனங்காட் டூரில்வாழ்பவனே பாவியைப்பார்ப்பதுன்கடனே. 20

235 திருவாமாத்தூர்.

ஏதமிலாப்பொருளே யுல கெங்கு நிறைந்தவனே
பாததரிசனத்தைக் கண்ணுறப் பார்ப்பதெப்போதறியேன்
சீதநீரார்ந்தவனே காம தேன்றொழப்பெற்றவனே
ஓதரியதிருவா மாத்தூ ருத்தமனேயருளே. 21

236 திருவண்ணாமலை.

தண்ணருஞ்சசிதழுவுஞ் சடையுளானைச் சங்கரனைச்சக்கிரியுஞ்சாவித்ரிக்குக், கண்ணனைகமலயோனியுங்காணாத கண்ணியனைக்கனலர்க்கதித்திட்டானை, உண்ணாமுலைக்கொருபாகத்திலோங்கு முத்தமனையும்பருளத்துகந்ததேனை, அண்ணாமலைக்கரசனாகவந்த வைம்முகனை யனுதினமுமாசிப்பேனே. 22

மகதநாடு - அல்லது - நடுநாடு முற்றிற்று.

8 வது தொண்டநாட்டிலுள்ள தலங்கள் 32 இவைகளுக்கு விபரம்.

237 திருவேகம்பம் (காஞ்சிபுரம்.)

நாகத்தினடனமிடு நாரணனு நான்முகனு நாடுகின்ற
ஏகப்பரம்பொருளை யிடதுகண் சுந்தரருக் கீந்திட்டானை
நீலக்கலாபமுறு நித்தியனைத் தந்தவனை நிகரிலாத
ஏகம்பமதிலெழுமே காம்பரநாதனையென்று மேத்துவேனே.

238 திருமேற்றளி (காஞ்சிபுரம்.)

கூற்றனையுதைத்தவனைக் கோகுலரையாதரித்தோன்
போற்றவருளீந்தவனைப் பொங்கரவணிந்தவனைச்
சாற்றருங்கங்காதரனைத் தந்தியுரிபோர்த்தவனை
மேற்றளியில்வீற்றிருக்கும் வித்தகனைவேண்டுவனே. 2

239 திருவோணகாந்தன்றளி (காஞ்சிபுரம்.)

ஓணனும்பர்க ளோதற்கரியவன்
கோணவெண்பிறை கொண்டகுறுகரன்
ஓணகாந்தன் றளியுளான்சேவையைக்
காணவந்தேன் கடைத்தேறுதற்கரோ. 3

240 கச்சியனேகதங்காவதம் (காஞ்சிபுரம்.)

பினாகபாணியனேபோற்றி பேசருங்குபேரனோடு
வினாயகனைத்தப்பெற்ற விரிசடையானேகச்சி
யனேகதங்காவதத்தி லாடிடுமரசேபோற்றி
அனாதரக்ஷகனேயென்னை யாள்வதுன்கடமையாமே. 4

241 கச்சிநெறிக்காரைக்காடு (காஞ்சிபுரம்.)

நச்சரவார்ந்தவனே நால் வேதங்கடந்தவனே
கச்சையணிந்தொளிருங் கா மாக்ஷிக்குகந்தவனே
துச்சவனன்பணியுஞ் சோதி யேசூலபாணியனே
கச்சிநெறிக்காரைக் காட்டின் கண்ணியனேயருளே. 5

242 குரங்கணின்முட்டம்.

புரங்கண்மூன்றெரித்திட்டானே புலியுரிபூணினானே
கரங்குவித்துன்னைநானெக் காலமுந்துதித்தேனுள்ளம்
இரங்கியிவ்வேழையைக்காத் திடமனமிலையோவின்னம்
குரங்கணின்முட்டத்தானே கோரினேன்குறைதீர்ப்பாயே. 6

243 திருமாகறல்.

ஆதியைப்பாதிமதி யணியுமரனைத்தகரி லாடுமறுமுகனைத்தருஞ், சோதியைச்சூலியைச் சுகயோகநீலியைத் துகளிலாதொரு கூறினில், நீதியாய்வைத்துமகிழுப்பராபரனையென் னெஞ்சினின்றுடுபவனைக், கோதிலா மாகறலமர்ந்தகொற் றவனைநான் கோருவேன் குறையகலவே. 7

244 திருவோத்தூர் (அனகாவூர்.)

மதிநதிசூடியசிரனே மான்மனைக்கு மானுருவ நீக்கிவைத்த மணிவிளக்கே, துதிபுரியுஞ் சூரியனுக்கிரதந்தந்த தொன்முதலே யாண்பனைபெண்பனையாய்ச்செய்ய, பதியிலன்றுசம்பந்தர்க்கருள் தந்தோனே பண்ணவர்க்கு வேதத்தைப்பகுத்துரைத்த, அதிபதியேதிருவோத்தூரரசேயென்னை யாதரிக்கவிதுசமய மருள்செய்வாயே. 8

245 வன்பார்த்தான் பனங்காட்டூர் [பனங்காட்டூர்.]

அன்பானவடியர்களுக்கருளளித்தவாரமுதே யறையொணாத
நின்பாதமறவாமற்பனங்கனியைவைத்துநிவே திக்கநீமுன்
தென்பாகக்கண்ணுவர்க்குக்காக்ஷிதந்ததேசிகனேசிவபிரானே[யே
வன்பார்த்தான்பனங்காட்டூர்வடிவழகனேயென்னைவந்தாள்வா

246 வல்லம்..

அருமறைப்பொரு ளாகியவைம்முகன்
மருவுறுங்கொன்றை மாலையணிந்தவன்
திருவல்லத்தி லெழுந்தசிவபிரான்
வருகையைக்கண்டு வாழ்த்தவந்தேனரோ. 10

247 திருமாற்பேறு.

கூற்றானைவிழவுதைத்த கோபத்தானைக் கொடியவிடமுண்டானைக்கொண்டல்வண்ணன், மாற்றானைநாலைந்துதோளுந்தாளும் மளமளவென்றேநெரியும்படி செய்தானைப், போற்றாதவந்தகாசுரனேங்கிப் பொறிகலங்கச் செய்துயிரைப்போக்கினானை, மாற்பேறில்வந்துவிளையாடுவானை மறவாமலென்மனமே வாழ்த்துவாயே.

248 திருவூறல் [தக்கோலம்]

அருவேதிருவுருவேயெனக் கருளேபழம்பொருளே
குருவேமலர்மருவேகுணக் குன்றேயினியின்றே
வருவாய்வரந்தருவாயென்மேல் வாதாமரைப்பாதா
திருவூறலமர்ந்ததேவ தேவாநம்பினேனே. 12

249 திலுப்பையங்கோட்டூர்.

தந்திமாமுகனையீன்ற சம்புவேபோற்றிபோற்றி
சந்திரனேத்தப்பெற்ற சந்த்ரசேகரனேபோற்றி
எந்தையேநம்பிவந்தே னிலுப்பையங்கோட்டூரானே
வந்தெனைக்காப்பாயுன்றன் மலரடிபோற்றிபோற்றி. 13

250 திருவிற்கோலம் (கூவம்.)

தற்பராசசி தாங்குஞ்சடாதரா - கற்பகத்தரு வேகருணகரா
விற்கோலத்தினில் மேவியவித்தகா - பொற்பதத்தைப்பூ ரித்துப் பூசிப்பேனே.

251 திருவாலங்காடு (பழையனூர்.)

அலைகடல்சூழுலகமெலாம்படைத்திட்டானை யரியாதிசேட னஞ்சலிசெய்தானைக், கலையுணருங்குறுமுனிக்குக்கடாக்ஷித்தானைக் காரைக்காலம்மைமுனங்காலினாலும், தலையாலுந்தானடந்துவரவேமுத்தி தந்தானைத்தந்தியுரிதாங்கினானை, மலைசிலையாகப்பிடித்தவாலங்காட்டு வள்ளலையென்மனமேநீவாழ்த்துவாயே. 15

252 திருப்பாசூர்.

வேங்கையுரியுடையெனக்கொண்டவேதாந்தனே வெண்பொடியணிந்தசிவனே, மாங்கனிக்காகமயிலேறியுலகினைவலம் வந்தவனையீன்றவரனே, பாங்குடன்சோழனுக்கன்றுபாம்பாட்டியாய்ப் பாரில்வந்தாண்டபரனே, மூங்கிலடியினிலுற்பவித்தபாசூரனே முன்னெனக்கருள்புரிவையே. 16

253 திருவெண்பாக்கம் (திருவிளம்பூர்.)

வெண்ணெயுண்டவாயனும் விண்ணோர்களும்புகழ்ந்திடும்
அண்ணலேயாலத்தையுண்ட வாதியேயனாதியே
கண்ணிழந்தசுந்தரர்க்குக் கையிற்கோலைத்தந்தவா
எண்ணியென்னையாள்வெண்பாக்க மீசனேசர்வேசனே. 17

254 திருக்கள்ளில் (திருக்கள்ளம்.)

அள்ளித்தண்ணீ ரணிந்தசடையனே - புள்ளிமான்மழு வேந்தும் புனிதனே - உள்ளிருந்துநீ யோட்டுவாயென்றுயர்-கள்ளில்வாழுங் கங் காதரமூர்த்தியே. 18

255 திருக்காளத்தி (காளாஸ்திரி.)

வேளைவிழித்தெரித்தவனேவினையொழிக்க மேதினியிலுன்னை விடவேறுண்டுன், தாளைமறவாக்கண்ணப்பனுக்குமோக்ஷந் தந்தவனேதற்பரனேயொருசிலந்தி, கோளரவுகுஞ்சரமிம்மூன்றுங் கோரக் கொடுத்தாயேமுத்தியென்மேற்கோபமேனோ, ஆளினியாகிலுமென்னைத்திருக்காளத்தி யாண்டவனேயுன்னைவந்திங்கண்டினேனே. 19

256 திருவொற்றியூர்.

விரித்தாடுஞ்சடையானைவிடையேறும்பெருமானை வேங்கைதன்னை, உரித்தாடுமுத்தமனையவுணரொழியும்படியா யோதிமத்தை, நெரித்தாடுநித்தியனைநிகரிலாமுப்புரத்தை நீறாய்வேகச், சிரித்தாடுந்தேசிகனைத்திருவொற்றியூரானைச் சேவிப்பேனே. 20

257 வலிதாயம் (பாடி.)

இந்துவேணிய னேயெனையீன்றவா - அந்திசந்தி யடிதொழுதேனுனை - இந்தவன்மமேற் காதினியோர்வரம் - தந்தருள்வலி தாயத் [தலைவனே.

258 வடமுல்லைவாயில்.

அண்டரல்லலையகற்று மறுமுகன்றெழப்பெற்றோனே
தொண்டமான்சக்ரேசன்முன் றோன்றியசுடர்விளக்கே
எண்டிசையோரும்போற்று மீசனேயென்னைக்கண்பார்
மண்டலம்புகழவோங்கும் வடமுல்லைவாயிலானே. 22

259 திருவேற்காடு.

ஆலகாலமுண்டவாதி யேயனாதியேகொடும்
காலனென்னைக்கைதொடாமற் காத்திரக்ஷிப்பாயினி
வேலன்வேந்தன்வேதமேத்தும் வேற்காட்டீசனேபெரும்
ஞாலமீதிப்போதெனக்கு நல்வரந்தந்தாள்வையே. 23

260 மயிலாப்பூர்.

வெயிலோனைப்பல்லுதிரும்படிசெய்தோனை வேதன்முனங்கபாலத்தோடெதிர்நின்றோனை, அயிலேந்துமறுமுகனுக்கருள்தந்தோனை யருமறைகட்கொளிதந்தன்றுட்கொண்டோனை,மயிலாகவந்துமலைமகள்பூசிக்கவந்துவரந்தந்தோனை மயிலாப்பூரில்,மயிலாகவளர்கபாலீசனைக்கண்டோடிவந்தென்குறைமுழுதுமோதுவேனே. 24

261 திருவான்மியூர்.

ஆன்மகோடிகளைப்படைத்தபசுபதியுநீ யைந்தெழுத்தானவனுநீ
மான்மழுவணிந்தவனுநீமறலிவிழவவன் மார்பினிலுதைத்தவனுநீ
வான்மீகிமுனிமகிழநடனதரிசனமன்று வந்துகாண்பித்தவனுநீ
வான்மியூருறுமருந்தீசனுநீயேயென துவல்வினையொழித்தாள்வை [யே.

262 திருக்கச்சூராலங்கோயில் (திருக்கச்சூர்,)

நச்சரவணிந்தோனேநான் முகனைநடுமுடியை
இச்சையுடனகத்தாற்கிள்ளியெறிந்தவெம்பிரானே
மெச்சிவித்யாதரர்பூசித்த மெல்லடியிப்போது
கச்சூரிளங்கோயிலானே கண்டுதுதித்தேனே. 26

263 திருவிடைச்சுரம்.

அடைக்கலமாய்வந்தோரை யாதரித்திடுந்தயாளா
கடைக்கணாலென்னைநோக்கக் கன்மனமோநாயேனைப்
படைத்தவனீயிருக்கப் பரதவிக்கின்றேனந்தோ
இடைச்சுரநாதாவுன்ற னிணையடியினியீவாயே, 27

264 திருக்கழுக்குன்றம்.

தற்பரனேயற்புதனே தந்தியையுரித்தவனே
கற்பகநிகர்த்தகரு ணாகரகங்காதரனே
சிற்பரைமனோகரனே செப்பருந்தயாபரனே
பொற்பதந்தந்தாதரிப்பாய் பூங்கழுக்குன்றத்நானே. 28

265 அச்சிறுபாக்கம்.

சந்திரனைத்தரித்தாடுஞ்சடையுளானே சதகோடிதேவர்க
ளைத்திருத்தேராக்கிச்,சிந்தையுறத்திரிபுரத்தைச்சிரித்தொழிக்கச்
செல்வவிக்கினேச்சுரனைச்சிந்தித்தோனே, சுந்தரமாதுக்கொருபா
கந்தந்தோனே சுருதிமுடிமேனடித்தசுடர்விளக்கே,அந்திவண்ண
னேயுன்னைநம்பிவந்தே னச்சிறுபாக்கத்தானே யருள்செய்வாயே.

266 திருவக்கரை.

அக்கரவணிந்தவைம்முகத்தரசே யடியருள்ளத்தமர்ந்தவனே
தக்கனையன்றுதலைதறித்தவனே சம்புவேசந்த்ரசேகரனே
வக்கிராசூரன்வாழ்த்தவந்தவனே வரிபுலியுரியணிந்தவனே
வக்கரையினில்வந்தாடியவரனே மைந்தனைக்காப்பதுன்கடனே,

267 அரசிலி (ஒழுந்தியாப்பட்டு.)

அரவணிந்திடு மாதியனாதியே - புரமெரித்த புராந்தகனேதிரு
அரசிலிக்கோ னரசனீயல்லவோ - வரமெனக்கருள் வாய்வாம [தேவனே,

268 இரும்பைமாகாளம் (இரும்பை,)

அரும்பொருளேயுனக்கபயமபயமென்றுன் னடியில்விழுந்த
ழுகின்றேனடியேனைப்போற், பெரும்பாவிவேறொருவருண்டோ
இந்தப் பேருலகில்வந்துதித்தநாளாயின்னம், வருந்துகிறேன்மன
மிரங்காதிருப்பதற்கு வகையின்னதென்றறியவழியுங்காணேன்,
இரும்பைமாகாளத் துறையுமீசாநீயிவ் வேழையையீடேற்றுவிது
வேளைதானே, 32

தொண்டநாடு - முற்றிற்று.

9 - வது, துளுவநாட்டிலுள்ளதலம் 1

269 கோகரணம்.

ஆடியசெஞ்சடையானேயன்பரைக்காத் தாதரிக்கவங்வனே யமரர்கோனே. ஓடிவந்திராவணன்றன்கையாற்றாக்க வுருதியுற வாய்ந்தவனேயொப்பிலானே, பாடியவிப்பாவிக்கோர்வழியுங்கா ணேன் பனிமதிசூடியபரனேபக்த்தியோடு, கோடிசரணஞ்செய் தேன்வரமெனக்குக் கோகரணத்தானேநீகொடுத்தாள்வாயே.

துளுவநாடு - முற்றிற்று.

10 - வது, வடநாட்டிலுள்ளதலங்கள் 5. இவைகளுக்கு விபரம்.

270 திருப்பருப்பதம் (மல்லிகார்ச்சுனம்.)

நெருப்பணியுங்கையானேநீண்டசெழுஞ்சடையானே நின்னை யல்லால், விருப்பமுடன்வேறொருவரிவ்வுலகிலேதேதென் வினை யைத்தீர்க்கப், பொருப்பதனைக்குடையாகப்பிடித்தவனைவிடையா கப் புகழ்ந்தார்ந்தோனே, திருப்பருப்பதத்தானேதிருவடியையெ த்தினமுஞ் சேவிப்பேனே. 1

271 இந்திரநீலப்பருப்பதம்.

இந்துவேணியனேயென்னையாள்பவனே யிணையிலாவெம்பெரு மானே, இந்திரன்விஜயனேத்தவந்தவனே யென்னைநீயிருவினையக ற்றி, சந்ததங்காக்கக்கடனுனக்கிலையோ தந்தியையுரித்ததற்பரனே, இந்திரநீலப்பருப்பதத்தானே யிணையடியினியெனக்கருளே, 2

272 அனேகதங்காவதம்,

பிநாகபாணியனேயிந்தப் பேருலகத்திலுன்னைக்
கனவிலுமறப்பதேது கருணையங்கடலாயோங்கும்
அநுதரக்ஷகனேயல்லோ னருணனஞ்சலிபெற்றோனே
அனேகதங்காவதத்துக் கதிபனேயருள்செய்வாயே, 3

273 திருக்கேதாரம்,

பூதாரக்கோடணியும் புண்ணியனேபூவுலகில்
ஆதாரமில்லையுனை யல்லாமலிப்பொழுதுன்
பாதாரவிந்தத்தைப் பத்தியுடன்யான்பணிந்தேன்
கேதாரத்தானேநற் கீர்த்தியெனக்கீந்தருளே, 4

274 கைலாயம்,

ஓதரியவொருமுதலேயவுணனிந்த வோதிமத்தையூக்கவொரு விரலாலழுத்தக், காதகனீரைந்துமணிமுடிகுலுங்கக் கடுகிநெரித்த ருளளித்தகருணைவாழ்வே, பூதலத்திலுன்னைவிட கதிவேறில்லை புண்ணியனேகைலைபம்பதியுளானே, மாதவருக்கெட்டாதமணிவி ளக்கே மங்களமாய்வாழவரந்தந்தாள்வாயே. 5

வடநாடு - முற்றிற்று.

சிவாலயச்செந்தமிழ்ப்பா - முற்றிற்று. சுபம்.

கடவுடுணை.

சிவாலய மான்மியச் சுருக்கம்.

1. வது, சோழநாடு காவேரிக்கு வடகரை.

1. தில்லை.

சிதம்பரம், கோயில், புலியூர் என்றும் பெயர் சபாநாயகர் சிவகாமியம்மை, திருமூலநாதர் உமையம்மை, பஞ்சலிங்கத்தில் ஒன்ருகிய ஆகாயலிங்கமுடையதும், பதஞ்சலிவியாக்கிரபாதர் முதலான சமஸ்த தேவதைகளுந் தொழவும் சிவகாமிசௌந்தரி காணவும் சார்வதாகாலமும் பேரம்பல சபைக்கதிபராய் சிற்சபையினின்று ஆனந்தநடனஞ் செய்யாநின்றதும் அர்த்தசாமத்தில் சமஸ்த தலத்திலேயிராநின்ற சிவ கலைகளும் வந்தொடுங்காநின்றதும் மாணிக்கவாசகர் திருநீலகண்ட நாயனுர் திருநாளைப் போவாரென்னுந்திருப்பெயர்வாய்ந்த நந்தனுர் கூற்றுவ நாயனுர் கோச்செங்கட் சோழ நாயனுர் கணம்புல்ல நாயனுர் சேக்கிழார் சுவாமிகள் சந்தானசாரியர்களில் மறைஞானசம்பந்த சிவாசாரியார் உமாபதி சிவாசாரியார் இன்னும் அனேகர் முத்தியடைந்ததும்சித்தர்களிலொருவராகிற திருமூலநாதர்சமாதியடைந்ததும் சமயாசாரியர் மூவராற் பாடற் பெற்றதுமான தலம்.

இதற்குமேற்கில் திருப்புலீச்சரமென்று வழங்கும் இளமையாக்கினர் கோயிலிருக்கின்றது. சுவாமி இளமையாக்கினர் அம்மன் பாலசுந்தரம் இது ஆதியில் வியாக்கிரபாதரால் பூசிக்கப்பட்டது திருநீலகண்டநாயனுரும் அவர்மனைவியாரும் இத்தலத்திலிருக்கின்ற பால தீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்தவுடன் இவர்களுக்கு முதுமைபோய் யௌவனமுண்டாக அருள்செய்த தலம்.

இதற்குமேற்கில் அனந்தீஸ்வரம் என்ருேர் தலமுண்டு அனந்தீஸ்வரர் சௌந்தரநாயகி இது பதஞ்சலியால் பூசிக்கப்பட்ட தலம்.

இதற்கு நேர்வடக்கில் திருக்களாஞ்சேரியென்ருேர்தலமுண்டு பிரமபுரி யீஸ்வரர் சிங்காரவல்லி இது பிரமனுல் பூசிக்கப்பட்ட தலம்.

இத்தலங்கள் மூன்றும் சிதம்பரத்தைச்சார்ந்ததாயுள்ளன இதற்குத்தென்கிழக்கு ௩ மைலில்

2. திருவேட்களம்.

(திருவகுளம்) பசுபதேஸ்வரர் நல்ல நாயகி நாரதராற் பூசித்ததும் அப்பர் சம்மந்தராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்குத தெற்கு ௪-மைலில்,

3. திருநெல்வாயில்.

(சிவபுரி) உச்சிநாதேஸ்வரர் கனகாம்பிகை தேவர்களும் கண்

ணுவரும் பூசித்ததும் சம்பந்த
ராற் பாடற்பெற்றதுமான தல
ம் இதற்குத் தெற்கு வ - மை
லில்

4 திருக்கழிப்பாலை.

(காரைமேடு) பால்வண்ண
நாதேஸ்வரர் பொற்பத வேத
நாயகி வான்மீகர் பூசித்ததும்
மூவராற் பாடற்பெற்றதுமான
தலம் இதற்குத் தென்கிழக்கு
ரு-மைலில்.

5. திருநல்லூர்பெருமணம்

(ஆச்சாபுரம்) சிவலோகத்
தியாகேசர்நங்கையுமையம்மை
சம்பந்தர் தன் மனைவியின் கை
யைப்பற்றிக்கொண்டு திருநீல
கண்ட யாழ்ப்பாண நாயனர்
முருக நாயனர் திருநீல நக்க
நாயனர் சிவபாத விருதயர் நம்
பாண்டார் நம்பி இன்னும் ஷை
சம்பந்தருடைய திருமணக்கோ
லத்தரிசனத்திற்குவந்தவர்களு
ம் ஜோதியிற் கலந்ததும் ஷை
சம்பந்தராற் பாடற் பெற்றது
மான தலம் இதற்கு வடகிழக்
கு ௬-மைலில்.

6. திருமயேந்திரப்பள்ளி.

(கோயிலடிப்பாளையம்) திரு
மேனி யழகர் முல்லை நகைவடி
வம்மை ஆலயத்தில் எரிந்துக்
கொண்டிருந்த தீப நெய்யை வி
ரும்பிவந்த ஓர் எலி தனது நா
வால் அந்நெய்யை வௌவும்
போது அத்தீபம் பிரகாசமாக
விளங்கச் சிவபெருமான் சந்
தோஷித்து மாவெலியெனுஞ்
சக்கரவர்த்தியாகி திரிபுவனங்
களும் ஆளக்கடவாயென வரங்
கொடுத்தருளியதும் சம்பந்த
ராற் பாடற் பெற்றதுமான த
லம் இதற்குத் தெற்கு க0 மை

7. திருமுல்லைவாயில்.

முல்லைவனநாதர் கோதையம்
ம்மை இந்திரனும் சுதர்மனும்
பூசித்ததும் சம்பந்தராற்பாடற்
பெற்றதுமான தலம் இதற்குத்
தென்மேற்கு ௩, மைலில்.

8, திருக்கலிக்காமூர்.

(அன்னப்பன்பேட்டை) சுந்
தரேசர் அழகுவனமுலையம்மை
பராசர்பூசித்ததும் சம்பந்தரா
ற்பாடற் பெற்றதுமான தலம்
இதற்குத் தெற்கு ௩, மைலில்.

9. திருச்சாய்க்காடு.

(சாயாவனம்) சாயாவனேஸ்
வரர் குயிலினு நன்மொழியம்
மை உபமன்னியர் பூசித்ததும்
இயற்பகை நாயனர் முத்திய
டைந்ததும் அப்பர், சம்பந்த
ராற் பாடற்பெற்றதுமான தல
ம் இதற்குக்கிழக்கு உ மைலில்.

10. திருப்பல்லவனீச்சரம்

(காவிரிபூம்பட்டணம்-காவே
ரிப்பட்டணம்) பல்லவனேசர்
சௌந்தராம்பிகை பல்லவனெ
ன்னுமரசன் பூசித்ததும் பட்ட
ணத்துப்பிள்ளை திருவவதாரஞ்
செய்ததும் அப்பர்சம்பந்தராற்
பாடற்பெற்றதுமான தலம்இத
ற்கு வடமேற்கு ௩ மைலில்.

11 திருவெண்காடு.

(சுவேதாரணியம்) சுவேதா
ரண்ய ஈஸ்வரர் பிரமவித்தியா
நாயகி தாருகாசூரனேடு உத்த

ஞ்செய்து கொம்புக ளிழக்கப்பெற்றவெள்ளையானை பூசித்து அக்கொம்புகளுண்டாகப்பெற்றதும்கோயில் திருக்காப்பிட்டபின்பு உள்ளே யிருந்தபிள்ளையை அர்ச்சகனெடுக்கக் கருதிக்கதவைத்திறக்க அப்பிள்ளை கொன்றைவிருக்ஷமாகி யிருக்கக்கண்டதும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு ௧-மைலில்.

12. திருக்காட்டுப்பள்ளி.

ஆரியசுந்தரர் அகிலாண்டநாயகி விருத்திரா சூரனைக்கொன்றுவெரிகொண்டலைந்த இந்திரன் தெய்வலோகமுற்று அரசு செய்யும்படி தேவர்கள் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ௪ - மைலில்.

13. திருக்கருகாவூர்.

(திருக்கடாவூர் - திருமேனி வெள்ளடை) திருமேனி வெள்ளடையீஸ்வரர் காவியங் கண்ணி சுந்தரருக்குக் கட்டமுதளித்து அவராலும் சம்பந்தராலும்பாடற்பெற்ற தலம் இதற்குத் தென்மேற்கு ௪ - மைலில.

14. சீர்காழி.

(சீயாழி - பிரமபுரம் வேணுபுரம் புகலி வெங்குரு தோணிபுரம் பூந்தாராய் சிரபுரம் புறவம் சண்பை கொச்சைவயம் கழுமலம்) பிரமபுரியீஸ்வரர் தோணியப்பர் புனுதசட்டைநாதர் திருநிலை நாயகி பிரயா விஷ்ணு இந்திரன் பூசித்ததும் மகா பிரளயத்தில் ஒருவருக்குஞ் சேதம் வராதவண்ணம் தோணியாக மேல் மிதந்ததும் பிரகலாதனைக் காக்கத் தூணிற்றோன்றி இரணியனைக் கொன்ற நரசிங்கத்துக் கஉக்ரநிலையதிகரிப்பதறிந்த சிவபெருமான் சரபபக்ஷி வடிவங்கொண்டு அதன் உக்கிரத்தை யொடுக்கி சட்டைநாத வடிவமாக விருந்து அனுக்கிரகித்ததும் சம்பந்தர் திருவவதாரஞ்செய்து இவ்வீஸ்பரியின் முலைப்பாலையுண்டதும் கணநாத நாயனார் முத்தியடைந்ததும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ௧ - மைலில்.

15. திருக்கோலக்கா.

(திருத்தானமுடையார்கோயில்) சப்தபுரியீஸ்வரர் ஓசைகொடுத்த நாயகி கண்ணுவர் அகஸ்தியர் பூசித்ததும் சம்பந்தர் கரதாளகீதத்தைக் கேட்டு சிரவணானந்தமடைந்த சிவபெருமான் பொற்றிருத் தாளமொன்றைக்கரத்திற்கொடுக்க அதற்கீஸ்வரிஓசைகொடுத்ததும் சம்பந்தர் சுந்தரராற் பாடற்பெற்றதுமானதலம் இதற்குமேற்கு ௩ - மைலில்.

16. புள்ளிருக்கும்வேளூர்.

(வயித்தீஸ்வரன்கோயில்) வைத்தியநாத ஈஸ்வரர் தையநாயகி சடாயு சம்பாதி இராமர் லட்சுமணர் வேதம் சூரியன் சுப்பிரமணியர் பூசித்ததும் இந்திரன் பூசித்து இரத்தினவேல்

பெற்றதும் இத்தலத்திலெழுந்தருளியிருக்கும் முத்துக்குமாரசுவாமிக்குப் பல தொண்டர்களாலும் பல பிரபந்தப் பாமாலை பாடியருளியதும் தன்மந்திரியார் சமாதியடைந்ததும் அப்பர் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு உ - மைலில்.

17. குருமாணக்குடி.

(திருக்கண்ணார்கோயில்) கண்ணாயிர ஈஸ்வரர் முருகுவளர்கோதை கௌதமர் இந்திரனுக்கு ஆயிரம் யோனியாகப் போகக்கடவதென்று கொடுத்த சாபத்தைத் தீர்க்க ஷை இந்திரன் பூசித்ததும் சம்பந்தராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ௩ - மைலில்.

18. திருக்கடைமுடி.

(கீழையூர்) கடைமுடியீஸ்வரர் அபிராமிவல்லி பிரமா பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ௩ - மைலில்.

19. திருநின்றியூர்.

மகாலட்சுமி ஈஸ்வரர் உலகநாயகி விஷ்ணு சலந்திரா சூரனது மனைவியாகிய பிருந்தையின்மீது மைபல்கொண்டு அவளைச் சலந்திரா சூரனுருவத்தோடு சென்று பணர்ந்ததைய றிந்த பிருந்தை தீப்பாய அவள் மாண்ட சுடலையின்கண் மதிமயங்கியபோது மகாலட்சுமி பூசித்துச் சிவபெருமா னருளால் பெற்ற வித்தினை அச்சுடலையில் வித்தியதினாலே துளபம் நெல்லி அகத்தி இவைகள் தோன்ற அப்போது விஷ்ணு மையலொழிந்துத் தனக்குப்பதியாக அடைந்ததும் மூவராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ச - மைலில்,

20. திருப்புன்கூர்.

சிவலோகநாதர் சொக்கநாயகி சௌந்தரேசர் பெரியநாயகி திருநாளைப் போவா ரென்னும் நந்தனாருக்கு நந்தியை விலகச்செய்து சிவபெருமான் தரிசனங் கொடுத்தருளியதும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் முத்தியடைந்ததும்மூவராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ௫ - மைலில்.

21. நீடூர்.

அருட்சோமநாதர் வேயுறுதோளியம்மை துவட்டா சூரனைக்கொன்ற பழிதீர இந்திரன் பூசித்ததும் முனையடுவார் நாயனார் முத்தியடைந்ததும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு ௩ - மைலில்.

22. அன்னியூர்.

(பொன்னூர்) ஆபத்சகாய ஈஸ்வரர் பெரியநாயகி வருணன் பூசித்ததும் அப்பர் சம்பந்தராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேறகு ௩ - மைலில்.

23. வேள்விக்குடி.

கலியாணசுந்தரர் பரிமளசுகந்தநாயகி ஓரரசபுத்திரனுக்கு

விவாகஞ் செய்ய நிச்சயித்த பெண்ணை விவாக முடிக்குமுன் தந்தைதாய் இறந்தமையால்சுற்றத்தார் மேற்கண்ட அரசபுத்திரனுக்குக் கொடுக்க மனமில்லாததை அப்பெண்ணுணர்ந்த அவ்வரசபுதல்வன் இங்ஙனஞ்செய்யச்சிவபெருமான்பூதத்தால் அப்பெண்ணைக்கொண்டுவரச்செய்து தாமே தீவேட்பவராயிருந்து திருமணவேள்விசெய்தருளியதும் சம்பந்தர் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு உ-மைலில்.

24. எதிர்கொள்பாடி.

(மேலைத்திருமணஞ்சேரி) அயிராவத ஈஸ்வரர் மலர்க்குழன் மாதம்மை அயிராவதம் பூசித்ததும் மேற்கூறிய வேள்விக்குடியில் திருமணமுடித்த அரசகுமாரன் மனைவியோடு தன்னகர் செல்லும்போது சிவபெருமானவனது மாதுலனைப்போல் இத்தலத்தினின்று எதிர்கொண்டழைத்ததும் சுந்தரராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௨-மைலில்.

25. திருமணஞ்சேரி.

(கீழைத்திருமணஞ்சேரி) அருள்வள்ள நாயக ஈஸ்வரர் யாழின்மொழியம்மை, மன்மதன் பூசித்ததும் வைசிய குலோற்பவராசிய நங்கை நாத்தியர்களிருவர் ஒருங்கே கருப்பமுண்டாயிருந்ததால் பிறக்கும் சிசுக்கள் ஒருவருக்கொருவர் சம்பந்தஞ் செய்துக்கொள்ளுகிறதென்கிற வாக்குறுதிப்படி ஒருத்தியீன்ற சிசு ஆமையாயினதால் மற்றவள் தன் பெண்ணைக் கொடுக்க மாட்டேனென்று சொல்லஅவ்வாமை பூசித்து சிவபெருமானருளால் குறித்த பெண்ணை மணஞ் செய்யப் பெற்று ஷை ஆமை உருவம் நீங்கி மானிட உருவம் பெற்றதும் குலச்சிறை நாயனார் முத்தியடைந்ததும் அப்பர் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு ௬-மைலில்.

26. குறுக்கை.

வீரட்டானேஸ்வரர்ஞானம்பிகைஅட்டவீரட்டத்திலொன்றாகிய மன்மதனை யெரித்ததும்மார்க்கண்டேயர் பூசித்ததும் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௬-மைலில்.

27. கருப்பறியலூர்.

(தலைஞாயிறு) குற்றம்பொறுத்தஈஸ்வரர் கோல்வளையம்மை இந்திரன் இறுமாப்பை யடக்கியனுக்கிரகித்ததும் அகஸ்தியருக்குத் திருமணக்கோலத்துடன் காக்ஷிகொடுத்ததும் இராவணன் இக்கோயிலை வேரோடுபிடுங்க அப்போது அக்கோயிலானது அக்கினிமூலையாய்த்திரும்பியிருக்கப்பட்டதும் சம்பந்தர் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு க-மைலில்.

28. குரக்குக்கா.

(திருக்குக்காவல்) கொந்தளாஈஸ்வரர் கொந்தளநாயகி அனுமார் பூசித்ததும் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ௩ - மைலில்.

29. வாழ்கொளிபுத்தூர்.

(வாழப்பூர்) மாணிக்க வண்ணஈஸ்வரர் வண்டார்பூங்குழலி திருமால் மாணிக்கத்தை வைத்து பூசித்ததும் சம்பந்தர் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு கஉ - மைலில்.

30. திருப்பழமண்ணிப் படிக்கரை.

(இலுப்பைப்பட்டு) நீலகண்டேஸ்வரர் அமிர்த கரவல்லி சிவபெருமான் ஆலகால விஷத்தையுண்டபோது உமாதேவியார் அவரது ஊட்டியைப்பிடிக்க அவ்விஷத்தைக் கண்டத்திற்காண்பித்ததும் சுந்தரராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ௩ - மைலில்.

31. ஓமாம்புலியூர்.

துயரந்தீர்த்த ஈஸ்வரர் பூங்கொடியம்மை வியாக்கிரபாதர் பூசித்ததும் அங்குலனென்னும் வேடன்தன்னைத் துரத்தியபுலிக்குப்பயந்து அருகிலிருந்த வில்வமரத்திலேறிக்கொள்ள புலியும் அம்மரத்தின்கீழிருக்க இரவாகிவிட்டமையைப்பற்றி தூக்கம் வாராதவகைக்கு விடியுமட்டும் அம்மரத்தின் இலையைப்பறித்து அவ்வேடன் ஒன்றொன்றாய்ப் போட்டுக்கொண்டிருக்கக் கீழிருந்த சிவபெருமான் மனமிளகி இரவுமுழுதும் விழித்திருந்து அர்ச்சித்ததாக அவனுக்கும் அதைப்பார்த்திருந்த புலிக்கும் சிவபதமருளியதும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௩ - மைலில்.

32. கானாட்டுமுள்ளூர்.

(கானாட்டாம்புலியூர்) பதஞ்சலிநாதர் கோல்வளைக்கையம்மை, திரிபுரசுந்தரி, பதஞ்சலி பூசித்ததும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௫ - மைலில்.

33. திருநாரையூர்.

சௌந்தர ஈஸ்வரர், திரிபுரசுந்தரி. நம்பியாண்டார் நம்பி இத்தலத்தி லெழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாரைப் பூசித்து முத்திபெற்றதும் தேவதத்தனென்னுங் காந்தருவன் மரத்திலேறி கனிபரிக்க அம்மரத்தடியில் நிஷ்டையிலிருந்த துருவாசகர் எதிரே ஓர் கனிவிழுந்து அவரதுநிஷ்டைக்கிடையூறுசெய்ததைப்பற்றி நாரையாகப் போகச்சபிக்க நாரையான அக்காந்தருவன் பூசித்துக் கதியடைந்ததும் அப்பர் சம்பந்தராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு சு - மைலில்.

34 கடம்பூர்.

அமிர்தகடேசர் ஜோதிமின்

ணும்பாள் அமிர்தங் கடைந்த போது நுரையெழும்பியதைப் பார்த்து இந்திரன் பூசித்து அமிர்தமெழும்படியாக அனுக்கிரகஞ் செய்ததும்சம்பந்தர்அப்பராற்பாடற்பெற்றதுமானதலம்இதற்குத்தென்மேற்கு - க0

35. பந்தணைநல்லூர்.

(பந்தநல்லூர்) பசுபதீஸ்வரர் காம்பன்னதோளியம்மை தேவகன்னியர்கள் பூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு உ - மைலில்.

36. கஞ்சனூர்.

அக்கினி ஈஸ்வரர் கற்பக நாயகி அக்கினி பிரமா இந்திரன் மார்க்கண்டேயர் பூசித்ததும் மானக்கஞ்சாற நாயனுர் முத்தியடைந்ததும் அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கு க - மைலில்.

37. திருக்கோடிகா.

(திருக்கோடிக்காவல்) கோடிகா ஈஸ்வரர் வடிவாம்பிகை மூன்றுகோடி ரிஷிகள் பூசித்ததும் அப்பர் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு ௬ - மைலில்.

38. திருமங்கலக்குடி.

பிராணவரதஈஸ்வரர்மங்களநாயகி ஓரரசனிடம் தண்டலாதிபதியாயிருந்தஒர் சிவனடியார் அரசிறைப்பொருளைச் சிலவழித்து ஆலயத் திருப்பணிவேலை செய்ததை அரசனறிந்து அவரையழைப்பிக்க அவருக்குப் பயந்து உயிர்மாய்த்துக்கொண்டதையறிந்தசுற்றத்தார் அதைத்தகனஞ்செய்யும்படி அடுத்த திருவியலூரில் எடுத்துக்கொண்டுபோக அதற்குமுன் அவர் மனைவியாரிவ்வாலயத்தின்கண் எழுந்தருளியிருக்கும் மங்களநாயகியாரால் சுமங்கிலித்துவத்தின்பயனால் இறந்துபோன அவ்வடியார் உயிர்பெற்றெழுந்து சிவதரிசனஞ் செய்தருளியதும் ஏயர்கோன் கலிக்காம நாயனுர் முத்தியடைந்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ச - மைலில்.

39. திருப்பனந்தாள்.

(தாடகேச்சரம்) தாடகேஸ்வரர் சடையப்ப ஈஸ்வரர் பெரியநாயகி சிவபக்த்தியிற் சிறந்த தாடகையென்னும் அம்மையார் சிவார்ச்சனைசெய்து மாலைசாத்தப்போகும் சமயத்தில் உடைநெகிழ அதனைத் தன் முழங்கையாலிடுக்கி மாலைசாத்துக் திருப்பணிக்கு இடையூறு வந்ததைக் குறித்துத் துக்கித்தலை யுணர்ந்த சிவபெருமான் திருமுடிசாய்த்துக் கொடுத்துமாலைசாத்தப்பெற்றுக் கொண்டதும் அம்மாலை ஏற்றநிமித்தம் சாய்ந்திருந்த திருமேனியையுடைய சிவபெருமானை நேர்நிறுத்தும்பொருட்டு அவ்வூரரசன் அனேக யானைமுதலிய வற்றால் வலித்திழுத்தும் நேர்படாமையையுணர்ந்த குங்கிலியக் கலைய

நாயனார் தமது கழுத்திற்கும் சிவபெருமானுக்கும் கயிறுபூட்டியிழுக்கச் சிவபெருமான் நேர் நின்றருளியதும் தாடகையாரது திருத்தொண்டையுலகோர்க் கறிவிக்கும் பொருட்டு இக்காலத்தும் சற்றுச் சாய்ந்தேயிருக்கின்றதும் சம்பந்தராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு க - மைலில்,

40. திருவாய்ப்பாடி.

பாலுகந்த ஈஸ்வரர் பெரிய நாயகி ஓரிடையன் பால்கரந்து செல்லுகையில் இடையில்தினந் தோறும் கால்தடுக்கிப் பால்கவர்ந்துகொண்டுவருதலையுணர்ந்த அவ்விடையன் கையிலிருந்த கொடுவாளால்வீசவக்கொடுவாள்பட்டவடுவினின்று இரத்தஞ் சொரிதலைக்கண்டு பயந்து பாலுகந்த நாதரோ என்றுதொழ உடனே அங்கெழுந்து அனுக்கிரகித்ததும் அப்பராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தெற்கு உ - மைலில்.

41. திருச்சேய்ஞலூர்.

(சேந்தனூர்) சத்தகிரி ஈஸ்வரர் ஜகதேவியம்பாள் சூரசம்மாரத்திற்காக எழுந்தருளிவந்த அறுமுகக்கடவுள் ஓர் நாள் தங்கி சிவபூசைசெய்து ஆயுதம் பெற்றதும் சண்டேசுரநாயனார் முத்தியடைந்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு - ௯ - மைலில்.

42. திருந்துதேவன்குடி.

(திருத்தேவன்குடி) கற்கடக ஈஸ்வரர் அருமருந்தம்மைபாள் தேவர்களும் அசுவமும் நண்டும் பூசித்ததும் இப்போதும் ஓரேநிறமுள்ள பசுக்களின்பால் ௧0 - கலம் இச்சிவபெருமானுக்கு அபிஷேகஞ் செய்துவைத்தால் சுவாமி முடிமீது ஓர்பொன்னிறமுடைய நண்டு ஊரத்தரிசனஞ் செய்யக்கூடுமானதும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தெற்கு க - மைலில்.

43. திருவியலூர்.

ஏகாந்தநாத ஈஸ்வரர் சௌந்தர நாயகி திருமங்கலக்குடியில் திருப்பணி செய்து தேகவியோகமான அடியாரை இத்தலத்துக்குக்கொண்டுவரும்பொழுது சிவபெருமான் உயிர்ப்பிக்கச் செய்தருளியதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு க. மைலில்.

44. கொட்டையூர்.

கோடீஸ்வரர் பந்தாடு நாயகி மார்க்கண்டேயர் முதலிய அனேக ரிஷிகள் பூசித்ததும் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம்இதற்கு வடமேற்கு-க

45. இன்னம்பர்.

அம்பர் முத்தேஸ்வரர் எழுத்தறிவித்த நாதர் பூங்கொம்பன்னை கொந்தார் பூங்குழலி அகஸ்தியருக்கு இலக்கண முபதேசித்தருளியதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்கு வடக்கு உ, மைலில்.

46. திருப்புறம்பயம்.

சாக்ஷிநாத ஈஸ்வரர் சொல்லனாயகி சுந்தோப சுந்தர் பூசித்ததும் வணிக கன்னிகைக்குக் குறிப்பிட்ட மணவாளன் அரவாலிறக்கச் சம்பந்தரால் உயிர்ப்பிக்கப் பெற்றதும் இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் பிரளயங்காத்த பிள்ளையாருக்கு ஆவணி ஸ்ரீ விநாயகர் சதுர்த்தசியில் 64 சேர் தேன் ஒற்றிக்கொடுத்தால் அவ்வளவும் ஊறிவிடுகிற மகுத்துவமுடையதும் வன்னி விருக்ஷம் வணிகப் பெண்ணுக்குச் சாக்ஷி சொன்னதும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ச - மைலில்.

47. விஜயமங்கை.

விஜயநாத ஈஸ்வரர் மங்கைநாயகி விஜயன் பாசுபதம் பெறும்பொருட்டுப் பூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு க - மைலில்.

48. திருவைகாவூர்.

(வில்வவனம்) வில்வவனஈஸ்வரர் பவளக்கை நாயகி பூலைவல்லி மகாலட்சுமி பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு எ - மைலில்.

49. வடகுரங்காடு.

(குரங்காடுதுறை) குலைவணங்கீஸ்வரர் அழகு சடைமுடிநாதர் அழகுசடைமுடியம்மை வாலி பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு உ - மைலில்

50. திருப்பழனம்.

ஆபத்சகாய ஈஸ்வரர் பெரியநாயகி திக்குப்பாலகர் பூசித்ததும் அப்பூதியடிகணாயனாரின் மூத்த குமாரன் சர்ப்பந்தீண்டி இறந்ததை உணர்ந்த அப்பர் தேவாரப் பதிகம்பாடி ஷை பிள்ளையை எழுப்பித்தந்ததும் ஷை அப்பூதியடிகணாயனார் முத்தியடைந்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு கஉ - மைலில்.

51. திருவையாறு.

செம்பொற்சோதிநாதர் அறம்வளர்த்த நாயகி நந்திகேசுரர் பூசித்ததும் அப்பருக்குச் சராசரமெல்லாம் சிவனுஞ் சத்தியுமாகத் தோன்றி தரிசனங்கொடுத்தருளியதும் இருகரையும் பிரண்டோடும் காவிரி வெள்ளமானது சுந்தரருக்கு இருபிளவாய்ப்பிளந்து மத்தியில் வழியாகத்தோன்ற அவ்வழியாகப்போய் சுவாமிதரிசனஞ்செய்து திரும்பி வந்தவுடனே பழயபடி காவிரி ஒன்றாகக்கூடும்படி யருள்சுரந்ததும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு க - மைலில்.

52. திருநெய்த்தானம்.

(தில்லைத்தானம்) நெய்யாடியப்பர் வாலாம்பிகை சரஸ்வதி பூசித்ததும் அப்பர் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு க - மைலில்.

53. பெரும்புலியூர்.

வியாக்கிரபாதஈஸ்வரர் சௌந்தரநாயகி வியாக்கிரபாதர் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ரு - மைலில்.

54. திருமழபாடி.

(திருமுழவாடி) வச்சிரதம்பேஸ்வரர் அழகாம்பிகை இந்திரன் பூசித்ததும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு எ - மைலில்.

55. திருவழுவூர்.

(பழுவூர்) வடமூலநாதர் அருந்தவநாயகி மாவுரிநாதர் வனமுலையம்மை அட்டவீரட்டத்தில் ஒன்றாகிய யானையையுரித்ததும் சப்த கன்னியர்கள் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு அ - மைலில்.

56. கானூர்.

செம்மேனியப்பர் சிவயோகநாயகி உமாதேவியார் சிவயோகசாதனஞ்செய்திருக்கும் பொழுது சிவபெருமான் அக்கினிசொரூபமாய்த் தரிசனங் கொடுத்ததும் சம்பந்தர் அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ச - மைலில்.

57. அன்பிலாலந்துறை.

சத்தியவாக்கீஸ்வரர் சௌந்தரநாயகி பிரமா, விஷ்ணு, இந்திரன், வாகீசமுனி பூசித்ததும் சம்பந்தர் அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ரு - மைலில்.

58. மாந்துறை.

ஆம்பரவரணேஸ்வரர் அழகிலுயர் நாயகி கண்ணுவர் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்மேற்கு ச - மைலில்.

59. திருப்பாற்றுறை.

திருமூலநாதர், மேகலாம்பிகை மார்க்கண்டேயர் பூசித்ததும் சிவபெருமான்புற்றில்பொன்னிறமாயெழுந்தருளியதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ச - மைலில்.

60. திருவானைக்கா.

(ஜம்புகேஸ்வரம்) ஜம்புகேஸ்வரர் அகிலாண்டவல்லி, இது பஞ்சலிங்கத்திலொன்றாகிய அப்புலிங்கமுடையதும் ஜம்புநாவல் மரத்தடியில் வீற்றிருப்பவரும் பராசர், திருமால் கோச்செங்கட் சோழர், கௌதமர் முதலாயினோர் வழிபட்டு பேறுபெற்றதும் உறையூர் சோழராஜன் நீராடும்போது தன் மனைவி கழுத்திலிருந்த ஆரம் சிவபெருமானுக்காகுமென்று நினைக்க அது காவிரியாற்றில் விழுந்து விட அது அபிஷேகத் திருமஞ்சனக் குடத்தில் வரப்பண்ணித் தரித்துக்கொண்டதும் மூவராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு கூ -

61. திருப்பைஞ்ஞீலி.

(லாலிகெடி) மாற்றறிவரதேஸ்வரர், நீலகண்டேஸ்வரர், வால சௌந்தரி, விசாலாக்ஷி, தேவர்கள் அரம்பை மாதர்வாழை

மரங்களாகச் சூழ்ந்து பூசித்ததும், மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் திருக்கடையூரில் யமனை உதைத்தபின் பூமிமீதி பூமிபாரந்தாங்காமல் திருமாலிடத்து முறையிட திருமால் பிரமாதிகளுடனும் பூமிதேவியுடனும் இத்தலத்துக்குவந்து பூசித்துச் சிவபெருமானருளால் யமனை எழுப்பப்பெற்றதும் சிவபெருமான் பிராமணவடிவங்கொண்டு வந்து அப்பருக்குக் கட்டமுதளித்து அவராலும் சம்பந்தர், சுந்தரர், இவர்களாலும் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ௪-மை

62 திருப்பாச்சிலாச்சிராமம்.

(திருவாசி) ஆரண்ணியவிடங்கர் நீலகண்டேஸ்வரர் மாற்றுவரதீஸ்வரர், விசாலாக்ஷியம்மை, வாலசௌந்தரி, மழவராஜன்பெண்ணுக்குக் கண்டிருந்த நடராஜா பாதத்திலிருக்கும்முயலகனென்னும் பெயர் கொண்ட ஓர் வியாதியை சம்பந்தரால் தேவாரப்பதிகம்பாடித் தீர்த்தருளியதும் ஷ முயலகன் அதினால் மோக்ஷமடைய அன்று முதல் ஷ நடேசர் சர்ப்பத்தின்மேல் நடன முடையதாயிருக்கின்றதும் சுந்தரர் பொற்குவை பெற்றதும் சம்பந்தர், சுந்தரரால் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு ௨௰-மை

63. ஈங்கோய்மலை.

(திருவீங்கிமலை) மரகதநாதஈஸ்வரர் மரகதவல்லி, அகஸ்தியர் பூசிப்பதற்குச் சமயம்வாய்க்காமல் ஈ வடிவாய்ச்சென்று பூசித்ததும் சம்பந்தரால் பாடற்பெற்றதுமான தலம்.

சோழநாட்டிலே காவேரிக்கு வடகரை - முற்றிற்று.

2 - வது, சோழநாடு காவேரிக்குத் தென்கரை.

64. வாட்போக்கி.

(இரத்தினகிரி) இரத்தினகிரி ஈஸ்வரர் சுரும்பார் குழலி, சயந்தன் முதலிய தேவர்கள் பூசித்ததும் ஆரியதேசத்தரசன்மாணிக்கம்வேண்டுமென்கிறவிருப்பத்தால் இங்குவந்தும் கிடைக்காமையால் அரசன் உடைவாளை யுருவி உயிர்போக்கிக்கொள்ள எத்தனித்தபோது அவ்வாளைப்போக்கிவிட்டு இரத்தினத்தைக்காண்பித்தவுடன் அரசன் ஆனந்த பரவசனாய் மாணிக்கத்தை விரும்பாமல் சிவபணிவிடையொன்றையே விரும்பிப்பணிபுரிந்து சிவகதியடைந்ததும் அப்பரால் பாடற்பெற்றதுமான தலம் இதற்குவடக்கு ௧௰-மை

65. கடம்பந்துறை.

(கடம்பர்கோயில்) கடம்பவனநாதர் காலைக்கடம்பர், மத்தியானச் சொக்கர், மாலைத்திருவிங்கநாதர், முற்றிலாமுலையம்மை சிவபெருமான் ஓர் காலத்தில் கண்ணுவருக்குந்தேவர்களுக்கும் கடம்ப விருக்ஷத்திற் றோன்றி காக்ஷிதந்தருளியதும் அப்பரால் பாடற் பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௮ - மைலில்.

66. திருப்பராய்த்துறை.

(திருப்பளாத்துறை) பராய்த்துறைநாதர் பொன் மயிலாம்பிகை. இந்திரன், குபேரன், சப்தரிஷிகள், பூசித்ததும் சம்பந்தர், அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்கிழக்கு அ - மைலில்.

67. கற்குடி.

(உய்யகொண்டான்மலை) முத்தீஸ்வரர், உச்சிவரதநாயகர், அஞ்சனாக்ஷியம்மை, ஈழநாட்டரசன் துதித்து முத்திபெற்றதும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ச.

68. மூக்கிச்சரம்.

(உறையூர்) பஞ்சவர்ணேஸ்வரர், காந்திமதியம்மை, பிரமா வந்து பூசிக்கும்போது சிவபெருமான் காலத்துக்கொரு திருக்கோலமாக வீற்றிருக்கக் கண்டுமகிழ்ந்து பஞ்சவர்ண நாதரெனக் காரணப்பே ரமைத்து பல வரம் பெற்றதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்குவடகிழக்குக.மைலில்!

69. திருச்சிராப்பள்ளி.

(திருச்சினப்பள்ளி திரிசிரபுரம்) தாயுமானேஸ்வரர், செவ்வந்தீஸ்வரர் மாதுர்பூதேஸ்வரர்,மட்டுவார்குழலி, ஸ்ரீராமர்,அனுமார், திரிசிரன் பூசித்ததும் சாரமாமுனிவர் பாதலத்திலிருந்து கொண்டுவந்துஉறையூரிற்பயிராக்கிய செவ்வந்தி மலரை பூவாணிபன் திருடிக் கொண்டுவந்து அரசனுக்குக் கொடுக்க அதைத்தன்மனைவி யிடங்கொடுத்தான் இக்களவை யுணர்ந்த முனிவன் அரசனிட முறையிட்டுங் கேளாமையால் இச்சிவபெருமானிட முறையிடச் சிவபெருமான் மேற்குமுகமாகி அவ்வரசனது நகரமாகிய உறையூரை மண்மாரி பெய்யவித்தழித்ததும் காவிரிபூம்பட்டணத்தில்வாழும் ரத்தின குத்தனென்பவன் குழந்தை யில்லாமையால் தவஞ்செய்ய சிவபெருமானருளால் ஓர் கன்னிகையைப்பெற்று இங்குவாழுந்தனகுத்தனுக்கு விவாகஞ்செய்துக் கொடுக்க அப்பெண் வெள்ளிக் கிழமைதோறும் இச்சிவ பெருமானைத் தரிசித்து வருங்காலத்தில் அப்பெண் கற்பவதியாயினள் பிரசவகாலத்தில் அவள்தாய்காயமுதலியவைகள் வாங்கப்போய்காவிரிபெருக்கால் வரத் தடைப்பட்டாள் அப்பொழுது சிவபெருமான் அப்பெண்ணின் அன்புக்கிரங்கி அவள் தாய்போலுருவங்கொண்டு வந்து மருத்துவம்பார்த்து மகப்பேறுன பின்பு காவிரி புனல்வற்ற அப்பெண்ணின்தாய்வந்து சேர்ந்தனள்பின்பு பெண் இருதாயர்களில் தாயாராரென்று மயங்குங் காலத்தில் சிவபெருமான் மறைந்தருளி யனுக்கிரகித்ததும் தாயுமானவரென்னும் பெயர் கொண்ட ஓர் பரதேசி அனேகபிரபந்தங்கள் அருளிச்செய்து அற்புதங்கள் நடத்தியதும் சம்பந்தர்,அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௩.

70. எறும்பியூர்.

எறும்பீஸ்வரர் நறுங்குழனுயகி கரதூஷணரும் எறும்புருவமெடுத்த தேவர்களும் பூசித்ததும் அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ச-மைலில்.

71. நெடுங்களம்.

(திருநெட்டாங்களம்) நித்தியசுந்தரர் ஒப்பிலாநாயகி வங்கியசோழராஜன் பூசித்துப் பேறுபெற்றதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ம - மைலில்.

72. மேலைத் திருக்காட்டுப்பள்ளி.

தீயாடியப்பர் வார்கொண்டமுலையம்மை உறையூர் அரசன் தன் மனைவியர்களில் மூத்தாள் சிவபத்தி விசேடத்தால் அவள் மாத்திரம் தப்பிப்பிழைத்துஇத்தலத்தை யடைய இந்துகானல் வருத்தம் பொறுக்க மாட்டாமல் தீயாடியப்பரோ வென்றழைக்க அவளுக்காக இரங்கி அவ்வெப்பந் தவிர்த்து அனுக்கிரகித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்குக் கிழக்கு கூ - மைலில்.

73. ஆலம்பொழில்.

ஆத்மநாதஈஸ்வரர் ஞானம்பிகை அனந்தனென்னு நாகமும் அட்ட வசுக்களும் பூசித்ததும் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு உ.

74 திருப்பூந்துருத்தி,

(திருப்பந்துருத்தி) புட்பவனநாதர் அழகாலமர்ந்த நாயகி கந்தருவர்கள் பூசித்தருள் பெற்றதும் அப்பராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு க-மைலில்.

75. கண்டியூர்.

வீரட்டானேஸ்வரர் மங்களநாயகிஅட்ட வீரட்டத்திலொன்ருகிய பிரமன்சிரங்கொய்ததும சம்பந்தர் அப்பராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குக் கிழககு ச-மைலில்.

76. சோற்றுத்துறை.

(திருச்சோத்துறை) தொலையாச் செல்வநாதர் ஒப்பிலாம்பிகை சிவபத்தியிற் சிறந்தஅருளாளனென்னு மறையவன்பசிநோயால் வருந்தும்போது எடுக்க எடுக்கக்குறையா திருக்கும்படியான உலவாயமுதளித் தருளியதும் தேவேந்திரன் முதலியோர் பூசித்தருள் பெற்றதும்மூவராற் பாடற்பெற்றதுமானதலம் இதற்கு தென்மேற்கு க-மை.

77. திருவேதிகுடி.

வேதபுரீஸ்வரர்மங்கையர்க்கரசி வேதங்கள் சைதன்னிய மகாரிஷி குபேரன்பூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்குத் தென்கிழக்கு ச-மைலில்.

78. தென்குடித்திட்டை.

(திட்டை) பசுபதீஸ்வரர் உலகநாயகி காமதேனு கௌதமர்

ஆதிசேடன் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ௪. மை

79. புள்ளமங்கை.

ஆலந்தரித்த ஈஸ்வரர் அல்லியங்கோதை தேவர்கள் அமுதங்கடைந்தபொழுது எழுந்த விஷத்தை அவர்களுய்யும்பொருட்டு அருந்திகண்டத்தி லடக்கினதும் சம்பந்தராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௨.

80. சக்கரப்பள்ளி.

ஆலத்துறையீஸ்வரர் பசுபதிநாயக ஈஸ்வரர் அல்லியங்கோதை பால்வளைநாயகி இந்திரன் குமாரனான சயந்தனும் தேவர்களும் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ௪-மைலில்.

81. திருக்கருகாவூர்.

(திருக்களாவூர்) சந்திரன், பங்கயன், 12 ராசிகள்பூசித்ததும்சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு ௪-மைலில்.

82. திருப்பாலைத்துறை.

பாலைவனநாதர் தவளவெண்ணகையம்மை, பிரமா, தேவர்கள் பூசித்ததும் தாருகாவனத்து இருடிகள் அனுப்பிய புலியையுரித்து சிவபெருமான் தரித்தருளினதும் அப்பராற் பாடற்பெற்றறுமான தலம் இதற்குத்தென்கிழக்கு உ - மைலில்.

83. நல்லூர்.

பெரியாண்ட ஈஸ்வரர் திரிபுரசுந்தரி பஞ்சபாண்டவர்கள் கிருஷ்ணன், வசுதேவன், பூசித்ததும் அப்பருக்குத் திருமுடியில் திருவடிசூட்டியருளியதும் அமர்நீதிநாயனார் முத்தியடைந்ததும் சம்பந்தர், அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ௫. மைலில்.

84. ஆவூர்ப் பசுபதீச்சரம்.

(திருஆவூர்) பசுபதீஸ்வரர், மங்களநாயகி, பசுக்கள், சப்தரிஷிகள், இந்திரன் முதலியோர்பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குவடக்கு ௪ - மைலில்.

85. திருச்சத்திமுத்தம்.

சிவக்கொழுந் தீஸ்வரர், பெரியநாயகி, ஈஸ்வரி சுவாமியைத்தழுவி முத்தமிட்டதும்அப்பராற் பாடற் பெற்றதுமான தலம்இதற்குத் தெற்கு ௧. மைலில்,

86. பட்டீச்சரம்.

பட்டீஸ்வரர், பால்வளைநாயகி சம்பந்தருக்குச்சிவபெருமான்முத்துப்பந்தல் கொடுத்தருளினதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ௧. மைலில்.

87. திருப்பழையாறைவடதளி.

(பழையாறை) வடதளிநாதர், கௌரியம்மை, சோமேஸ்வார், சோமகலைநாயகி, விசுவாமித்திரர்

பூசித்ததும் சமணர்களாலே மறைக்கப்பட்ட சிவபெருமான் அவ்வூரரசனால் சமணர்களைக் கழுவிலிடச்செய்து அப்பருக்குத்தரிசனங்கொடுத் தருளியதும் தக்கன்பெண்களில் 27 பெயர்களை மணந்த சந்திரன் ரோகணியிடத்து விசேஷபிரியம் வைத்திருப்பதாகக் கேட்டதக்கனால் தேய்ந்துபோகும்படி சாபம்பெற்று இங்குவந்து பூசிக்க மீதிநின்ற ஒரு கலையைச் சிவபெருமான் தன ஜடாபாரத்திற் சூட்டிக் கொண்டு சந்திரனைப்பார்த்து இக்கலை நம்மிடமிருக்குமளவும் உனக்கு யாதொரு குறைவுமின்றி நின்கலைவளர்தலும் தேய்தலு மாயிருக்குமென்று வரங்கொடுக்தருளியதும் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு க.

88. திருவலஞ்சுழி.

சித்தீஸ்வரர், கற்பகேஸ்வரர் நித்தியநாயகி, மங்களநாயகி, அமிர்தங் கடைந்த காலத்தில் முந்தியெழுந்த நுரை அமிர்தமொத்திருந்தமையால் அதையிந்திரன் ஓர் கணபதியாகச்செய்து ஆத்மார்த்தமாகப் பூசித்துவந்ததும்சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௬-மைலில்.

89. குடமூக்கு.

(கும்பகோணம்) கும்பேஸ்வரர், மங்களநாயகி, ஏமரிஷி.ஆதிசேடன் பூசித்ததும் 12 வருடத்துக் கொருமுறை சிங்கராசியில் குருவருங்காலத்தில் மாசிமாதம் மக நக்ஷத்திரத்தில் மாமாங்கமென்று வழங்கிவரும் அப்போது காசிதீர்த்தம் வரும்படியானதும் சம்பந்தர், அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௨ - மைலில்.

90. குடந்தைக் கீழ்க்கோட்டம்.

(கும்பகோணம்) இதை மடந்தையார் கோயிலென்றும் நாகேசுரன் கோயிலென்றும் வழங்கும் மடந்தை பாகர் பெரியநாயகி, சூரியன் விசுவகர்மாவின் மகளைக் கலியாணஞ்செய்து வாழுங் காலத்தில் அவள் அவனது வெப்பம் ஆற்றுதவளாய் தன் சாயையை ஓர் பெண்ணாக வைத்துவிட்டு ஒளிந்துக்கொண்ட சங்கதியை கேள்வியுற்ற விசுவகர்மா சூரியனுக்குக் காந்தியில்லாமல் போகும்படி சபிக்க சூரியன் இங்குவந்து பூசித்து அச்சாபத்தைப் போக்கிக்கொண்டதும் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்கிழக்கு ௨ - மைலில்.

91. திருக்குடந்தைக் காரோணம்

(கும்பகோணம்) இதைக் காசிவிசுவநாதன் கோயிலென்றும் வழங்கும் சோமநாத ஈஸ்வரர் தேனார் மொழியம்மை உமையவள் பூசித்துத் திருமணம்பெற்றதும் சந்திரன், மாந்தாதா, சத்தியகீர்த்தி, தேவசன்மா, முதலாயினோர் பூசித்ததும் கங்கை, யமுனை, சிந்து, சரஸ்வதி, நிர்

மதை. கோதாவரி, காவிரி முதலிய நதிகளும் தங்களிடத்து ஸ்நானஞ் செய்கிறவர்களுடைய பாபங்களைச் சுமக்கமுடியாமல் அப்பாபந் தீர்க்கும்பொருட்டு இந்த ஏம புஷ்கரணியில் ஸ்நானஞ்செய்து பாபம் போக்கிக்கொண்டதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௩ - மைலில்.

92 திருநாகேச்சுரம்.

சண்பகாரணிய ஈஸ்வரர் குன்று முலை நாயகி, இந்திரனும் நாகமும், பூசித்ததும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௩ - மைலில்

93. திருவிடைமருதூர்

(மத்தியார்ச்சுனம்) மருதப்பர், நன் முலைநாயகி, உருத்திரர்கள், உமாமகேஸ்வரி, விநாயகர் முருகர், பிரமா, விஷ்ணு, சப்தகன்னிகையர், சரஸ்வதி, இந்திரன், அயிராவதம், துவாதசாதித்தர், சந்திரன், அஷ்டதிக்குப்பாலகர் வேதங்கள், அஷ்டநாகங்கள் வசிஷ்டர், கபிலர், அகஸ்தியர், முதலிய முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிர ரிஷிகளும்பூசித்துப் பேறுபெற்றதும் மாணிக்கவாசகர் சிவவாக்கியர் வணங்கி வரம்பெற்றதும் வரதுணதேவருக்குப் பிரமஹத்தியை நீக்கி அவன் மனைவியையுட்கொண்டதும் பத்திரகிரியார் சிவலிங்கத்திலொடுக்கமானதும் பாம்பாட்டிசித்தர் சமாதியடைந்ததும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்குக்கிழக்கு ௩-மைலில்

94. தென்குரங்காடுதுறை.

(ஆடுதுறை) ஆபத்சகாய நாதர், பவழக்கொடியம்மை, சுக்கிரீவன், மிருகண்டன், பூசித்துவரம் பெற்றதும் சம்பந்தர், அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தெற்கு க-

95, திருநீலக்குடி.

(தென்னலக்குடி) நல்லநாயக ஈஸ்வரர், அழகாம்பிகை, வருணன், தெய்வ கன்னியர்கள், பூசித்ததும் இச் சிவபெருமானுக்கு எப்போதும் கற்காணத்தில் ஆடப்பட்ட எண்ணெயை அபிஷேகஞ்செய்து வருகின்றதும் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென் கிழக்கு ௩ - மைலில்.

96. வைகன்மாடக்கோயில்.

வைகனுதேஸ்வரர், வைகலாம்பிகை, சூரியன், தேவர்கள், பூசித்ததும், இங்கு மாடக்கோயிலென்றோர் தலமுண்டுகோமளேஸ்வரர், இளங்கோதையம்மை, வைகல், வேறு, மாடக்கோயில் வேறு, இவ்விரண்டுஞ் சேர்ந்து வைகல்மாடக்கோயில் என்று ஒரேபெயராய் வழங்குகின்றதும் இவ் விரண்டிற்கும் ஒன்றாய்ச் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ௫ - மைலில்.

97. திருநல்லம்.

(கோனேரிராஜபுரம்) உமாமகேஸ்வரர், மாமணீஸ்வரர், மங்களநாயகி, உமாமகேஸ்வரியும் தேவர்களும் பூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ௯ - மைலில்.

98. திருக்கோழம்பம்.

(திருக்கொழம்பியம்) கோகிலேஸ்வரர், சௌந்தரநாயகி, சந்தன் என்னும் வித்தியாதரன் தேவேந்திரனாற் சாபம்பெற்று குயிலாய்ப் பல காலஞ் சென்ற பின்பு இங்குவந்து பூசித்துப் பழைய உருவம்பெற்றுக்கொண்டதும் விஞ்சாஸ்திரிகள், தேவர்கள் பூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௧-மை

99. திருவாவடுதுறை.

(திருவாடுதுறை) மாசிலாமணிஈஸ்வரர், ஒப்பிலாமுலையம்மை, செம்பொற்றியாகேசர், சிவகாமியம்மை, பசு, தேவேந்திரன், முதலியதேவர்கள் ரிஷிகள் பூசித்ததும் சம்பந்தருக்கு ஆயிரம் பொன்னடங்கிய பொற்கிழி கொடுத்ததும், திருமூலநாயனர் முத்திபெற்றதும், கயிலாச பரம்பரையாகிய நமசிவாயமூர்த்திகள் ஆசாரிய பரம்பரையோர் மடாலயங்கொண்டெழுந்தருளியிருக்கின்றதும், மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௪ - மை

100. திருத்துருத்தி.

(குற்றாலம்) உத்தரவேதீஸ்வரர், முகிழாம்பிகை திருவொற்றியூரில்சங்கிலிநாச்சியார்பொருட்டு செய்த சத்தியந் தவறித் திருவாரூருக்குச் செல்ல எத்தனித்த சுந்தரருக்கு இருநேத்திரங்களும் தெரியாமல் போனதுமன்றி தேகத்திலும் கொடிய வியாதியுண்டாக அவ் வியாதி இத்தலத்து வடதிருக்குளத்தில் மூழ்கி ஷெ வியாதியை நீக்கிக்கொண்டதும் மூவராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு உ - மைலில்.

101. திருவழுந்தூர்.

(தேரழுந்தூர்) வேதபுரீஸ்வரர், சௌந்தராம்பிகை, ஓரரக்கன் ககனமார்க்கமாயேறி விடுத்த இரதத்தினிழலானது இச்சிவபெருமான்முடிமீது பட அப்போது ஷெ தேரானதுபூமியில் வந்துவிழுந்து அழுந்தும் படியருள் செய்ததும், வேதம், அஷ்டதிக்குப்பாலகர், விண்ணவர்கள், பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்கு வடகிழக்கு ௭ - மைலில்.

102. திருமயிலாடுதுறை.

(மாயவரம்) வதானியீஸ்வரர், மாயூரநாத ஈஸ்வரர், அபயப்பிரதாம்பிகை, அஞ்சநாயகி ஈஸ்வரி மயிலாகப் பூசித்ததும் பிரமா, விஷ்ணு, இலக்குமி, சரஸ்வதி, அகஸ்தியர், கண்ணுவர், முதலான அனேகர் பூசித்த

தும் காவிரி நதியில் துலாமாதமாகிற அற்பிசி மீ முதற்றேதிமுதல் துலாமுழுக்கும கடைசி தேதியில் கடைமுழுக்குங் கார்த்திகை மீ முதற்றேதியில் முடமுழுக்கும்முழுகிவரும் முக்கிய விசேடமுடையதும் குதம்பச்சித்தர் சமாதியடைந்ததும் சம்பந்தர் அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௧-மைலில்.

103. விளநகர்.

துறைகாட்டும்வள்ளல் காம்பன்ன தோளியம்மை அருள்வித்தனென்னும் ஓர் மறையவன் சுவாமிக்குச் சாத்திய பூக்களை மறுநாள் கூடையில் வைத்து நதியிற் போடவர அப்போது வெள்ள மேற்கொண்டு வேதியனை வெள்ளத்தி லடித்துக்கொண்டுபோக அப் பூங்கூடையை விடாமல் சிவபெருமானைத் தியானிக்க அவர் அருள்சுரந்து துறைகாட்டிக் கரையேறவிட்டு ஞானநெறியை உபதேசித்தருளியதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தெற்கு ௧-மைலில்.

104. திருப்பறியலூர்.

(பரசலூர்) வீரட்டானேஸ்வரர் இளங்கொடியாளம்மை அட்டவீரட்டத்தி லொன்றாகிய தக்கனைத் தலையறிந்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௧-மைலில்.

105. திருச்செம்பொன்பள்ளி.

(செம்பொனார்கோயில்)

சொர்ணபுரீஸ்வரர் சுகந்தவனநாயகி, இந்திரன், குபேரன், பூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௨-மைலில்.

106. திருநனிபள்ளி.

(புஞ்சை) நற்றுணையப்பர், பருவதராஜபுத்திரி, அஷ்ட வசுக்கள் பூசித்ததும் மூவராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௧-மைலில்.

107. திருவலம்புரம்.

(பெரும்பள்ளம்) வலம்புரிநாத ஈஸ்வரர், வடுவகிர்க்கண்ணம்மை, திருமால் பூசித்து வலம்புரிச் சங்குபெற்றதும் ஏரண்டமகாரிஷி முத்தியடைந்ததும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ௧-மைலில்.

108. தலைச்சங்காடு.

சங்கநாயக ஈஸ்வரர், செங்குருநாதேஸ்வரர், சௌந்தரநாயகி விஷ்ணு, அஷ்ட கஜங்கள் திக்குப்பாலகர்பூசித்ததும் விஷ்ணுவுக்குப் பாஞ்சசன்னியமென்னும் சங்கத்தைச் சிவபெருமான் தந்தருளியதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தெற்கு ௨-மைலில்.

109. திருவாக்கூர்த் தான்றோன்றிமாடம்.

(ஆக்கூர்) தான்றோன்றி ஈஸ்வரர், சுயம்புநாத ஈஸ்வரர். வாள்நெடுங்கண்ணி, கட்கநேத்திரிதேவி, இந்திரன், தேவர்கள் பூசித்ததும் சிறப்புலி நாயனார்

முத்தியடைந்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ௩ - மைலில்.

110, திருக்கடவூர்.

(திருக்கடையூர்) வீரட்டானேஸ்வரர். அமுதகடேசர், காலசங்காரமூர்த்தி, அபிராமியம்மை, அட்டவீரட்டத்திலொன்ருகிய நமனையுதைத்ததுங் காரியநாயனர், குங்கிலியக கலயநாயனர் முத்தியடைந்ததும்மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௨ - மை

111 திருக்கடவூர்மயானம்.

(திருமெஞ்ஞானம்) பிரமபுரீஸ்வரர் மலர்க்குழல் மின்னம்மை, பங்குனி மீ அசுவனி நக்ஷத்திரத்தில் அவ்வாலயத்திலிருக்கும் கிணற்றில் காசி கங்கை வருகின்றதும் மூவராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு எ - மைலில்

112. திருவேட்டக்குடி.

திருமேனியழகர், சுகந்தவன நாயகி அருச்சுனன், தவஞ்செய்யும்பொழுது சிவபெருமான் வேடரூபமாகவந்துவேடஞ்செய்தருளினதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ௬-மைலி

113. தெளிச்சேரி.

(கோயிற்பத்து) பார்வதியீஸ்வரர், சத்தியம்பாள் அருச்சுனனோடு வேடராக அமர்புரிந்து வில்லடிப்பட் டனுக்கிரகித்ததும், சம்பந்தரால் புத்தர்களைச்சைவர்களாக்கி யருளியதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு-உ

114. தருமபுரம்.

யாழ்மூறிநாதர், மதுரமின்னம்மைகை, பிரயன், தருமராஜன், அரம்பாஸ்திரீகள் பூசித்ததும் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனருக்காக சம்பந்தர் யாழ்மூறிபாடியதும் ஷை சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு கஉ-மைலில்

115. திருநள்ளாறு.

தெர்ப்பாரணிய ஈஸ்வரர், போகமார்ந்த பூண்முலையம்மை நள்ளாரப்பன், பிராணம்பாள், சப்தவிடங்கத்தி லொன்ருகிய நகரவிடங்கத்தியாகர் நளச்சக்கிரவர்த்தி பூசித்து சனிபகவானல் கலிநீங்கியதும் ஷை சக்கரவர்த்திக்காக சனிபகவான் அங்குவந்தெழுந்தருளி யிருக்கப்பட்டதும் சமணர்வாதின்பொருட்டு சம்பந்தர் அக்கினியிலிட்ட ஏடானது வேகாமலிருக்க அருள்புரிந்ததும் ஓரிடையனுக்குக் காக்ஷிகொடுத்ததும் மூவரால் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ௫-மைலில்.

116. கோட்டாறு.

(திருக்கொட்டாறம்) ஐராவதஈஸ்வரர், வண்டார்பூங்குழலி, வெள்ளையானை, தேவேந்திர முதலான தேவர்கள் பூசித்ததும

சம்பந்தராற் பாடற் பெற்றது மான தலம் இதற்குத்தென்மே ற்கு ‌டு - மைலில்.

117. திருவம்பர் பெருந்திருக்கோயில்.

(அம்பல் கீழ்க்கோயில்) பிரமபுரியீஸ்வரர், பூங்குழல் நாயகி பிரமன், பூசித்ததும் சிலந்திச் சோழராஜனுக்கு மணக்கோலமாகக் காக்ஷி கொடுத்ததும் சோமாசிமாற நாயனார் முத்தியடைந்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு க மைலில்.

118. திருவம்பர்மாகாளம்.

(திருமாளம்) காளகண்டேஸ்வரர், பக்ஷநாயகியம்மை மாதேவியம்மை, அரிகரப்புத்திரரது சேனைத் தலைவராகியமாகாளன் பூசித்ததும்ஷெயார்காவலிலொப்பிவைத்த இந்திராணியையிழுத்து சென்ற அசமுகியைக்கரங்களைத் துண்டித்ததும் சோமாசிமாறநாயனார் இத்தலத்தில் யாகஞ்செய்த காலத்தில் சிவபெருமான் நீசத்திருமேனியுடன் தோளில்கன்றுகுட்டியையும் அம்மன் தலையில் மதுகுடத்தையும் சுமந்துவந்து அவிப்பாகம் பெற்றதும் ஷெ நாயனார் முத்தியடைந்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேறகு ச—மை.

119. திருமீயச்சூர்.

(பேரளம்) திருமுயற்சிநாதர், சௌந்தரநாயகி, வருணன், மேகங்கள், பூசித்ததும்சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இக்கோயில் வடக்கு பிராகாரத்தில்

120. மீயச்சூரிளங்கோயில்.

(பேராளம்) சகல புவன ஈஸ்வரர், மேகலாம்பிகை, பிரமா, சரஸ்வதி, பூசித்ததும் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு க-மை

121. திலதைப்பதி.

[மதிமுத்தம்] முத்தீஸ்வரர் பொற்கொடி நாயகி, சந்திரன், நக்ஷத்திரங்கள், பூசித்ததும் இராமலக்ஷ்மணர்கள் தந்தைக்கு த திலதற்பணஞ் செய்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றது மான தலம் இதற்கு வடமேற்கு ச—மைலில்.

122. திருப்பாம்புரம்.

பாம்பீஸ்வரர், வண்டார்பூங்குழலி, ஆதிசேடன், நாகலோகத்தவர்கள் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத்தென்மேற்கு உ.

123. சிறுகுடி.

மங்களேஸ்வரர், மங்களநாயகி, செவ்வாய், கருடன், கந்தர்வர்கள் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு க.மைலில்.

124. திருவீழிமிழலை.

விழியழகேஸ்வரர், சுந்தரகுஜாம்பிகை, கார்த்தியாயன மகாரிஷியின், மகத்திற் றோன்றிய உமாதேவியாரைத் திருமணம்

புரிந்து மணவாளக் கோலத்துடன் எழுந்தருளி யிருக்கின்றதும் இதனால் பார்வதியாருக்குக் கார்த்தியாயனி யென்றொரு நாமமுடையதும் விஷ்ணு கண்ணைப்பரித்து அர்ச்சித்து சலந்திரா சூரனைக் கொன்றசக்கரத்தைப் பெற்றதும் பஞ்சம்வந்த காலத்தில் சம்பந்தர் அப்பர் இவர்களுக்குச் சிவ பெருமான் பஞ்சம் நீங்கும்வரையில் தினந்தோறும் கிழக்கு பீடத்திலும் மேற்கு பீடத்திலும் படிக்காசு வைத்தருளியதும் மூவராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குவடமேற்கு க மைலில்.

125. வன்னியூர்.

அக்கினியீஸ்வரர், பார்வதியம்மை, அக்கினிபகவான் பூசித்ததும் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ௩ . மைலில்.

126. கருவிலி.

(கொட்டிடை) சற்குண ஈஸ்வரர், சர்வாங்கநாயகி, தேவேந்திரன் முதலான தேவர்கள் பூசித்ததும் சற்குணனென்னு மரசன் பூசித்து பிறவிசாகரத்தைக்கடந்ததும் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ச . மைலில்.

127. பேணுபெருந்துறை.

[திருப்பந்துறை] சிவாநந்தநாதர், மலையரசி, சிவசத்தி, பிரமா, கிரகங்கள் பூசித்ததும் சம்பந்தராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குமேற்கு ௩ .மை,

128. திருநறையூர்.

சித்தநாதேஸ்வரர், சௌந்தரேஸ்வரர், திரிபுரசுந்தரி, அழகாம்பிகை, குபேரன், தேவர்கள், கந்தருவர்கள் பூசித்ததும்அப்பர் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு க - மைலில்.

129, அரிசிற்கரைப்புத்தூர்.

(அழகார்புத்தூர்) படிக்காசளித்த ஈஸ்வரர், அழகாம்பிகை உண்மையானந்த ரிஷி பூசித்ததும் புகழ்த்துணை நாயனருக்குப் பஞ்சமேலிட்டு பஞ்சந்தீருமளவும் பீடத்தின்கீழ் ஒவ்வோர் படிக்காசு வைத் தருளியதும் ஷெ நாயனர் முத்தியடைந்ததும் மூவராற் பாடற்பெற்றதுமானதலம் இதற்கு வடமேற்கு உ - மைலில்.

130. சிவபுரம்.

பிரமபுரிநாயகர், பெரியநாயகி, பிரமாபூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத்தென்மேற்கு உ - மைலில்

131. கலயநல்லூர்.

(சாக்கோட்டை) அமுதகலேயீஸ்வரர், அமுதவல்லி, தேவர்கள் அமுதம்பெற்ற சந்தோஷத்தால் பூசித்ததும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு க-மைலில்.

132. கருக்குடி.

(வலங்கிமான்) சற்குணலிங்

கேஸ்வரர், சர்வாலங்கார மின்னம்மை, விசுவாமித்திரன், சற்குணமகாராஜன், மார்க்கண்டன், இந்திரன் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு கச-மைலில்.

133. திருவாஞ்சியம்.

வாஞ்சலிங்கேஸ்வரர், மங்களநாயகி, வாழவந்தநாயகி. ஓர்நாக்கன்னிகை மிதவாஞ்சையோடு பூசித்துச் சிவபெருமானைத்தழுவி திருவுருவில் கலந்ததும் இந்திரன், இந்திராணிபூசித்ததும் மூவராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குக்கிழக்கு ச - மைலில்.

134. திருநன்னிலத்துப் பெருங்கோயில்.

(நன்னிலம்) பிரகாசநாதர், பிரகாசநாயகி, சூரியன் பூசித்துத் தன்னொளி மழுங்கலைப் பிரகாசஞ் செய்யப்பெற்றதும் சுந்தரராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு க.மை.

135. திருக்கொண்டீச்சுரம்.

பசுபதீஸ்வரர், சாந்தநாயகி, காமதேனு பூசித்துத் தன்னால் யாவருக்கும் பலபண்டங்களும் பரோபகாராமாய்க் கொடுத்துவரும்படி வரம்பெற்றதும் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு உ.

136. திருப்பனையூர்.

தியாகராஜர், சௌந்தரேஸ்வரர், பெரியநாயகி, மகாலட்சுமி, முசுகுந்தச்சக்கரவர்த்திபூசித்ததும்சம்பந்தர்சுந்தராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தெற்கு உ - மைலில்.

137. திருவிற்குடி.

வீரட்டானேஸ்வரர், மைவார்குழலி அட்ட வீரட்டத்திலொன்றாகிய சலந்திரா சூரனைத்தலையரிந்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்கு வடக்கு ச - மைலில்.

138. திருப்புகலூர்.

அக்கினியீஸ்வரர், கொந்தார்குழலி, அக்கினிதேவன் பூசித்ததும் அப்பரைச் சிவபெருமான் சிங்கரூபமாய் வந்துதரிசனந்தந்து தன் மலரடியிற் சேர்த்துக்கொண்டதும் சுந்தரருக்குச் சிவபெருமான் செங்கல்லைப் பொன்னாக்கித்தந்ததும் மூவராற்பாடற் பெற்றதுமான தலம் இவ் வாலயத்துக்கு வடபுறத்தில்.

139. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்.

வர்த்மானேஸ்வரர், கருந்தார்குழலி, மேகங்கள் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தெற்கு உ - மைலில்.

140. திருக்கண்ணபுரம்.

(இராமனதீச்சரம்) இராமலிங்கேஸ்வரர், கருவார்குழலி, கண்ணன், கண்ணுவர். மிருகண்டன், மார்க்கண்டன், தேவர்கள் பூசித்ததும், சம்பந்தராற்

பாடற்பெற்றதுமான தலம்இத ற்குத்தெற்கு உ-மைலில்.

141. திருப்பயற்றூர்.

(பயத்தங்குடி) திருப்பயற்றீஸ்வரர், காவியங்கண்ணி, பைரவரிஷி பூசித்ததும் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு ௬-மைலில்.

142. திருச்செங்காடு.

கணபதீஸ்வரர், திருக்குழன் மாதம்மை, கயமுகாசுரனால்து ன்பமடைந்த தேவர்கள் சிவ பெருமானிட முறையிட அவர் விநாயக மூர்த்தியைத் தந்தரு ளியபொழுது அவர் பூதகணங் கள் சூழ எழுந்தருளிவந்து அக்கயமுகாசுரனைத் தன் கொம் பையொடித்து அவன் மீதெரிந் து வென்றருளியதும் அப்பழி நீங்கும் பொருட்டு ஷை கணப தியால் பூசிக்கப்பட்டதும் சிறு த்தொண்டநாயனார் முத்திபெ ற்றதும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம்இத ற்கு வடகிழக்கு உ-மைலில்.

143. திருமருகல்.

மாணிக்கவண்ணஈஸ்வரர், வண்டார் குழலி,மார்க்கண்டேயர் பூசித்ததும் பாம்புகடித்திறந்து ட்டான ஓர் செட்டிப்பிள்ளையை சம்பந்தரா லெழுப்பிவைத்த தும் ஷை சம்பந்தர் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு உ-மைலில்.

144. திருச்சாத்தமங்கை அயவந்தி.

(சீயாத்தமங்கை) அயவந்தீஸ்வரர், மாந்தீஸ்வரர், இருமலர்க்கண் ணம்மை, தையலாம்பிகை, அஷ்டாவக்கிரரிஷி பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்கிழக்கு கு-மைலில்.

145. நாகைக்காரோணம்.

(நாகப்பட்டணம்) ஆதிபுராணேஸ்வரர், காயாரோகண ஈஸ்வரர்,நீலாயதாக்ஷி,கருந்தடங்கண்ணி சப்தவிடங்கத்தி லொன்றாகிய சுந்தரவிடங்கத்தியாகர், அகத்தீசர், இயமன், விஷ்ணு, வாசுகி முதலிய நாகங்கள் அவைகளின் கன்னியர்கள் சத்தரிஷிகள் விசுவாமித்திரர் பூசித்ததும் முசுகுந்தச் சக்கரவர்த்தி பிரமஹத்தியும் பாண்டியன் கயநோயும் விருத்தன் இந்திரன் தருமன் இவர்களைப்பற்றிய சாபங்களும் நீங்கப்பெற்றதும் காசியிலிருந்துவந்த புண்டரீகரிஷி ஆதி புராணேஸ்வரரைத் தரிசிக்கக் காயத்துடன் ஷை ரிஷியை ஆரோகணஞ் செய்துக் கொண்டதும் அதுமுதல் ஆதி புராணேஸ் வரருக்குக் காயாரோகண ஈஸ்வரரென்னு திருநாமமுடையதும் சுந்தரருக்குக் குதிரையும் சரிகையும்கொடுத்ததும் அதிபத்தநாயனார் முத்திபெற்றதும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு ௬-மைலில்.

146. சிக்கல்.

வெண்ணெய் விங்கேஸ்வரர், நவநீதநாதர், வேனெடுங் கண்

ணி, கிருஷ்ணன்வெண்ணெயை
த்திருடி யுண்டபாபம் போக்க
ப் பூசித்ததும் வசிட்டர், காம
தேனு பூசித்ததும் இவ்வாலயத்
திலெழுந் தருளியிருக்கும் சிங்
காரவேலர் சூரனைவிரட்டி வந்
து சம்மாரஞ் செய்தவிடமென
ச்சொல்லுகிறதும் சம்பந்தராற்
பாடற் பெற்றதுமான தலம் இ
தற்கு மேற்கு ரு-மைலில்.

147. கீழ்வேளூர்.

(கீவளூர்) அக்ஷயலிங்கேஸ்வ
ரர், வனமுலைநாயகி, அக்ஷயதே
வர் பூசித்ததும் அகஸ்தியருக்கு
வலதுதிருவடி தரிசனங் காட்
டிய சபாபதி முகூர்த்த முடை
யதும்சம்பந்தர்அப்பராற்பாட
ற்பெற்றதுமான தலம் இதற்கு
த்தெற்கு ௯-மைலில்.

148. தேவூர்.

தேவகுருநாதர், மதுரபாஷ
ணி, பிரகஸ்பதி பூசித்ததும் ச
ம்பந்தராற் பாடற் பெற்றதுமா
ன தலம் இதற்கு வடமேற்கு
எ-மைலில்.

149. பள்ளியின்முக்கூடல்.

[அரியான்பள்ளி] முக்கோ
ணஈஸ்வரர், மைமேவு கண்ணி
மூர்க்கரிஷிமுதலியோர் பூசித்த
தும் அப்பராற் பாடற்பெற்ற
துமான தலம் இதற்குத் தென்
மேற்கு ௩. மைலில்.

150. திருவாரூர்.

[திருவாரூர்] வன்மீகத்தியா
கர், புற்றிடங்கொண்டார், அல்
லியங்கோதை, சப்த விடங்கத்
திலொன்றாகிய வீதிவிடங்கத்தி
யாகர் வசிட்டர், கௌதமர்,
பிரமா விஷ்ணு இந்திரன் பூசித்
ததும் இலக்குமி பூசித்து மங்கி
லியம் பெற்றதும் நமிநந்தியடி
களுக்குச் சராசரங்களை யெல்
லாம் தம்முடைய சொரூபமாய்
க்காண்பித்ததும் ஷை நமிநந்தி
யடிகணாயனார் விறண் மிண்ட
நாயனார் தண்டியடிக ணாயனார்
கழற்சிங்க நாயனார் செருத்து
ணைநாயனார் முத்தி பெற்றதும்
மனுநீதிச் சோழராஜனை நீதி
சோதிக்கும் பொருட்டு சிவபெ
மான் பசுவும், இயமன், கன்று
மாக வந்து கன்றை அவ்வரச
குமாரனை வீதிவிடங்கன் ஏறி
விடுத்த தேர்ச்சக்கரத்தி லகப்
பட்டிறக்கச் செய்து பசுவாக
மாறின சிவபெருமான் ஆராய்
ச்சி மணியை அசைத்ததின்
பொருட்டு அரசன் கன்றின் ப
ழிக்காகத்தன்குமாரனைத்தேர்ச்
சக்கரத்தில் விட்டரைத்து மந்
திரியின்பழிக்காகத்தன்னுயிரை
மாய்த்துக்கொள்ள எத்தனித்த
போது உடனே சிவபெருமான்
யாவருக்கும் உயிர்கொடுத்தனு
க்கிரகித்ததும் சிவபெருமான்
தூதுநடந்து சுந்தரருக்குத் தி
ருமண நடத்திவைத்ததும் ஷை
சுந்தரருக்கு வலதுகண் தெரியு
ம்படி அருள் செய்ததும் கமல
முனி சமாதியடைந்ததும் மூவ
ராற் பாடற்பெற்றதுமான தல
ம் இவ்வாலயத்துக்குத் தென்கி
ழக்கில் ~~உ-மைலில்.~~

151. திருவாரூரறநெறி.

[திருவாரூர்] அகிலேஸ்வரர் அகிலேஸ்வரி, அசிதரிஷி, மார்க்கண்டேயர், பூசித்ததும் நமிநந்தியடிகளுயனுர் நீரால் விளக்கெரித்ததும் அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கருகில்.

152. திருவாரூர்ப் பரவையுண் மண்டளி.

(திருவாரூர்) பரவை யுண் மண்டலேஸ்வரர், பஞ்சின்மெல்லடியாள், தூருவாசகர், வருணன் பூசித்ததும் சுந்தரராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்மேற்கு உ-மைலில்.

153. திருவிளமர்.

(விளமல்) பதஞ்சலிமனோகரஈஸ்வரர், யாழினு மென்மொழியம்மை, பதஞ்சலி வியாக்கிரபாதர், முசுகுந்தன் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குவடமேற்கு ச-மைலில்.

154. கரவீரம்.

(கரயபுரம்) கரவீரஈஸ்வரர், பிரத்தியக்ஷ மின்னு ம்பிகை, கௌதமர் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குவடமேற்கு க-மை.

155. பெருவேளூர்.

(காட்டேரையன் பேட்டை) பிரியாத நாயகர், மின்னனையாள் சிவசத்தி பூசித்ததும் அப்பர் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குமேற்கு ங.

156. தலையாலங்காடு.

ஆடவல்லஈஸ்வரர், திருமடந்தை கபிலர் பூசித்ததும் தாருகாவனத்து ரிஷிகளா லனுப்பப்பட்ட முயலகன்மீது சிவபெருமான் நடித்தருளியதும் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு ச-மைலில்.

157. குடவாயில்.

(குடவாசல்) கோணேஸ்வரர் பெரியநாயகி, திரணபிந்துமுனிவர் பூசிக்கச் சிவபெருமான்திருக்குடத்தி னின்றும் பிரசன்னராய் அவரது குட்டரோயை நீக்கி யருளினதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு உ-மைலில்.

158. திருச்சேறை.

(உடையார்கோயில்) செந்நெறியப்பர், ஞானவல்லி, தௌமியர் பூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு உ-மைலில்.

159. நாலூர்மயானம்.

(நாத்தூர்) பல்லவனஈஸ்வரர், பெரியநாயகி ஆபத்தம்பரிஷி பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ச-மைலில்.

160. கடுவாய்க்கரைப் புத்தூர்.

(ஆண்டாங்கோயில்) சொர்ன புரியீஸ்வரர், சிவாம்பிகை, காசியர் பூசித்ததும் அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தெற்கு உ-மைலில்.

161. இரும்பூளை.

(ஆலங்குடி) காசியாரண்ணியஈஸ்வரர், ஏலவார்குழலி, விசுவாமித்திரர் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குமேற்கு ௯-மை.

162. அரதைப்பெரும்பாழி.

(அரித்துவாரமங்கலம்) பாதாளஈஸ்வரர், அலங்காரநாயகி இரணியாக்கனைக் கொன்று பூமியைமீட்டிய விஷ்ணுவுக்கு உன்மத்தங்கொண்டு பூமியை யழிக்கப்புகும்பொழுது சிவபெருமான் அப்பன்றியின் தந்தத்தைமுறித்து மாரிலணிந்துக்கொண்டதும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குமேற்கு உ-மைலில்.

163. அவளிவணல்லூர்.

சாக்ஷிநாயக ஈஸ்வரர், சௌந்தரநாயகி, ஓர் குருக்கள்பெண்ணுக்குச் சிவபெருமான் சாக்ஷி சொன்னதும் இடபாரூடமுகூர்த்தமா யெழுந்தருளி யிருக்கப்பட்டதும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்மேற்கு ௬-மை.

164. பரிதிநியமம்.

(பருத்தியப்பார்கோயில்) பருத்தியப்ப ஈஸ்வரர், மங்களநாயகி, சூரியன் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு க0.

165. வெண்ணியூர்.

(கோயில்வெண்ணி) வெண்ணிநாயக ஈஸ்வரர், அழகியநாயகி, தெத்தாத்திரேயரிஷி பூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமானதலம்இதற்குத் தென்கிழக்கு ௯-மைலில்

166. பூவனூர்.

புட்பவன ஈஸ்வரர், கற்பகவல்லி, சுகமுனிவர், கற்பகரிஷி, சுபுத்தி, சராசந்த னென்னு மறையவன் பூசித்ததும் அப்பராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்கிழக்கு ுி-மை.

167. பாதாளீச்சரம்.

(பாமுனே) சர்ப்பபுர ஈஸ்வரர், அமுதநாயகி, ஆதிசேடன், நாகலோகத்தர்கள், பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு கஉ - மைலில்.

168. திருக்களர்.

களைமுளையீஸ்வரர், அழகேஸ்வரி, பராசர், காளவமுனி பூசித்ததும் துருவாசகருக்கு நடனதரிசனங் காண்பித்தருளியதும், சம்பந்தராற் பாடற்பெற்

றதுமான தலம் இதற்குத் தெ ன்கிழக்கு ௬ - மைலில்.

169. சிற்றேமம்.

(எழிலூர்சேமம்) பொன்வைத்த நாயகர், அகிலாண்டேஸ்வரி, வியாசர், அத்திரி மகாரிஷி பூசித்ததும் ஆகாரமின்றி வருந்தும் விபுதனென்னு மடியாருக்குப் படியின்கீழ் நாடோறும் ஒருபொற்காசு வைத்து அவருக்குக் கனவில் கூறியருளியதும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு கஉ-மைலில்.

170. திருவுசாத்தானம்.

(கோயிலூர்) மந்திரபுரேஸ்வரர், பெரியநாயகி, ஸ்ரீராமர், லட்சுமணர், சாம்புவன், சுக்ரீபன், அனுமார் பூசித்ததும், சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ௬.

171. இடும்பாவனம்.

சற்குணநாத ஈஸ்வரர், மங்களநாயகி, இடும்பாசூரன், பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு க-மைலில்.

172. கடிக்குளம்.

(கைப்பனுகுளம்) கற்பகக் கோயில்) கற்பகேஸ்வரர், சௌந்தரநாயகி, கற்பகப்பிள்ளையார் பூசித்து சிவபெருமானிடம் மாம்பழம் பெற்றதும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு கஉ - மைலில்.

173. தண்டலைநீணெறி.

(தண்டலைச்சேரி) நீணெறிநாதர், ஞானம்பிகை, கூர்மாவதாரங்கொண்ட விஷ்ணு, முதுகில் மந்தரகிரியை நாட்டித் தேவர்கள் அமுதங்கடைந்தபோது அக்கூர்மம் அகங்கரித்துக் கடலைக்கலக்குவதைப்பார்த்து முறையிட்ட தேவர்களுக்காகச் சிவபெருமானிரங்கி அக்கூர்மத்தின் அகந்தையை யொழித்து அவ்வாமையோட்டை யணிந்தருளியதும் அரிவாட்டநாயனார் இச் சிவபெருமானுக்குச் செங்நெல்லரிசி மாவடு, செங்கீரை முதலானபலவகை நிவேதித்துப் பணிவிடைசெய்து முத்திபெற்றதும், இப்போதும் இச் சிவபெருமானுக்கு மேற்கண்டவை நிவேதனம் முக்கியமானதும் சம்பந்தராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு ௬ - மைலில்.

174. கோட்டூர்.

கொழுந்தீஸ்வரர், மதுரவசனம்பிகை, தேவர்கள் குச்சரரிஷி பூசித்ததும் சம்பந்தராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு ௬ - மைலில்.

175. வெண்டுறை.

(திருவெண்டதுறை) வெண்டுறைநாதர், வேல்நெடுங்கண்ணி, வித்தியாதரர், வண்டு, பூசித்ததும், சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௨ - மைலில்.

176. கொள்ளம்பூதூர்.

(செல்லூர் திருக்களம்பூர்) வில்வவனஈஸ்வரர், சௌந்தராம்பிகை, சாண்டிலியரிஷி பூசித்ததும், வெள்ள மேற்கொண்ட காவிரி நதியில் சம்பந்தருக்குத் தோணியில் மாலுமி யில்லாமல் வருவித்து தரிசனங் கொடுத்தருளியதும் ஷை சம்பந்தராற்பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு கஉ - மை.

177. பேரியில்.

(பேரையூர்) ஜகதீஸ்வரர், சகலபுவனேஸ்வரர், பெண்ணமிர்தநாயகி, மேகலாம்பாள், வருணன், பூசித்ததும் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தெற்கு ரு - மைலில்.

178. கொள்ளிக்காடு.

அக்கினீஸ்வரர், தீவண்ணநாதர், பஞ்சினு மெல்லடியம்மை, சநிட்சனரிஷி, சுமந்து ரிஷி, வீரபத்திரர், பூசித்ததும், சம்பந்தராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குக்கிழக்கு ௨-மை.

179. தெங்கூர்.

வெள்ளிமலையப்பன், பெரியநாயகி, அரிஹரப்புத்திரர், பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௨ - மைலில்.

180. நெல்லிக்கா.

(திருநெல்லிக்காவல்) நெல்லிவன ஈஸ்வரர், மங்களேஸ்வரி, தாருகாவனரிஷிகள் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு ச - மைலில்.

181. நாட்டியத்தான்குடி.

கரிநாத ஈஸ்வரர், மலர்மங்கைநாயகி, புகலகரிஷி நிபகண்டகரிஷி, யானை, பூசித்ததும், கோட்புலிநாயனர் முத்திபெற்றதும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ரு - மைலில்,

182. காறுயல்.

(திருக்காரவாசல்) கண்ணுயிரநாதர், கைலாய நாயகி, சப்தவிடங்கத்தி லொன்ருகிய ஆதிவிடங்கத் தியாகர் தேவேந்திரன், முசுகுந்தன் பூசித்ததும், சம்பந்தராற் பாடற் பெற்றதுமானதலம் இதற்குக்கிழக்கு ரு.

183. கன்றுப்பூர்.

(கன்ருப்பூர்) நடுத்தறியப்பஈஸ்வரர், மாதுநாயகி, இநெம்பாசூரன், பூசித்ததும் ஓர் பெ

ண்ணுக்காகக் கன்று குட்டிக்கு
கட்ட தறியிலிருந்து சிவபெரு
மான் உற்பத்தியானதும் அப்ப
ராற் பாடற்பெற்றதுமான தல
ம் இதற்குத் தெற்கு ௨-மை.

184. வலிவலம்.

மனத்துணைநாதர், வாளையங்
கண்ணி, காரணரெனும் ரிஷியு
ம், கரிக்குரிவியும் பூசித்ததும்
மூவராற் பாடற் பெற்றதுமா
ன தலம் இதற்குத்தென் மேற்
கு ௩-மைலில்.

185. கைச்சினம்.

கச்சிநாயக ஈஸ்வரர், வெள்
வளைநாயகி, திரணவிந்து என்
னுமுனிவர் பூசித்ததும் சம்பந்
தராற் பாடற்பெற்றதுமான த
லம் இதற்குக் கிழக்கு ௪-மை.

186. கோளிலி.

(திருக்குவளை) கோளிலிநாத
ர், வண்டமர்பூங்குழலி, சப்த
விடங்கத்திலொன்றாகிய அவ
னிவிடங்கத்தியாகர், கின்னரர்,
முசுகுந்தன் பூசித்ததும் சிவ
பெருமான் சுந்தரருக்குப் பூத
ங்கள் நெல் சுமந்து போய்
போடும்படியருளியதும் மூவ
ராற் பாடற்பெற்றதுமான தல
ம் இதற்குத் தென்கிழக்கு ௫.

187. திருவாய்மூர்.

வாய்மூரநாதர், பாலினு நன்
மொழியய்மை, சப்தவிடங்கத்
திலொன்றாகிய நீல விடங்கத்தி
யாகர், வாயுதேவன், முசுகுந்த
ன் பூசித்ததும் சம்பந்தர் அப்
பராற் பாடற்பெற்றதுமான த
லம் இதற்குத்தென்கிழக்கு ௯.

188. திருமறைக்காடு.

(வேதாரணியம்) வேதார
ணியஈஸ்வரர், மறைக்காட்டீஸ்
வரர், யாழைப்பழித்தமொழிய
ம்மை, சப்தவிடங்கத்திலொன்
றாகிய புவனவிடங்கத் தியாகர்,
வேதங்களும் முசுகுந்தனும் பூ
சித்ததும் வேதங்களினா லடை
பட்டிருந்த இவ்வாலயத்தின் க
தவைத்திரக்க முடியாமல் வே
றுவழியுண்டாக்கி உலகோர் சு
வாமி தரிசனஞ்செய்து வருவ
தை அப்பர் சம்பந்தரறிந்து தி
ருப்பதிகம்பாடி கதவைத்திரக்
க அப்பருக்கும் அடைக்கச் ச
ம்பந்தருக்கும் அனுக்கிரகஞ்
செய்து அன்றுமுதல் அவ்வா
லயக்கதவைத திரக்கவும் அ
டைக்கவுங் கூடுமானதா யிருக்
கின்றதும் மூவராற் பாடற்பெ
ற்றதுமான தலம் இதற்குத்தெ
ற்கு ௨-மைலில்.

189. அகத்தியான்பள்ளி.

அகத்தீஸ்வரர், மங்கைநாய
கி, அகத்தியர், தேவர்கள் பூசி
த்ததும் சம்பந்தராற் பாடற்
பெற்றதுமான தலம் இதற்குத்
தெற்கு ௭-மைலில்.

190. கோடிக்குழகூர்.

(கோடிக்கரை) அமர்தகடேசர், மையார்தடங்கண்ணி, வாயுதேவன் இன்றைக்கும் பூசிக்கின்ற ஐதிகமாகக் கடியகாற்றெழும்பும் படியானதும் பலதேவர்களும் இருடிகளும் பூசித்ததும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம்.

சோழநாட்டிலே காவேரிக்குத் தென்கரை முற்றிற்று.

௩-வது, ஈழநாடு.

191. திருக்கோணமாமலை.

[திருக்கொணமலை] திருக்கோண ஈஸ்வரர், மாதுமையாள், சகத்திரிஷி, போதாயனரிஷி, தேவேந்திரன்முதலானதேவர்கள் அசுரர்கள் விராதனென்னுமரசன் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென் கிழக்கு ௨00-மைலில்.

192. திருக்கேதீச்சரம்.

கேதீஸ்வரர், கௌரி யம்பிகை, பிருகுரிஷி, பருப்பதரிஷி மாலியவான் பூசித்ததும் சம்பந்தர் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம்.

☞ இவ்விரண்டு தலங்களும் தென்கீழ் சமுத்திரத்தின்மத்தியி லிருக்கின்றனவாம் ஈழநாடென்றால் யாழ்ப்பாணத்தைச் சார்ந்ததாம் சமயாசாரியர்கள் இராமேஸ்வரத்தி லிருந்த படி திருப்பதிகம் திருவாய்மலர்ந்தருளினராம் இவ்விரண்டு தலங்களும் இப்போது மண்மேடிட்டு மறைந்து விட்டனவாம்,

ஈழநாடு-முற்றிற்று.

௪-வது, பாண்டிநாடு.

193. திருவாலவாய்.

[மதுரை] இன்னு மனேகதிருநாமங்களுண்டு சொக்கநாதர், மீனாக்ஷியம்மை இவருக்கே இன்னும் பலநாமங்க ளுளவாம் சிவபெருமான் 64 திருவிளையாடலாடியதும் மூர்த்திநாயனர், குலச்சிறைநாயனர், மங்கையர்க்கரசியார், நெடுமாறநாயனர் முத்திபெற்றதும் சம்பந்தர்சமணர்களைக் கழுவி லேற்றியதும், சுந்தரானந்தர் சமாதியடைந்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குக்கிழக்கு க-மைலில்,

194. திருவாப்பனூர்,

(ஆவடையார்கோயில்) ஆயனூரீஸ்வரர், அம்பிகையம்மை, நந்திதேவர், அரிச்சந்திரன், சித்திரசேனன், குபேரன், பாட்களன், பூசித்ததும் ஓர்காலத்தில் வேட்டைக்குப்போன பாண்டியன் சிவதரிசனஞ் செய்யாமல் அன்னமருந்தா திருந்ததற்காகக் குதிரைகட்டிய ஆப்பினின்றும் பிரசன்னமாய்த் தரிச

னங் கொடுத்தருளியதும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென் மேற்கு டு-மைலில்.

195. திருப்பரங்குன்றம்.

பரங்கிரிநாயகஈஸ்வரர், ஆவுடைநாயகி, சிபிராசன் பூதானஞ்செய்யும் பொழுது சங்கற்பித்தவர்களில் ஒருவரில்லா தொழிய அரசன் வருத்த முறுவதுணர்ந்த சிவபெருமான் ஓர் வேதியராய்வந்து தானம் வாங்கினதும் சம்பந்தர் சுந்தரராற்பாடற்பெற்றதுமான தலம்

இத்தலம் முருகக் கடவுளுடைய ஆறுபடை வீடுகளிலொன்று. இவர் பராசர் புத்திரர்களைக் காத்தருளினவர். சூராதியர்களை வென்று இந்திரதெய்வயானையை மணம் புரிந்தது. ஓர் பெண் முருகாவென்று உரைப்பதைக்கண்ட அவள் கணவன் அப்படி சொல்லாதிருக்கப் பலமுறை சொல்லியுங் கேளாமையால் அவள் கையைச் சேதிக்க உடனே இம்முருக னருளால் கைவளர்ந்தது. அரிச்சந்திரன் பூசித்துப் புகழ்பெற்றது. மச்சமுனிநாதர் சமாதி யடைந்தது இதற்கு வடமேற்கு க0-மை.

196. திருவேடகம்.

ஏடகநாத ஈஸ்வரர், மாதேவியம்மாள், விஷ்ணு, கருடன், நாகராஜன், நெடுமாறநாயனர், இவர் முறையே நான்குயுகத்திலும் பூசித்ததும் பாசுபதம்பெறும்பொருட்டு விஜயன் செய்த தவத்திற்கிரங்கிச் சிவபெருமான் வேடவடிவமாய் வெளிப்பட்ட பொழுது மல்லுயுத்தஞ்செய்து வில்லினலடியுண்டவிற்றழும்பைத் திருமேனியி லடையாளமாகக் கொண் டருளியதும் சமணர்கள் வாதின்பொருட்டு சம்பந்தர் வைகையி லிட்ட ஏடானது எதிரேறி திருப்பாசுரம் வெளிப்பட்டதும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குவடகிழக்கு ஈடு.

197. கொடுங்குன்றம்.

(பிரான்மலை) கொடுங்குன்றேஸ்வரர், குயிலமுதநாயகி, மகோதரரிஷி, நாகராஜன், தேவேந்திரன் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்கிழக்கு உ0

198. திருப்புத்தூர்.

புத்தீஸ்வரர், சிவகாமியம்மை, உமாதேவியார், தேவேந்திரன், தேவகன்னிகை முதலியோர் பூசித்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத்தென்கிழக்கு ஈஉ-மை.

199. திருப்புனவாயில்.

(திருப்புனவாசல்) புனவாயீஸ்வரர், பழம்பதிநாயகர், கருணைநாயகி, சதுர் வேதங்களும் தேவேந்திரன் முதலான தேவ

ர்களும் பூசித்ததும் அப்பர் சுந்தரராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென் கிழக்கு சரு-மைலில்.

200. இராமேச்சுரம்.

இராமலிங்கேஸ்வரர், பருவதவர்த்தனி, அகஸ்தியர், அக்கினி, அசுவத்தாமன், அனுமார், இராமர், இலட்சுமணர், இலட்சுமி, கவிச்சம்பு, வானரங்கள், காசிபர், சரஸ்வதி, சங்கரபாண்டியன், தருமகுத்தன் இன்னுமனேகர் பூசித் தனுக்கிரகம் பெற்றதும் ஸ்ரீராமர் இராவணன்முதலிய ஆசுவேதியர்களைக்கொன்று அதிலடைந்த பிரமஹத்தி நீங்க சிவலிங்கம்ஸ்தாபித்துப் பூசிக்கக்கருதி வடகயிலையினின்று ஓர் லிங்கங் கொண்டு வரும்படி அனுமானையேவ அனுமான்வருவதற்குள் முகூர்த்தகாலஞ் சமீபித்ததால் சீதையம்மையால் மணலாற்செய்யப்பட்ட லிங்கத்தை ஸ்தாபித்துப் பூசிக்க மறுபடி வடகயிலையினின்றும் கொண்டுவந்த அனுமான் இதனை நோக்கித் தன்னாற் கொண்டுவந்தலிங்கத்தை ஸ்தாபிக்கப் பெறுமற்போனதால் மணலாற்செய்து பூசித்த லிங்கத்தை யெடுத்துவிட்டு தான்கொண்டுவந்த லிங்கத்தை வைத்திடலாமென்று நினைத்து அதைவாலாற் சுற்றி வலித்திழுக்கவாலறுப்புண்டு பலன் படாமற்போனதை யறிந்த இராமர் அனுமான் கொண்டுவந்த லிங்கத்தை இராமலிங் கேஸ்வரருக்கு அயலாகவடபக்கத்திற்றாபித்துப் பேறுபெற்றதும் இக்காரணத்தினலே இராமலிங்கமென்றும் இராமேச்சுரமென்றும் இராமர் பெயர் வழங்கிவருகின்றதும் அறுப்புண்ட அனுமார் வாலின் மூன்றுசுற்று ரேகைகளும் இப்போதும் லிங்கத்தின் மீது காணப்படுகின்றதும் பிரிதிதினமும் காசிதீர்த்தம் அபிஷேக மாகிவருகின்றதும் பதஞ்சலி சமாதியடைந்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ருo-மைலில்.

201. திருவாடானை.

ஆதிரத்ன நாயகேஸ்வரர், ஆடானைநாதர், அம்பாயிரவல்லி, வசுவெனு முனிவர், நாகக்கன்னிகை, சப்தகன்னியர்கள், சுக்கிரன், ஆடு பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்குமேற்கு உஉ-மைலில்,

202. திருக்கானப்பேர்.

[காளையார்கோயில்] காளையீஸ்வரர், மகமாயி கௌண்டினியமகாரிஷி நாகராஜன் தேவர்கள்பூசித்ததும்சுந்தரருக்குக் காளைவடிவத்தோடு தோன்றி நாமிருப்பது கானப்பே ரெனச்

சொல்லி யழைத்துவந்து தரிசனமளித்து அவரால் பாடற்பெற்றதும் மடிவில் யானைக்குப் ஆமைக்கும் மோக்ஷங் கொடுத்ததும் சம்பந்தர் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குமேற்கு உ0-மைலில்.

203. திருப்பூவணம்.

[திரிபுவனம்] பூவண்ண நாதர், மின்னும்பிகை, பப்புருவ மகாரிஷி, பூசித்ததும் பொன்னனையா ளென்னும் உருத்திர கணிகை சுவாமியின் திருவுருவத்தைஅமைக்கக்கருதி பொருள் சேர்த்தும் போதாமையால் மனமெலிவடைய அதையுணர்ந்த எம்பெருமான் திருவுளங்கொண்டு சித்தராயெழுந்தருளி ரசவாதஞ் செய்துக்கொடுக்கப் பொன்னாற்றிருவுருவு சமைத்த அப்பொன்னனையாள் சிவபெருமானது அழகிய திருவுருவத்தைக் கண்டு அச்சோ என் அழகிய பிரானேஎன்று வலது கபோலத்தைக்கிள்ளி முத்தமிட இக்குறியைச் சிவபெருமான் இக்காலத்திலும் காணும்படி அடையாளமாக அணிந்தருளியதும் அதனால் இம் முகூர்த்தத்திற்கு அச்சோஅழகோ என்று திருநாமமுடையதும் சேரன், சோழன், பாண்டிய னென்னும் மூவரசர்களும் தொழுதருள் பெற்றதும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு கூ - மைலில்.

204. திருச்சுழியல்.

திருமேனிநாதர், துணைமாலையம்பிகை, சதானந்தர், சௌனகர், தேவர்கள் பூசித்ததும் சுந்தரராற் பாடற்பெற்றது மான தலம் இதற்குத் தென் மேற்கு க00 - மைலில்.

205. திருக்குற்றாலம்.

[திரிகூடாசலம்] இன்னும் பல திருநாமமுள்ளது, குற்றாலநாதர், குறும்பலா ஈஸ்வரர், குழலவாய் மொழியம்மை, அகஸ்தியர், வாசுகி, கவுற்சனர், புஷ்பகந்தர், முதலாயினோர் பூசித்ததும் ஓர் மதயானை, நீர்விடாவின்பொருட்டு அருவிநீரைத் துதிக்கையால் முகந்து சிதற அதனைப் பூசனையாகக்கொண்டு அனுக்கிரகித்தருளியதும் அகஸ்தியர் பொதிகைக்கெழுந்தருளும்போது இத்தலம் வைணவத்தலமாயிருந்ததை யுணராமல் இதன்வழியே செல்ல அங்கிருந்த வைணவர்கள் அவர்தரித்திருந்த சிவ சின்னங்களைக்கண்டு துரத்த அவர் புறம்போய் அவ்வைணவர்களைப்போல் வடிவங்கொண்டு அவர்களனுமதிபடி ஆலயத்துட் பிரவேசித்து விஷ்ணுவைத்தமது திருக்கரத்தால் குழைவித்துச் சிவலிங்கப் பெருமானைச் செய்து பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் [இதுதிருநெல்வே

விஜில்லா] இதற்குத்தென்கிழக்கு ௨௫ - ஸ்மைலில்.

206. திருநெல்வேலி.

வேணுநாதேஸ்வரர், நெல்லுக்கு வேலிகட்டும் நெல்வேலிநாதர், சாலிவாடீஸ்வரர், காந்திமதியம்மை, வடிவம்மை, பஞ்சகாலத்தில் நைவேதிப்பதற்குஅருமையாய்க் கொண்டுவந்து உலர்த்திய நெல்லைப் பெருமழையில் வெள்ளமடித்துக்கொண்டு போகாவண்ணம் வேலிகட்டி காத்தருளியதால் நெல்வேலியென்று பெயராயிற்றதும் தக்கன் யாகத்தடைந்து உயிர்விட்ட பார்வதியார் இமயமலைக் கரசனாகிய மலையரயனுக்குப் பிள்ளையாயவதரித்துத் தவஞ்செய்ய சிவபெருமான் ஐப்பசி மீ உத்திரநாளில் திருமணஞ்செய்தருளியதும் முழுகண்ட ராமபாண்டியன் அரசுசெலுத்தும் பொழுது அவருக்குப்பால்கொண்டுவரும் ஓரிடையன் பலகாலுங் கால்தடுக்கிப் பால்கவிழ்க்கப்பெற்று வளர்ந்த எம்பெருமான் அவ்விடையன் கோடரியால் வெட்டிய வடுவைத்தாங்கி அவனுக்கும் அரசனுக்கும் பிரசன்னராய்க் காக்ஷி கொடுத்தருளியதும் அகஸ்தியர் சுவேதமுனிவர் பிரமா விஷ்ணு நாரதர்இந்திரன்தேவர்கள்நாகம்யானை முதலாயினோர் பூசித்ததும் பொற்றாமரையில் குளித்தபெண்கள் கரையில்வைத்த ஆடைகளைக் காற்றடித்துச் செல்லஅப்பெண்கள் கரையேற வருந்திய பொழுது சிவபெருமான் அவ்வாடைகளைக் கொடுத்தருளியதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்.

பாண்டிநாடு - முற்றிற்று.

5. வது, மலைநாடு.

207. திருவஞ்சைக்களம்.

அஞ்சைக்களத்தீஸ்வரர், உமையம்மை பரசிராமன் தன்தாயாரைக்கொன்ற பழிநீங்கும் பொருட்டுப் பூசித்ததும் எடுத்த உடலுடன் நொடித்தான் மலையென்னும் கயிலாயத்துக் கெழுந்தருளும்படி சுந்தரருக்கு வெள்ளையானையையனுப்ப அவ்வானையின்மீது ஆரோகணித்துக்கொண்டு தமது தோழராகிய சேரமான் பெருமாணாயனாரை மனதினினைத்து அவருடனனேகங் கோடி சூரியப் பிரகாசம்போல ஒளிவீசவும் அவ்வொளியை வியாக்கிரபாத ரிஷியின் புத்திரரும் திருப்பாற் கடலையுண்டவருமாகிய உபமன்னிய மகாரிஷி முதலிய அனேக மகாரிஷிகள் தொழவும் கயிலையடைந்ததும் ஷை சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம்.

மலைநாடு - முற்றிற்று.

6 - வது, கொங்கநாடு.

208. புக்கொளியூர் அவிநாசி.

[அவிநாசி] அவிநாசியீஸ்வரர், பெருங்கருணைநாயகி, உமாமகேஸ்வரி, பிரமா, அகஸ்தியர், தேவ ரம்பை, தருமசேனன் பூசித்ததும் முதலைவாயிலிருந்து பிள்ளையை உமிழும்படி சுந்தரர் தேவாரப்பதிகம் பாடியருளியதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு ச—மைலில்.

209. திருமுருகன்பூண்டி.

முருகேஸ்வரர், ஆவிடைநாயகி, மாதவிவனேசர், மங்களநாயகி, முருகன் பூசித்ததும் சிவபெருமான் பூதங்களை வேடர்வடிவமாயனுப்பி சுந்தரர்பொருளைப்பரித்து மறுபடியும்கொடுத்து அவரால் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு கூ0—மைலில்.

210. திருநணா.

[பவானி] சங்குமுக நாதர், வேதமங்கை, பவானி நதியும் காவிரிநதியுங் கூடுமிடம் பராசர் குபேரன் மானுதானரிஷி பூசித்ததும் விஸ்வாமித்திரர் பூசித்து பிரமரிஷி யானதும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத்தெற்கு கஉ.

211. கொடிமாடச் செங்குன்றூர்.

[திருச்செங்கோடு] அர்த்தநாரீஸ்வரர், அர்த்தநாரீஸ்வரி, பாகம்பிரியாள், உமாதேவியார் சிவபெருமானை யென்றும் பிரியாமல் அர்த்தபாகம் பெற்றதினால் ஓர்பாகம் ஆண்ரூபமாகவும் மற்றோர்பாகம் பெண்ரூபமாகவும் பிரிங்கிமகாரிஷிக்காக அவதாரமானதும் தேவர்களும் ரிஷிகளும் பூசித்து வரம்பெற்றதும் இந்நாட்டிலடையும்நளிர்ச்சுரம் என்றும் அணுகாதிருக்கு ம்வண்ணம் சம்பந்தராற் பதிகமோதி நீக்கி வைத்ததுமானதலம். இதுமுருகப்பிரானது குன்றுதோ ராடல்களி லொன்றுஇதற்குத் தென்கிழக்கு கூ0.

212. வெஞ்சமாக்கூடல்.

[வஞ்சமாங்கூடலூர்] விகிர்தேஸ்வரர், விகிர்தேஸ்வரி, வெஞ்சனென்னு மசுரன் பூசித்ததும் இந்திரன் அகலிகையைச்சேரும்பொருட்டுச் சேவலாய்க்கூவிக் கௌதம ரிஷியை வஞ்சித்த பாபம் நீங்கப் பூசித்ததும் சுந்தரராற் பாடற்பெற்றதுமானதலம் இதற்கு வடமேற்கு உ0—மைலில்.

213. திருப்பாண்டிக்கொடுமுடி

(கொடுமுடி) கொடுமுடிநாதர், பண்மொழிநாயகி, விநாயகர், அகஸ்தியர் பூசித்ததும் விஷ்ணு புஜங்க சயனராய்மேற்கு முகமா யிருந்தும் பிரமா வன்னி விருக்ஷத்தின் கீழிருந்

தும் சிவபெருமானைப் பூசிக்கின்றதும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு கo—மைலில்.

214. திருக்கருவூர்த் திருவானிலை.

(கருவூர்) பசுபதீஸ்வரர், கிருபாநாயகி, வடிவாம்பிகை, தேவர்கள், திக்குப்பாலகர்கள், சுக்கிரன், முசுகுந்தன், கோபிதாரன், பிரமதேவன், பூசித்ததும் எறிபத்தநாயனர், புகழ்ச்சோழ நாயனர், முத்திபெற்றதும். கருவூர் தேவர் சமாதியடைந்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்.

கொங்கநாடு - முற்றிற்று.

7—வது,

மகதநாடு அல்லது நடுநாடு.

215. திருநெல்வாயிலறத்துறை

அறத்துறையப்பர், ஆனந்தநாயகி, சப்தரிஷிகள், இந்திரன், பூசித்ததும் சிவபெருமான் சம்பந்தருக்கு முத்துக்குடை, முத்துச்சின்னம், முத்துச் சிவிகையனுப்பி அவராலும், மற்ற இருவராலும் பாடற்பெற்றதுமான தலம் இதற்குவடகிழக்கு ச—மைலில்.

216. தூங்கானைமாடம்.

(பெண்ணாடம்) சுடர்க்கொழுந்தீஸ்வரர், கடந்தநாயகி, சப்த கன்னிகையர், வெள்ளையானை, இந்திரன், காமதேனு, பூசித்ததும் அப்பர் தன் தோளில் சூலக்குறியையும் இடபக் குறியையும் பெற்றதும் கலிக்காமநாயனர் முத்திபெற்றதும் சம்பந்தர் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு கரு—மைலில்.

217. கூடலையாற்றூர்.

நெறிகாட்டு நாயகர், புரிகுழலாம்பிகை, வடமேற்கிலிருந்து மணிமுத்தாநதியும் தென்மேற்கிலிருந்து நீவா நதியென்னும் வெள்ளாறும் இவ்விரண்டுமொன்ருய்க்கூடி கிழக்கே போகிற படியால் கூடலையாற்றூரெனப் பெயர்வாய்ந்ததும் வான்மீகர், பூசித்ததும் சுந்தரர், விருத்தாசலத்துக்குப் போகும் பொழுது சிவபெருமான் ஓர் வேதியராய்த்தோன்றி இது கூடலையாற்றூர் மார்க்கமாய் விருத்தாசலத்துக்கு ஏகும் வழியென்று வழி மறித்தழைத்து அவரால் பதிகம் பெற்றதுமான தலம் இதற்கு மேற்கு அ—மைலில்.

218. திருவெருக்கத்தம் புலியூர்.

(நாகேந்திரப்பட்டணம்) நீலகண்டேஸ்வரர், நீலமலர்க்கண்ணி, சூரியன், ஆதிசேடன், பூசித்ததும் வெள்ளருக்கன் செடியின்கீழ் சுவாமி உற்பவித்ததும்

சம்பந்தராற் பாடற் பெற்றது மான தலம் இதற்கு வடகிழக்கு உ௫—மைலில்,

219. திருத்தினைநகர்.

(தீர்த்தநகரி) திருந்தீஸ்வரர், ஒப்பிலாநாயகி, மறைமுனிவர், பூசித்ததும், தினையமுதுநைவேதனமுடையதும் சுந்தரராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு சு—மைலில்.

220. திருச்சோபுரம்.

(தியாகவல்லி) சோபுரநாதர், சோபுரநாயகி, ஓர் தம்பிரான் கண்டறிந்ததும் அகஸ்தியர், பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு உஉ—மைலில்.

221. திருவதிகை.

(திருவதி) வீரட்டானேஸ்வரர், திரிபுரசுந்தரி, பெரியநாயகி அட்டவீரட்டத்திலொன்ருகிய திரிபுரத்தைச் சிரித்தெரித்ததும் கருடன், பிரமா, விஷ்ணு, பஞ்சபாண்டவர், பூசித்ததும்சுந்தரருக்குத் திருவடி சூட்டியதும் அப்பருக்குச் சூலநோய் தீர்த்ததும் மூவராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு கஉ—மைலில்.

222. திருநாவலூர்.

(திருநாமநல்லூர்) நாவலேஸ்வரர், சுந்தரநாயகி, விஷ்ணு, சண்டீசர், சுக்கிரன், பூசித்ததும் சுந்தரர் திருவவதாரஞ்செய்ததும் சடையநாயனர் இசைஞானியார் நரசிங்கமுனையரை நாயனர் முத்திபெற்றதும் சுந்தரராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தெற்கு உ0—மைலில்.

223. திருமுதுகுன்றம்.

(விருத்தாசலம், பழமலை) பழமலைநாதர்பெரியநாயகிவிருத்தாம்பிகை, அட்டவசுக்கள், பார்வதிதேவியார், அகத்தீஸ்வரர், விபசித்து சிவனன்னன், முதலியவர்கள் பூசித்ததும் விஷ்ணு, காதுக்குறிம்பியில் பிறந்தமதுகைடவர்கள் என்னும் இரண்டுராக்ஷதர்களைச் செயிக்கும்படி விஷ்ணுபூசிக்கச் சிவபெருமான் விருத்த சொரூபமாக வந்துஅனுக்கிரகஞ் செய்ததும் சுந்தரருக்கு மணிமுத்தா நதியில் விட்டு திருவாரூர்க் கமலாலய மென்னுந் திருக்குளத்தில் எடுத்துக் கொள்ளும்படி பன்னீராயிரம் பொன்கொடுத்ததும் மூவராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குவடமேற்கு உ0-மைலில்.

224. திருநெல்வெண்ணெய்.

(நெய்வெண்ணெய்) வெண்ணெயப்பர், நீலமலர்க்கண்ணம்மை, சனகர், சனந்தகர், சனாதனர், சனர்க்குமாரர் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு கடு-மைலில்.

225. திருக்கோவலூர்.

(கீழூர்) வீரட்டானேஸ்வரர், சிவானந்தவல்லி, அட்ட வீரட்டத்திலொன்றாகிய அந்தகாசூரனைக்கொன்றதும் மெய்ப்பொருளுயனார் முத்தி யடைந்ததும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு க-மைலில்.

226. அறையணிநல்லூர்.

(அறைநண்ட நல்லூர்) அறையணிநாயகர், அருள்நாயகி, பிரசண்டரிஷி பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்குத்தென்கிழக்கு கO

227. இடையாறு.

இடையாற்றீஸ்வரர், சிற்றிடைநாயகி, ஞானம்பாள், சுகப்பிரம்மரிஷி பூசித்ததும் சுந்தராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்குக்கிழக்கு ௯-மைலில்.

228. திருவெண்ணெய்நல்லூர்.

தடுத்தாட்கொண்டவர், கிருபாபுரியீஸ்வரர், வேற்கண்ணியம்மை, சாண்டிலயமுனி சம்பு பத்தரிஷி பூசித்ததும் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டதும் சந்தானகுரவரில் ஒருவராகிய மெய்க்கண்டதேவர் முத்தி பெற்றதும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குவடகிழக்கு கசு-மைலில்

229. துறையூர்.

(திருத்தளூர்) பசுபதீஸ்வரர், துறையூரப்பர், பூங்கோதைநாயகி, நாரதர் பூசித்ததும்சுந்தரருக்குத் திருமுடி சூட்டியதுந் தவிர குரு முகூர்த்தமா யெழுந்தருளி உபதேசஞ் செய்ததும் அப்போது சிவபெருமானுக்குச் சிட்டகுருநாதரென்றும் அம்மனுக்குச் சிவலோகநாயகியென்றும் பெயர்பெற்றதும் சந்தானகுரவரில் ஒருவரான அருணந்தி சிவாசாரியார் முத்தி பெற்றதும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு கஉ-மைலில்.

230. வடுகூர்.

(திருவாண்டார்கோயில்) வடுகீஸ்வரர், வடுவகிர்க்கண்ணியம்மை, பஞ்சநதியீஸ்வரர், திரிபுரசுந்தரி, உக்கிரவீரியரிஷி வயிரவர் பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்.

இதற்குக்கிழக்கு சு-மைலில் வில்வநல்லூரில் ஓர் தலமுண்டு சுவாமி திருக்காமீஸ்வரர், அம்மன் கோகிலாம்பாள், மன்மதன் இரதி தேவேந்திரன் ஆதிசேடன்பூசித்ததும்வில்வவனத்தடியில் ஓர் புத்திடமாகச் சுயம்புலிங்கமாயெழுந்தருளியதுமான தலம் ஆற்றுக்குப் போகிறமார்க்கத்தில் ஓர் விநாயகராலய மிருக்கின்றது இவ்விநாயக ராலயத்

தில் சுந்தரர் வந்திறங்கிஇச்சிவ பெருமான் திருநாம மென்ன வென்று கேட்கத் திருக்காமீஸ் வரரென்று சொல்ல காமியை ப்பாடினால் காமத்தைக் கொடு ப்பாரே யொழிய பொருளைக் கொடுக்காரென்று அவர் மீது பாடாமற் போய்விட்டார். சுந் தரர் வந்திறங்கிய அவ்விநாயக ருக்கு அன்றுமுதல் சுந்தரமூர் த்தி விநாயகரென்று வழங்கிவ ருகின்றது சிலர் இவ்விநாயகர் மீது பாடினதாகச்சொல்லுவார் கள் அதுவுமில்லை ஏனெனில் ச மயாசாரியர்கள் சிவனை யன்றி வேறொருவர் மீதும் பாடினவ ரல்ல. வடகூருக்குத் தென்கிழ க்கு கச-மைலில்.

231. திருமாணிக்குழி.

மாணிக்கவரதஈஸ்வரர், மா ணிக்கவல்லி, விஷ்ணு, வாமன வதாரத்தில் சிவபக்தனாகிய மா பலிச்சக்கரவர்த்தியைமோசஞ் செய்து பாதாளத்தி லழுத்திய பாபம்போக விஷ்ணு மாணிக்க த்தைவைத்து பூசித்ததும் அமி ர்தம் பங்கிட்டபோது விஷ்ணு எடுத்தமோகினி யுருவைப் பர மசிவன் ஆலிங்கனஞ்செய்ய அ வ்வுருவில் மூன்றாவது கண் ச டை சந்திரன் முதலியவைக ள் ஒட்டிக்கொண்டதினால் இங் கிருக்கும் விஷ்ணு சங்குசக்கர கதாதாரராய் நெற்றியில்நேத்தி ரமும் சிரசில் சடையும் சந்திர னையும் உடைத்தாய் தேவநாத ரென்றும் பூவராகமூர்த்தி யெ ன்றும் சொல்லப்படுகின்றதும் கருடன் இந்திரன் ஆராதித்து ப் பேறுபெற்றதும் சம்பந்தரா ற்பாடற் பெற்றதுமான தலம்.

தாருகா வனத்து ரிஷிபத்தி னிகளால் மாணியறுந்து விழக் கடவதென்று சிவபெருமானைச் சபிக்க அதுபோல் மாணியறுந் து விழுஞ்சமயத்தில் விஷ்ணு யோனியாகத்தோன்றி அதை த்தாங்கிக் கொண்டாரென்றும் அதினால் திருமாணிக்குழியென் று பேர்பெற்றதென்றும் சிலர் சொல்லு கின்றனர். இதற்குவ டகிழக்கு எ - மைலில்.

232. திருப்பாதிரிப்புலியூர்.

(திருப்பாப்பூர்,பாடலிபுரம், வடபுலியூர்) தோன்றாத் துணை நாதர், பாடலீஸ்வரர், தோகை நாயகி, பெரியநாயகி வியாக்ர பாதர் பூசித்ததும் கல்லோடுக ட்டி கடலிலெரியப்பட்ட அப் பரைக் கரையேற விட்டதும் ஷெ அப்பர் சம்பந்தராற்பாட ற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு எ-மைலில்.

233. திருமுண்டீச்சுரம்.

(திருக்கண்டேஸ்வரம்) முண் டீஸ்வரர், கானார்குழலி, இந்தி

ரன் பூசித்ததும் பிரம தேவனு க்குப் பிரமஹத்தி போக்கியது ம் அப்பராற் பாடற் பெற்றது மான தலம்.

அப்பர் இவ்வாலயத்திற்கு வ ந்து தேவாரப்பதிகம் பாடிய போது சுவாமி நடனஞ்செய்த மையாலும் அம்மன் அஸ்தத் தினால் தாளம் போட்டமையா லும் சுவாமிக்கு நடனபாதேஸ் வரரென்றும் அம்மனுக்குஅஸ் ததாளாம்பிகை யென்றும்பெய ர் இதற்குவடமேற்கு கஎ-மை.

234. திருப்பனங்காட்டூர்.

(பரையவரம்) பனங்காட்டீ ஸ்வரர், திருப்புறவாம்பாள், அ மிர்தவல்லி, வித்தியாதரர், பூசி த்ததும் சிபிச்சக்கர வர்த்திக்கு அருளளித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் சித்திரை மீ முதல் தேதிமுத ல் எ- தேதிவரைக்கும் சூரிய கிரணமானது சுவாமி பாதத்தி ற்றோன்றி யங்கிருந்து சிரசுவ ழியா யேறி மறைந்தவுடன் அ ம்மன் பாதத்திற் றோன்றியங்கி ருந்து சிரசுவழியாயேறி மறை ந்து விடுகிறது இப்போது மது போல கண்டுதரிசிக்கக் கூடுமா னது அற்புதம்! அற்புதம்! இத ற்கு மேற்கு ய மைலில்.

235. திருவாமாத்தூர்.

ஈமார்த்தஈஸ்வரர், அபிராமியீ ஸ்வரர், அழகியநாயகி, முத்தா ம்பிகை, கோடிமகாரிஷியும் கா மதேனுவும் பூசித்ததும் மூவ ராற் பாடற்பெற்றதுமான தல ம் இதற்கு வடமேற்கு கூ டு.

236. திருவண்ணாமலை.

(அருணாசலம், சோணாசலம்) அருணாசலஈஸ்வரர், அண்ணா மலையார், உண்ணாமுலையம்மை, நினைக்கமுத்தி பஞ்சலிங்கத்தி லொன்றாகிய தேயுலிங்கமுடை யதும் சிவபெருமான் வல்லாள ராஜனுக்குப் புத்திரனாகத்தோ ன்றி உத்தர கிரியை வருடா வருடம் நடத்தி வருகின்றதும் பிரதக்ஷணம் வந்த புழு - பூனை அசுவ முதலியவைகள் தேவக ணமானதும் விஷ்ணுவராக அ வதாரமாய்ச்சிவபெருமான்திரு வடியைக் காண தயரவும் பிர மன் அன்ன ரூபமாய்த் திருமு டியைத்தேடி மொழிமாறி துக் கத்தையடையவும் அப்போது சிவபெருமான் அக்கினித்தம்ப மாய்நின்றதும் கிரேதாயுகத்தில் அம்மலை அக்கினிமலையாயும் தி ரேதாயுகத்தில் சுவர்ணமலையா யும் துவாபரயுகத்தில் தாம்பிர மலையாயும் கலியுகமாகிற இந்த நாலாவது யுகத்தில் கல்மலையாயு மிருக்கின்றதும் கார்த்திகைமீ கார்த்திகை நக்ஷத்திரத்தில் சிவ பெருமான் சுடரொளி போற் றோற்றுகின்றதும் இடைக்காட் டு சித்தர் சமாதியடைந்ததும்

அப்பர் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம்.

மகதநாடு ௭ அல்லது ௯ கடிநாடு முற்றிற்று.

---

8 - வது, தொண்டநாடு

237. திருவேகம்பம்.

(காஞ்சிபுரம்) ஏகாம்பர நாதர், காமாக்ஷியம்மை, பஞ்சலிங்கத்திலொன்முகிய பிருதுவிலிங்கமுடையதும்இவ்வாலயத்துள் நல்லகம்பம், வெள்ளக்கம்பம் கள்ளக்கம்பம், திருமயானம், வாலீச்சுரம், என்னும் பஞ்சப்பிரம தலங்கள்சிறந்திருக்கின்றதும் அவைகளில் நல்லகம்பம் உருத்திரன் பூசித்ததும்வெள்ளக்கம்பம் பிரமாபூசித்ததும் கள்ளக்கம்பம் விஷ்ணு பூசித்ததும் திருமயானம் வண்டாசூரன் பூசித்ததும், வாலீச்சுரம் வாலிபூசித்து எதித்தவர் பலத்தில் பாதிதானடைய வரம்பெற்றதும் கண்ணிழந்த சுந்தரருக்கு இடதுகண் தெரியும்படி அருள் சுரந்ததும் திரிக்குறிப்புத் தொண்டநாயனூர் முத்திபெற்றதும் மூவராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு க - மைலில்.

238. திருமேற்றளி.

(காஞ்சிபுரம்) கச்சியப்பேஸ்வரர், காமாக்ஷியம்மை, விஷ்ணு பூசித்ததும் அப்பர் சுந்தரராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு க௦ மைலில்.

239. திருவோணகாந்தன்றளி.

(காஞ்சிபுரம்) ஓணகாந்தீஸ்வரர், காமாக்ஷியம்மை, தேவர்கள் ஓணன், காந்தனென்னு மசுரன் பூசித்ததும் சுந்தரருக்குப் பொற்காசளித்ததும் ஷெ சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தெற்கு வ-மை

240. கச்சியனேகதங்காவதம்.

(காஞ்சிபுரம்) திருவனேக தங்காவத ஈஸ்வரர், அருள்மன்னர், காமாக்ஷியம்மை, மனேன்மணி, கணபதி, குபேரன், பூசித்ததும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குக்கிழக்கு ந - மைலில்.

241. கச்சிநெறிக்காரைக்காடு;

(காஞ்சிபுரம்) காரைத்திருநாத ஈஸ்வரர், காமாக்ஷியம்மை, (திருவேகம்பமுதலிவ்வைந்து தலங்கட்கும் அம்மனுக்குக் காமாக்ஷியம்மையென்றே பெயர்) இந்திரன் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம்இதற்குத்தெற்கு உ-மைலில்.

242. குரங்கணின்முட்டம்.

வாலீஸ்வரர், இறையார்வளையம்மை, வாலி, அணிப்பிள்ளை, காக்கை, பூசித்து பேறுபெற்றதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு எ - மைலில்.

243. திருமாகறல்.

கலகங்காத்தவரத ஈஸ்வரர், அடைக்கலங் காத்தவரத ஈஸ்வரர், திருபுவன நாயகி, இந்திரன் பூசித்ததும் உடும்பு வடிவிலிருந்து சிவபெருமான் உற்பத்தியானதும் உடும்பு தழுவிக்கொண்டிருக்கிறதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு கஉ.

244. திருவோத்தூர்.

(அனகாவூர்) வேதநாதஈஸ்வரர், இளமுலையம்மை, வேதப்பொருளுணராது மயங்குமுனிவர்களுக்கும் தேவர்களுக்கும், சிவபெருமான் பொருள்விரித்தருளியதும் சூரியன்பூசித்துஒற்றையாழியுள்ள இரதம்பெற்றதும் குமாரசுவாமி பூசித்துத் தரையிற் கிரினுல் ஜலமுண்டாகும் வேலாயுதமடைந்ததும், விஷ்ணுபூசித்து பிருகு மகாரிஷியினுல் உண்டான சாபம் போக்கியதும் கல்யாணமகாமுனி சாபத்தால் இலட்சுமிக்குண்டான பெண் மானுருவம் போக்கியதும் சிவபெருமானருளால் சம்பந்தர் ஆண்பனே பெண்பனே யாக்கிவைத்ததும் சம்பந்தராற்பாடற்பெற்றதுமான தலம் இதற்குவடக்கு க—மைலில்.

245. வன்பார்த்தான் பனங்காட்டூர்.

(பனங்காட்டூர்) பனங்காட்டீஸ்வரர், அமிர்தவல்லி, கண்ணுவர், நிவேதிக்கப் பொருளில்லாமையால் தன்கையிற்கிடைத்த பனம்பழத்தைநிவேதிக்கச் சிவபெருமான் முன்றோன்றி அனுக்கிரகித்ததைப்பற்றி இக்காலத்திலும் பனங்கனி நிவேதிக்கப்படுகின்றதுமான தலம்.

இதற்குத் தெற்கு க - மைலில் வன்பாக்கம் என்னும் ஓர் நகரமுண்டு இராமசாமீஸ்வரர், பஞ்சின் மெல்லடியம்மை, இராமரால் பூசிக்கப்பட்டது, அம்மார்க்கமாய்ச்சுந்தரர் எழுந்தருளிவந்தபோது சிவபெருமான் பிராமணவடிவங்கொண்டு வந்து கொடுத்த கட்டமுதைப்புசித்தவுடனே பிராமணரைநோக்கி எவ்வூரென்று கேட்க வன்பாக்கத்துக்கும் பனங்காட்டூருக்குமாக இருப்போ மென்று சொல்லி மறைந்தருளினர். ஆகையால் சுந்தரர் இவ்விரண்டிற்கும் ஒன்றுயப்பாடியது இதற்கு வடமேற்கு உடு - மைலில்

246. வல்லம்.

வல்லநாயக ஈஸ்வரர், வல்லாம்பிகை, நவக்கிரகங்கள், வல்லாள னென்னு மரசன் பூசித்ததும், சீதாபிராட்டியார் தந்தையாகிய ஜனகராஜன், கௌரீதீர்த்தத்தில் மூழ்கிக் கரையேறுங்காலத்தில் பக்ஷிக்கவந்த கஞ்சனென்னு மரக்கனே நந்திதேவ

ரில் சங்காரஞ்செய்வித்து அவ்வரசனுக்குச் சாக்ஷி கொடுத்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு உ௫ - மைலில்.

247. திருமாற்பேறு.

மால்வணங்கீஸ்வரர், கருணைநாயகி, கும்பனென்னு மரசன் பொருட்டுத்ததிச முனிவரோடு உத்தஞ்செய்து சக்கரமிழந்ததிருமால் வேறுசக்கரம் பெறும் பொருட்டு பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு - எ

248. திருவூறல்.

(தக்கோலம்) உமாபதியீஸ்வரர், உமையம்மை, சேலநாத ஈஸ்வரர், சரிசரக்கண்ணியம்மை உமாதேவி பூசித்ததும் இதற்கு வடபுறத்தில் கங்காதர ஈஸ்வரர், மோகனவல்லி இவர்களெழுந்தருளியிருக்கும் ஓர் ஆலயமிருக்கின்றதும் அங்கு நந்தியின் வாயினின்று நீரூறிக் கொண்டிருக்குமகிமையால் இத்தலத்துக்குத் திருவூறல் எனப் பேர்பெற்றதும் ஷை நந்தியின் வாயினின்று கங்கைபெருகி இச்சிவபெருமானை வலமாகப் பிரதக்ஷணஞ்செய்துக் கொண்டு ஷை உமாபதியீஸ்வரர் தஜஸ்தம்பத்தினிடமிருக்கும் நந்தியருகில்வக்குளத்தில் வீழ்ந்து கால்வாய் வழியாய் கழனிகளிற் செல்லுகின்றதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்கிழக்கு எ-மைலில்.

249. இலுப்பையங்கோட்டூர்.

சந்திரசேகரர், கோடேந்துமாமுலையம்மை, சந்திரன், அரம்பை, பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு உ-மை

250. திருவிற்கோலம்.

(கூவம்) திரிபுரசுந்தரேஸ்வரர், தீண்டாத்திருமேனி, புராந்தகியம்மை, திரிபுரதகனஞ்செய்ததின் பேரில் தேவர்கள் பூசித்ததும் இதற்கு வடக்கு க—மைலில் விருத்த க்ஷீரநதிமணலாயிருந்ததைத் தோண்டியூற்றுண்டாக்கி நான்கு காலத்துக்கும் திருமஞ்சனங்கொண்டுவந்து இச் சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்து வருகின்றதும் இத்தீர்த்தத்தில் யாராவது அசுசியாக வந்திறங்கினுல் இப்போதும் அரவஞ்சிறி வருகின்ற மகிமை யுடையதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு கஉ - மை

251. திருவாலங்காடு.

(பழையனூர்) அமுர்தத்தாண்டவ ஈஸ்வரர், வண்டார்குழலி, இந்திரன், ஆதிசேடன், சுனந்தர், பூசித்ததும் காரைக்கா

லம்மையார், முத்திபெற்றதும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குக் கிழக்கு ௭ —

252. திருப்பாசூர்.

பாசூரநாதர், பசுபதி நாயகி, வாசீரேஸ்வரர், சுயம்புவனிதயம்மை, வியாசர், பூசித்ததும் சிவபெருமான் மூங்கிலடியி லுற்பத்தியானதும் சோழராஜனுக்காகச் சிவபெருமான் பாம்பாட்டிசொரூபமாக வந்து தரிசனங்கொடுத்ததும் சந்திரன், அங்காரகன் பூசித்து பேறுபெற்றதும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு ௩ - மைலில்.

253. திருவெண்பாக்கம்.

(திருவிளம்பூர்) வெண்பாக்கநாதர், கனிவாய் மொழியம்மை ஊன்றீஸ்வரர், மின்னலொளித்தாள், சந்தாநந்தர், பூசித்ததும் கண்ணிழந்த சுந்தரருக்கு ஊன்றுகோல் கொடுத்ததும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடகிழக்கு ௧௫-மை

254. திருக்கள்ளில்.

(திருக்கள்ளம்) சிவானந்தநாதர், ஆனந்தவல்லி, பிருகுரிஷி பூசித்ததும் சம்பந்தரார் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ௫0-மைலில்.

255. திருக்காளத்தி.

(காளாஸ்திரி சீகாளத்தி) காளத்தீஸ்வரர், ஞானபூங்கோதை பஞ்சலிங்கத்தி லொன்றாகியவாயுலிங்கமுடையதும் சி - என்பது சிலந்தி, காளம், பாம்பு, அத்தி, யானை, இம்மூன்றும் பூசித்து முத்திபெற்றதும் கண்ணப்பநாயனார், நக்கீரர், சிவகோசரியார், முத்திபெற்றதும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு-௯0

256. திருவொற்றியூர்.

மாணிக்கத்தியாகர், வடிவுடையம்மை, ஆதிபுரியீஸ்வரர், திரிபுரசுந்தரி, ஆதிசேடன், பிரமா, கங்கை, பார்வதி, பூசித்ததும் சுந்தரர், சங்கிலி நாச்சியாரைப் பிரிகிறதில்லையென்று ஷெ ஆலயத்தில்மகிழ மரத்தின்கீழ் சத்தியஞ் செய்துக் கொடுத்து மணம் புரிந்ததும் கலியநாயனார் முத்திபெற்றதும் பட்டணத்துப்பிள்ளை சமாதியடைந்ததும் மூவராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ௧0-மைலில்,

257. வலிதாயம்.

(பாடி) வலிதாயநாதர், தாயம்மை. பிரகஸ்பதி, அனுமார், பூசித்ததும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்கு வடமேற்கு ௫ - மைலில்.

258. வடமுல்லைவாயில்.

பாசுபதேஸ்வரர், மாசிலாமணியீஸ்வரர், கொடியிடையாளம்மை, சுப்பிரமணியர், தொண்டமான் சக்கரவர்த்தி, பூசி

த்ததும் சுந்தரராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத்தென்மேற்கு டு-மைலில்.

259. திருவேற்காடு.

வேற்காட்டீஸ்வரர், வேற்கண்ணியம்மை, சுப்பிரமணியர், இந்திரன், வேதம், சுக்கிரன், பரசிராமன், அஷ்டதிக்குப்பாலகர், பூசித்ததும் விஷ்ணு கோணங்கி தாசரிவேடம் பூண்டாடி இத்தலத்திலிருக்கும் பாஞ்சசன்னிய விநாயகரிடத்தில் சங்கத்தைப்பெற்றதும் மூர்க்கநாயனார் முத்திபெற்றதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்இதற்குத் தென்கிழக்கு.கடு

260. மயிலாப்பூர்.

கபாலீஸ்வரர், கற்பகவல்லி, பிரமன் சிரசிலொன்றைக் கிள்ளி யெறிந்த சிவபெருமான் பிரமகபாலத்தைக் கையிலேந்தி பிரசன்னராகி பிரமதேவன் கோரிக்கைபடி வரமருளியதும் பார்வதி மயிலாகப் பிறந்து வந்து பூசித்ததும் சோமுகாசூரன் அபகரித்துக் கொண்டுபோன வேதங்களுக்குத் தேசசு குறைந்திருந்தமையால் ஷை வேதங்கள் பூசித்து முன்போல தேசசுபெற்றதும் சூரபன்மன் முதலியோர்களைச் செயிக்க சுப்பிரமணியக்கடவுள் தவம்புரிந்துவேலாயுதம் பெற்றதும் சம்பந்தர் அங்கம் பூம்பாவை யாகும்படி பாடிய பாடலுக் கருள்புரிந்ததும் வாயிலா நாயனார் முத்திபெற்றதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்கிழக்கு டு - மைலில்.

261. திருவான்மியூர்.

மருந்தீஸ்வரர், நடன தியாகேசர், சொக்கநாயகி, திரிபுரசுந்தரி, வான்மீகர் பூசித்ததும் ஓர் பசு தன்பாலைச் சொரிந்து பூசித்து முத்திபெற்றதும் சம்பந்தர் அப்பராற் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு கஎ-மைலில்,

262. திருக்கச்சூராலங்கோயில்.

(திருக்கச்சூர்) விருந்திட்டேஸ்வரர், அமுதத்தியாகேசர், அஞ்சனாக்ஷியம்மை, வித்தியாதரர் பூசித்ததும் சுந்தரருக்குச்சிவபெருமான் மறையவராகக் கையிலோடேந்தி அன்னமுங் கரியும் ஆசித்துக்கொடுத்ததும் சுந்தரராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்குத் தென் மேற்கு உ0-மைலில்.

263. திருவிடைச்சுரம்.

இடைச்சுரநாதர், மடக்கொடிநாயகி, ஞானபுரீஸ்வரர், கோவர்த்தனாம்பாள், கௌதமர், சனற்குமாரர் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம் இதற்கு வடக்கு எ-மைலில்,

264 திருக்கழுக்குன்றம்.

வேதகிரீஸ்வரர் பெண்ணினல்லாளம்மை, நான்கு வேதங்களே யொரு மலையுருவாய் நின்றதும் அஷ்டவசுக்கள் திருநந்திதேவர், இந்திரன் திருமால் பூசித்ததும் பசு வராகம் பிரதக்ஷணம்வந்து வேத உருப்பெற்றதும் திருப்பாற்கடலைக் கடையமந்தரகிரியைப் பேர்த்தபோது அதிலுண்டாகிய கோடி ராக்ஷதர்களைக்கொன்ற கோடிருத்திரர்கள் பூசித்ததும் கிரேதாயுகத்தில் சண்டன் பிரசண்டன் என்னும் கழுகரசர்களும் திரேதாயுகத்தில் சம்பாதி சடாயு என்னும் கழுகரசர்களும் துவாபரயுகத்தில் சம்புகுத்தன் மாகுத்தன் என்னும் ரிஷிகள் சாபத்தினல் கழுகுரு வடைந்து அக்கழுக்களும் பூசித்து முத்தியடைந்ததும் அதுபோலவே நான்காவது யுகமாகிற இக்கலியுகத்தில்பூடா விருத்தா என்னும் இரண்டுதவசிகள் சிவபெருமானருளியவார்த்தையை மறுத்து உடனேமுத்திவேண்ட எதிர்மொழிந்த தப்பிதத்திற்காக கழு ரூபம்பெற்று கலியுகமுடிவில் முத்தியடைய வழிபட்டுக் கொண்டிருக்கிறதும் அக்கழுக்கள் இன்றைக்கும் பகல் கஉ-மணி வேளையில் வந்து ஆகாரமெடுத்துக் கொள்ளுகிறதும் மூவரால் பாடற்பெற்றதுமானதலம்இதற்குத்தென்மேற்கு ௩0-மைலில்.

265- அச்சிறுபாக்கம்.

பாக்கபுரியீஸ்வரர், ஆக்ஷியீஸ்வரர், சுந்தரமாதம்மை, மரகதவல்லி, தேவர்கள் பூசித்ததும் திரி புராதிகளைச் செயிக்கும் பொருட்டு சிவ பெருமானுக்குச் சகல தேவர்களும் திருத்தேராய் வந்தபொழுது சிவபெருமான் தேரிலேற அச்சொடிந்து விக்கினேஸ்வர ரருளால் அச்சுகூடியதும் சம்பந்தரால் பாடற்பெற்றதுமான தலம் இதற்குத் தென்மேற்கு ௩0—மைலில்.

266. திருவக்கரை.

சந்திரசேகரர், வடிவாம்பிகை, தேனம்பிகை, அமுதாம்பிகை, குண்டலமகாமுனி, வக்கிராசுரன், சந்திரன் பூசித்ததும் சம்பந்தரால் பாடற் பெற்றதுமான தலம் இதற்குக்கிழக்கு அ—மைலில்.

267. அரசிலி.

(ஒழுந்தியாப்பட்டு) அரசிலிநாதர், கொங்கையழகி, வாமதேவனென்னும் ரிஷியால் பூசிக்கப்பெற்றதும் சம்பந்தரால் பாடற்பெற்றதுமான தலம்இதற்குத் தென்கிழக்கு ௩-மைலில்.

268. இரும்பைமாகாளம்.

(இரும்பை) மாகாள ஈஸ்வரர், குயின்மொழியம்மை, மதுசுந்தரநாயகி, அரிகரப் புத்திரராது சேனைத்தலைவராகிய மாகாளர் பூசித்ததும் கடுவெளிசித்தர் சிவலிங்கம் வெடிக்கப் பாடியதும் சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்.

தொண்ட நாடு - முற்றிற்று.

9-வது, துளுவநாடு.

269. கோகரணம்.

மகாபலலிங்கேஸ்வரர், பெரியநாயகி, கோகரணநாயகி, இலங்கை யழியாதிருக்கும் பொருட்டு தன்னகரில் தாபித்துப் பூசிக்க இராவணன் கைலையிலிருந்து எடுத்துக்கொண்டுவந்த சிவலிங்கத்தை விக்கினேஸ்வரர் வாங்கி கீழேவைத்துவிட ஜலவிசற்சனத்திற்குச் சென்றுவந்த இராவணன் அச் சிவலிங்கத்தைத் தன் பலங்கொண்டவரையில் இருபது கரங்களாலும் பிடித் திழுக்க வராமையால் மகாபலலிங்க மென்றும் பிடித்திழுத்த போது அச் சிவலிங்கம் பசுகாது போல் குழைந்து விட்டபடியால் கோகரண மென்றும் பேர்பெற்றதும் சம்பந்தர் அப்பராற் பாடற் பெற்றதுமான தலம் (கோ-என்றால் பசு, கரணம் என்றால் காது.)

துளுவநாடு—முற்றிற்று.

10 வது, வடநாடு.

270 திருப்பருப்பதம்.

(மல்லிகார்ச்சுனம்) பருப்பதநாதர், பருப்பத நாயகி, நந்திகேஸ்வரர் பூசித்ததும் கினைத்த வண்ணம் அனுக்கிரகிக்கும்படியானதும் மூவராற் பாடற்பெற்றதுமான தலம்.

271. இந்திர நீலப்பருப்பதம்.

நீலாசலநாயகர், நீலாம்பிகை இந்திரன் பூசித்ததும் பாண்டவர்களில் அருச்சுனன் தவம்புரிந்து பாசுபதம் பெற்றதும்சம்பந்தராற் பாடற்பெற்றதுமான தலம்.

272. அனேக தங்காவதம்.

அருள்மன்னஈஸ்வரர், மனோன்மணியம்மை, சூரிய சந்திரர்கள் பூசித்ததும் சம்பந்தராற் பாடற் பெற்றதுமான தலம்.

273. திருக்கேதாரம்.

கேதார ஈஸ்வரர், கேதார கௌரி, சூ-மாதம்தேவர்களும், சூ—மாதம் மானிடர்களும் பூசித்து வருகின்றதும் சம்பந்தர் சுந்தரராற் பாடற் பெற்றதுமான தலம்.

274.

கைலாயம்.

பரமசிவன், பார்வதி,

இராவணன் இம்மலையை வேரோடெடுக்க எத்தனித்த போது சிவபெருமான் ஓர் விரலின் முனையால் அழுத்தி அவனகங்காரத்தை யடக்கி யருள்புரிந்ததும் சனகசனந்த சனாதன சனற்குமாரருக்கு ஞானோபதேசஞ் செய்தருளியதும் அப்பர் கால் தேயச் சென்றும் காணமல் மீண்டருளித் திருவை யாற்றிலே காணப் பெற்றதும் சுந்தரர் சேரமான் பெருமாணயனர் சோதியிற் கலந்ததும் மூவராற் பாடற் பெற்றதுமான தலம்.

வடக்கே காசி என்றோர் க்ஷேத்திர முண்டு விசுவநாதர் விசாலாக்ஷி, இக்கலி யுகத்தில் பிரத்தியட்சமாய் அருள் கொடுக்கும்படி யானதும் காலவைரவரால் காக்கப் படுகின்றதும் அரிச்சந்திரன் முதலானவர்கள் அடிமை பட்டதும் சமயாசாரியர்கள் இங்கு தமிழ்ப் பாஷை வழங் காமையால் இங்குவந்து தேவாரப் பதிகம் திருவாய் மலர்ந்தருளா விடினும் பதினெண் புராணங்களும் உப புராணங்களும் பலவாறு புகழ்ந்து துதிக்கப்பெற்றதும்நந்திதேவர் சமாதியடைந்ததுமான தலம்.

வடநாடு—முற்றிற்று.

சுபம்.

சிவாலயமான்யச்சுருக்கம் - முற்றிற்று.

கட வுநிணே.

சுப்பிரமணியர் தலங்கள் 20.

1 - வது, சோழநாட்டில் - திருவேரகம் - எட்டுகுடி 2. 2 - வது, ஈழநாட்டில்-கதிர்காமம் 1 - 3 - வது, பாண்டிநாட்டில் திருச்சிரலேவாய், திருவள்ளியூர், திருவாவினன்குடி, பழநி, திருப்பரங்குன்றம், சோலேமலே, 6 - 4 - வது, கொங்கநாட்டில் வெண்ணெய்மலே, சென்னிமலே, சிவமலே, மருதமலே, 4 - 5 - வது, மகதநாடு, அல்லது நடுநாட்டில் - மயிலம், 1 - 6 - வது, தொண்டநாட்டில் திருத்தணி, காட்டாவூர், திருப்போரூர், இளேயனார்வேலூர், செடியம், ஆண்டார்குப்பம், 6. ஆகதலம் 20. இவைகளில் திருப்பரங்குன்றம், திருச்சிரலேவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், சோலேமலே, இவையாறும், பிரதானத்தலங்கள்.

1. திருவேரகம்.

சுவாமிமலேயென்றும் பெயர் இது பிரதானத் தலங்களாதிலொன்று, சிவதரிசனஞ்செய்து வந்த பிரமதேவர் முருகக்கடவுளினிளமைப் பருவத்தைப்பற்றி வந்தனஞ் செய்யாதேக அவரை முருகக்கவுடளழைத்துப் பிரணவத்துக்குப் பொருள்கேட்க அவர்விடைகூருமைபற்றி அவரைக்குட்டிச்சிறையிட்டுச் சிருட்டித் தொழிலே நடத்துங்கால் தேவர்கள் வேண்டுகோளின்படி சிவபெருமான் சிறைநீக்கச்சொல்லியும் விடாது எம்பெருமானே வந்து விடுத்தருளியபின்னர் சிவபெருமானுக்குப் பிரணவார்த்தத்தை உபதேசித்தருளியதலம்.

2. எட்டுகுடி.

தேவர்களும் முனிவர்களும் பூசித்ததலம் கலியுகத்தில் பிரத்தியட்ச மூர்த்திகரமுள்ள தலம் இப்போதும் அனேக இடங்களினின்று பலவித காவடிமுதலிய பிரார்த்தனைகள் செலுத்தி உலகோர் இஷ்டசித்தியடையுந்தலம்இத்தலத்தின்பெருமையைக் கண்குளிரக் கண்டாலொழிய யாவற்றும் புலப்படாது வால்மீகர்சமாதியடைந்ததலம்.

3. கதிர்காமம்.

இது பிரதானத் தலங்களிலொன்ருகிய குன்றுதோருடலிற் சம்பந்தப்பட்டது பிரணவசொரூபமாக விருந்து அனேகந் திருவிளேயாடல்கள் நடததிக் கொண்டெழுந் தருளியிருக்குந்

தலம் தேவர்கள் பூசித்து வருகின்ற தலம்.

சற்புத்திரனென்னும் ஓர் வணிகன் இத்தலத்துக்குச் செல்லும்போது வழியிலோர் யானைவந்தவனைப் பிடித்துக்கொள்ள அவன் கதிர்காம வேலோனே என்று கூவ முருகக்கடவுள் ஓர் வேடன்போல் வேலோடும்வந்து அவ்வானையைத்துணித்து வணிகனைவிடுதல் செய்தருளிய தலம்.

அயிராவசு என்னுமோர் காந்தருவன் தேவகுருவின் வார்த்தையைக் கடந்ததினால் யானையாகும்படி சாபம்பெற்று இத்தலமுற்றும் பூசித்துத் தேவஉருவம்பெற்றபோது அவனது வேண்டுகோளுக்காக ஒப்புக்கொண்டபடி இக்காலத்தும் உற்சவ காலங்களில் ஓர்யானைதிடீரென எழுந்தருளச்செய்யுந் தலம் இதன் மகிமையையுரைக்கில் விரியுமாதலால் விடுத்தனம்.

4. திருச்சீரலைவாய்.

திருச்செந்தூர், சந்தனாசலம், கந்தமாதனம், என்றும் பெயர் இது பிரதானத் தலங்களாறிலொன்று பிரமா, விஷ்ணு, உருத்திரன், இயமன், தேவேந்திரன் முதலான தேவர்கள் வேண்டுகோளின்பொருட்டு சூரபன்பன்; சிங்கமுகாசுரன், தாருகர்சுரன்; பானுகோபன் முதலிய அசுரர்களைச் சம்ஹரித்துத் தேவர்களைச் சிறைமீட்டி நவவீரர்கள் புடைசூழ எழுந்தருளியிருக்குந் தலம்,

மகாவிஷ்ணுவின் வலக்கண்ணிற் பிறந்த சுந்தரவல்லியார் என்னும் பெயர்கொண்ட ஓர் பெண் மிக்க அழகுடன் முருகக்கடவுளுக்கு முந்தியதாரமாயித்தலத்தி லெழுந்தருளியிருக்கும்பொழுது தேவேந்திரன்குமாரத்தியாகிய தெய்வயானையை விவாகஞ் செய்துவர அத்தெய்வயானையை சுந்தரவல்லியார் இகழ்ச்சிசெய்த தப்பிதத்திற்காக மான்வயிற்றிற் பிறந்து குறவர்பால்வளரும்படி முருகப்பிரான் சபிக்க அவ்வாறே மான்வயிற்றிற்பிறந்து வள்ளிக் கிழங்கு தோண்டியெடுத்த ஓர்குழியில் குறவர்கண்டெடுத்து வள்ளியம்மை என்று பேர்வைத்து முருகவேளுக்குத் திருமணஞ் செய்தருளிய தலம்.

பவரோகமுதலிய சகல ரோகங்களையும் நீக்கிச் சுகானந்தத்தை யடைவிக்கத்தக்க இலையும் விபூதிப்பிரசாதமுஞ் சந்தனப்பிரசாதமும்பாலித் தருளுந்தலம் சந்தனம் பிரசாதித்ததினால் இதற்குக் கந்தமாதனம் சந்தனாசலம்என்று பெயராயிற்று.

5. திருவள்ளியூர்.

இதுபிரதானத் தலங்களாறி

லொன்றாகிய குன்றுதோறாடலி ற் சம்பந்தப் பட்டது நாரதர் வள்ளியம்மையைக் கண்டு அந் த அம்மணியினழகை அறுமுக க்கடவுளுக் கறிவிக்க உடனே யிங்செழுந்தருளஅப்போதுசே டிமாரோடு நீராடி நின்றவள்ளி நாயகி வெட்கி ஒருபுறத்தொது ங்கி யொளிந்துகொண்ட தல ம் இதனாலே இத்தலத்திற்கு வ ள்ளி யொளிந்தவளநாடு என்னு ம் பெயர் அனேகரிஷிகளும்தே வர்களும் அனுக்கிரகம் பெற்ற தலம்.

6. திருவாவினன்குடி.

இது பிரகானத் தலங்களாறி லொன்று திரு - இலட்சுமி, ஆ- காமதேனு, இனன் - சூரியன் இவர்கள் குடியிருந்து பூசித்த தலமாதலால் இதற்குத் திருவா வினன்குடியெனப் பேராயிற்று பரமசிவத்தி னிடத்து மாம்பழ ம்பெறும் பொருட்டு உலகைவ லம் வந்த சுப்பிரமணியர் அது பெறாத நிமித்தமிங் கெழுந்தரு ளிய தலம்.

7. பழநி.

இது பிரதானத்தலங்க ளாறி லொன்றாகிய குன்றுதோ றாட லிற் சம்பந்தப் பட்டது அகஸ் தியர், சேரர்கோன், வசுமந்த ன், சொர்ணகுத்தன், நித்தியா னந்தன், பிரமா, இந்திரன், கவுசலசேரன், அக்கினி, ஆதி சேடன், அருச்சுனன் முதலி யோர் பூசித்தனுக்கிரகம் பெற் றதலம் சிவபெருமா னிடத்து மாங்கனிக்காகப் பிணங்கித் தி ருவாவினன்குடியி லெழுந்தரு ளியிருந்த முருகக்கடவுளை யெ ம்பெருமா னழைத்துவந்து பி ணக்குத்தீர்த்து நீயேகனியொத் தவனாயிருக்க வேறுகனி யேது க்கென்று திருவாய்மலர்ந்தருளி ய தலம் பழம்-நீ-பழநி யென்றா யிற்றுதைப்பூசத்தில்விசேஷமா ய்ப்பலஇடத்திலிருந்து பலவித காவடி முதலிய பிரார்த்தனைக ள்செலுத்தி அருள்பெறக்கூடு மான தலம் போகர் சமாதிய டைந்த தலம் இதுகலியுகத்தில் கண்கண்ட தெய்வம்.

8. திருப்பரங்குன்றம்.

திருப்பரங்கிரி என்றும்பெய ர். இது பிரதானத்தலங்களாறி லொன்றுமுருகப்பிரான் பராச ர்புத்திரர்களைக் காத்தருளிய த லம் முருகக்கடவுள் சூராதிய ர்களை வென்று தேவ உல கங்குடி யேற்றிய பொழுது தேவேந்திரன் முருகக்கடவுளு க்குத் தெய்வயானையை விவாக ஞ்செய்து கொடுத்ததலம்

முருகாவென்று மொழிந்து வரும் ஒருபெண்ணின்கணவன் அவ்வாறு சொல்லா திருக்கப் பலமுறை சொல்லியுங்கேளாத குற்றத்திற்கு அவள் கரத்தைச்

சேதிக்க அக்கரம் முருகக்கடவுளருளால் வளரப்பெற்ற தலம் மகாமுனி சமாதி யடைந்த தலம்.

9. சோலைமலை.

இது பிரதானத்தலங்களாறி லொன்று. ஆனாலிப்போதிது விஷ்ணுலயமாகவும் நூற்றெட்டுத் திருப்பதியி லொன்றாகவு மிருக்கின்றது. இதற்கிப்போது திருமாலிருஞ்சோலை என்றும் கள்ளழகர் கோயில் என்றும் சொல்லப்படுகின்றது. இத்தலம் நக்கீரர், அருணகிரிநாதர் முதலிய அடியார்களால் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளுடைய ஆறுபடைவீடுகளி லொன்றாகப் பாடல் பெற்றிருக்கின்றது.

இந்த ஆலயத்துள்ள ஸ்தம்பங்கள் அதிக உன்னதமாய் ஒவ்வொன்றில் விசேஷ விசித்திர வேலைகளும் உருவங்களும் சின்னங்களும் முன்னமே அமையப்பட்டிருந்து இப்போது ஸ்தம்பங்களில் தளவரிசை முதல் மேல்மட்டம் வரையிலும் ஒரு உருவமாவது இன்னதென நிச்சயிக்கக் கூடாமலிருக்கும்படி யாது காரணத்தாலோ உளியினால் செதுக்கப் பட்டிருக்கின்றது இந்தப்பிரதேசங்களில் இதரமதஸ்தரான துருக்கர், கிருஸ்தவர் முதலியோர் விசேஷசஞ்சாரஞ் செய்திராமையால் அவர்களால் இக்குறும்புத்தனங்கள் நேரிட்டிருக்குமென நம்ப இடமில்லை. இத்தலத்திற்குக் காவற்காரர் வீரவாகுதேவராகச் சொல்லுகின்றனர் வீரவாகு தேவர் முருகவேளினது படைத்தலைவராகி அவ்வாலயத்தைக் காப்பவர் இக்கோயில் முகத்துவாரத்தில் பதினெட்டாம் படி கறுப்பண்ணசுவாமி கோயிலிப்போது மிருக்கின்றது விஷ்ணு கோயிலுக்கும் கறுப்பண்ண சுவாமி கோயிலுக்கும் எந்நாட்டிலும் எச்சமயங்களிலும் சம்பந்தமே யில்லை.

முருகக்கடவுளின் பிரதானத்தலங்க ளாறி லொன்றாகச் சொல்லும் சோலைமலை இதைவிடவேறு கிடையாது.

10. வெண்ணெய்மலை.

இது பிரதானத் தலங்களாறி லொன்றாகிய குன்றுதோறாடலிற் சம்பந்தப் பட்டது காமதேனு கெற்பபுரியாகிய கருவூரில் உலக சிருட்டியை நடத்தும் பொழுது சிருட்டிக்கப்படும் ஆன்மகோடிகளுக்கு உணவளிக்கும் பொருட்டு வெண்ணெயைத் திரட்டிவைத்த இடமாதலால் இதற்கு வெண்ணெய் மலையெனப் பெயராயிற்று. காமதேனு, பிரமா முதலியோர் பூசித்ததலம் இம்மலையானது வெண்ணெய் போல்வெள்ளிய நிறத்தையுடைத்தா யிருத்தலு மன்றி யெப்படிப்பட்ட

வெப்ப காலத்தினும் குளிர்ச்சியைத் தரும்படியான தலம்.

11. சென்னிமலை.

இது பிரதானத்தலங் களாறிலொன்றாகிய குன்றுதோ றாடலிற் சம்பந்தப்பட்டது. அகத்தியர் முதலியோர் பூசித்ததலம் அகத்தியருக்கு ஞானோபதேசஞ் செய்தருளிய தலம் இத்தலம் மற்ற சுப்பிரமணியர் தலங்களுக்கெல்லாஞ் சென்னி போற் சிறந்த தலமாகையால் சென்னிமலையென்று பெயராயிற்று.

12. சிவமலை.

இது பிரதானத்தலங்களாறிலொன்றாகிய குன்றுதோ றாடலிற் சம்பந்தப்பட்டது பாலசுப்பிரமணியக் கடவுள் சிவபெமானுக்கு உபதேச குருவாயெழுந்தருளி யிருக்குந் தலம் இம்மலை சிவலிங்கசொரூபமா யிருக்கின்ற தலம் இக்கலியுகத்திலும் அனேக அற்புதங்களைக்காட்டி பின்னடப்பவைகளை முன்னறிவிக்குந் தலம்.

13. மருதமலை.

இது பிரதானத்தலங்க ளாறிலொன்றாகிய குன்றுதோ றாடலிற் சம்பந்தப்பட்டது தேவர்கள் சூரனுதியர்க ளிடுக்கணுக்கஞ்சி புகலடைந்து பூசித்து அவர்களைச் சயித்துத் தத்தம் பதவிகளை யடைந்தருளிய தலம் பாம்பாட்டி சித்தர் கந்ததீர்த்தத்தருகிலிருந்து தவஞ் செய்து சித்திபெற்ற தலம்.

14. மயிலம்.

இது பிரதானத் தலங்களாறிலொன்றாய குன்றுதோ றாடலிற் சம்பப்பட்டது முருகக் கடவுள் வாகனமாகியமயில் தவஞ் செய்த தலம் அகத்தியருக்குப் பிரணவார்த்தத்தை யுபதேசித்தருளிய தலம் இம்மலை மயிலைப் போ லொத்தது.

15. திருத்தணி.

இது பிரதானத்தலங்க ளாறிலொன்றாய குன்றுதோ றாடலிற் சம்பந்தப்பட்டது. செருத்தணி என்றும் தணிகாசலம் என்றும் பெயர் செரு - உயுத்தம், தணி - தணிந்தது, செருத்தணி- உயுத்தந் தணிந்தது என்றுபொருள். அதாவது முருகக்கடவுள் சூரனோடு உயுத்தஞ் செய்துதணிந்திருந்த இடமென்றும்குறமாதாகிய வள்ளிநாயகி யாரைக் காவிற்கொடுவந்த பொழுது எதிர்த்த அவரது சுற்றத்தாருடன் உயுத்தஞ்செய்து தணிந்திருந்த இடமென்றும் பொருளாகும் நவபுண்ணிய தீர்த்த முள்ளதலம் இதில் ஓர் சுனையாகிய அற்புதத் தீர்த்தத்தில் தினந்தோறும் பூசிக்கும் பொருட்டு இந்திரனால் நீலோர்ப்பல மலர்

உண்டு செய்யப் பட்டிருந்தது அதில் சிலகாலத்துக்கு முன் காலையி லொருபூவும் உச்சியிலொருபூவும் மாலையி லொருபூவும் மலர்ந்து கொண்டிருந்த பல மகிமைகளைப் பொருந்திய தலம் திரிமூர்த்திகள் இந்திரன் நந்தி ஆதிசேடன் சப்தரிஷிகள் முதலியோர் பூசித்து அவரவர் வேண்டுங் கோரிக்கைகளை யீடேறப்பெற்ற தலம் அருணகிரிநாதராற் பாடற் பெற்ற தலம்.

16. காட்டாவூர்.

அரண்ணிய புரம் என்றும் பெயர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள்பரமசிவனுக்குப்பிரணவார்த்தத்தையுபதேசித்தருளியதிருக்கோலத்தை உரோமரிஷி கோரியபடி அவருக்குத் தரிசனங் கொடுத்தருளிய தலம்.

17. திருப்போரூர்.

பிருகுமகாமுனி சாபத்தினால் வேப்பமரமாயவதரித்த இலக்குமி தேவியை இரட்சித்த நிம்பவிநாயகர் வசிக்குந் தலம் சூரனுடன் போராடியதலம்சிதம்பரசுவாமி குமரகுரு சுவாமி முதலியோர் பூசித்த தலம் பிரதிவருடம் ஆடி மீ கிருத்திகையில் சகலதேவர்களும் முனிவர்களும் ரிஷிகளும் மானிடர்களும் வந்து பூசிக்குந் தலம்.

18. இளையனார்வேலூர்.

கஸ்யப மகாமுனிவர் செய்யும் யாகத்துக்கு இடையூறு செய்த மலையன், மாரன் என்னும் இரண்டு இராட்சதர்களைச் சங்கரிக்கும்படி பரமசிவன் ஆக்யாபிக்க ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அவர்கள் பேரிலெறிந்த பல்லியம் அவாளைக் கொன்று பூமியிற் படிந்ததலம் இளையன்- பாலியன், வேலன்-சுப்பிரமணியன்.

19. நெடியம்.

இந்திராதி தேவர்களுக்குக் காக்ஷிகொடுத்து அபயமளித்த தலம்.

20. ஆண்டார்குப்பம்.

பூர்வம் பிரமதேவனைத் தடுத்தாட்கொண்டகாலத்தில் கொண்டருளிய கோலத்தோடு (அதாவது இரண்டு கைகளையும் இரண்டு தொடைகளின்மேல்வைத்து நின்ற திருக்கோலமாயிருத்தல்) ஒரு பத்தனுக்குக் காக்ஷி கொடுத்தருளிய தலம்.

சுப்பிரமணியர் தலங்கள் - முற்றிற்று.

☞ முன் சுப்பிரமணியக்ஷேத்திரங்களாயிருந் திப்போது விஷ்ணு க்ஷேத்திரமா யிருக்கும் சோலைமலை 1. திருப்பதி 1. சோலைமலையைப் பற்றி 9 - வது, நெம்பரில் எழுதப்பட் டிருக்கின்றது. திருப்பதியோ வெனில் வேங்கடேசப் பெருமாளென்னும் விஷ்ணுமூர்த்தி நிவாசஞ் செய்யுந் தலமாயிற்று. இதைச் சைவசமயிகள் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுடைய குன்றுதோ ருடல்களி லொன்ருகச் சொல்லுகின்றனர். இது பாலசுப்பிரமணிய க்ஷேத்திரமென்றும் ஸ்ரீ - முருகக்கடவுள் பிரமதேவனைச் சிறையிலிட்டு இம்மலைக் கெழுந்தருளி உலகசிருஷ்டி முதலியவற்றை நடத்திவந் தனரென ஸ்காந்த புராணத்தில் சொல்லியிருக்கிறதென்றும் அறுமுகக்கடவுளுக் கடியாரான அருணகிரி நாதரால் இத்தலம் பாடபெற்றிருக்கின்றதென்றுஞ் சொல்லுகின்றனர்.

அட்டவிரட்டத்தலங்கள்.

1. திருக்கண்டியூர் - பிரமன்றுசிரங்கொய்ததலம் 75
2. திருக்கோவலூர் - அந்தகாசுரனைக்கொன்றதலம் 225
3. திருவதிகை - திரிபுரத்தையெரித்ததலம் 221
4. திருப்பறியலூர் - தக்கன்சிரசைத்தடிந்ததலம் 104
5. திருவிற்குடி - ஜலந்தரனைத்தலையரிந்ததலம் 137
6. திருவழுவூர் - யானையுரித்ததலம் 55
7. திருக்குறுக்கை - மன்மதனையெரித்ததலம் 26
8. திருக்கடவூர் - இயமனையுதைத்ததலம் 110

உ

கடவுட்டுணை.

சிவாலய அட்டவணை.

அகத்தியான்பள்ளி	189	இரத்தினகிரி	64
அச்சிறுபாக்கம்	265	இராமனதீச்சரம்	140
அம்பல்கீழ்க்கோயில்	117	இராமேச்சுரம்	200
அரசிலி	267	இரும்பூளை	161
அரதைப்பெரும்பாழி	162	இரும்பை	268
அரிசிற் கரைப்புத்தூர்	129	இரும்பைமாகாளம்	268
அரித்துவாரமங்கலம்	162	இலுப்பைப்பட்டு	30
அரியான்பள்ளி	149	இலுப்பையங்கோட்டூர்	249
அவளிவணல்லூர்	163	இன்னம்பர்	47
அவிநாசி	208	ஈங்கோய்மலை	63
அழகார்புத்தூர்	129	உடையார்கோயில்	158
அறைகண்டநல்லூர்	226	உய்யகொண்டான்மலை	67
அறையணிநல்லூர்	226	உறையூர்	68
அனகாவூர்	244	எதிர்கொள்பாடி	24
அனேகதங்காவதம்	272	எழிலூர்நேமம்	169
அன்பிலாலந்துறை	57	எறும்பியூர்	70
அன்னப்பன்பேட்டை	8	ஒழுந்தியாப்பட்டு	267
அன்னியூர்	22	ஓமாம்புலியூர்	31
ஆக்கூர்	109	கச்சிநெறிக்காரைக்காடு	241
ஆச்சாபுரம்	5	கச்சியனேகதங்காவதம்	240
ஆடுதுறை	94	கஞ்சனூர்	36
ஆண்டாங்கோயில்	160	கடம்பந்துறை	65
ஆலங்குடி	161	கடம்பர்கோயில்	65
ஆலம்பொழில்	73	கடம்பூர்	34
ஆவுடையார்கோயில்	194	கடிக்குளம்	172
ஆவூர்பசுபதீச்சரம்	84	கடுவாய்க் கரைப்புத்தூர்	160
இடும்பாவனம்	171	கண்டியூர்	75
இடையாறு	227	கரயபுரம்; கரவீரம்	154
இந்திரநீலப்பருப்பதம்	271	கருக்குடி	132

கருப்பறியலூர் 27
கருவிலி 126
கருவூர் 214
கலையநல்லூர் 131
கற்குடி 67
கன்றாப்பூர், கன்னாப்பூர் 183
காஞ்சீபுரம் 237
காட்டேரையன்பேட்டை 155
காரைமேடு 4
காவிரிபூம்பட்டணம் 10
காவேரிபட்டணம் 10
காளாஸ்திரி 255
காளையார்கோயில் 202
காறாயல் 182
கானாட்டாம்புலியூர் 32
கானாட்டுமுள்ளூர் 32
கானூர் 56
கீவளூர் 147
கீழூர் 225
கீழையூர் 18
கீழ்வேளூர் 147
குடந்தைக்கீழ்க்கோட்டம் 90
குடமூக்கு 89
குடவாசல், குடவாயில் 157
கும்பகோணம் 89
குரக்குக்கா 28
குரங்கணின்முட்டம் 242
குரங்காடுதுறை 49
குருமாணக்குடி 17
குறுக்கை 26
குற்றாலம் 100
கூடலையாற்றூர் 217
கூவம் 250
கைச்சினம் 185
கைப்பனாகுளம் 172
கைலாயம் 274
கொடிமாடச்செங்குன்றூர் 211
கொடுங்குன்றம் 197
கொடுமுடி 213
கொட்டையூர் 44
கொள்ளம்பூதூர் 176
கொள்ளிக்காடு 178
கோகரணம் 269
கோடிக்கரை 190
கோடிக்குழகர் 190
கோட்டாறு 116
கோட்டூர் 174
கோயிலடிப்பாளையம் 6
கோயிலூர் 170
கோயில்வெண்ணி 165
கோயிற்பத்து 113
கோளிலி 186
கோனேரிராஜபுரம் 97
சக்கரப்பள்ளி 80
சம்புகேஸ்வரம் 60
சாக்கோட்டை 131
சாயாவனம் 9
சிக்கல் 146
சிதம்பரம் 1
சிவபுரம் 130
சிவபுரி 3
சிறுகுடி 123
சிற்றேமம் 169
சியாத்தமங்கை 144
சியாழி, சீர்காழி 14
சுவேதாரணியம் 11
செம்பொனார்கோயில் 105
செல்லூர்திருக்களம்பூர் 176
சேங்கனூர் 41
சோற்றுத்துறை 76

தக்கோலம் 248
தண்டலைச்சேரி 173
தண்டலைநீணெறி 173
தருமபுரம் 114
தலைச்சங்காடு 108
தலைஞாயிறு 27
தலையாலங்காடு 156
திட்டை 78
தியாகவல்லி 220
திரிகூடாசலம் 205
திரிபுவனம் 203
திருஆவூர் 84
திருக்கச்சூராலங்கோயில், 262
திருக்கச்சூர் 262
திருக்கடவூர் 110
திருக்கடவூர்மயானம் 111
திருக்கடாவூர் 13
திருக்கடைமுடி 18
திருக்கடையூர் 110
திருக்கண்ணபுரம் 140
திருக்கண்ணார்கோயில் 17
திருக்கண்டேஸ்வரம் 233
திருக்கருகாவூர் 81
திருக்கருவூர்த்திருவானிலை 214
திருக்கலிக்காமூர் 8
திருக்கழிப்பாலை 4
திருக்கழுக்குன்றம் 264
திருக்களர் 168
திருக்களாவூர் 81
திருக்கள்ளம், திருக்கள்ளில் 254
திருக்காட்டுப்பள்ளி 12
திருக்காரவாசல் 182
திருக்காளத்தி 255
திருக்கானப்பேர் 202
திருக்குக்காவல் 28
திருக்குடந்தைக்காரோணம் 91
திருக்குருகாவூர் 13
திருக்குவளை 186
திருக்குற்றாலம் 205
திருக்கேதாரம் 273
திருக்கேதீச்சரம் 192
திருக்கொட்டாறம் 116
திருக்கொண்டீச்சரம் 135
திருக்கொடீச்சரம் 135
திருக்கொழம்பியம் 98
திருக்கோடிகா, 37
திருக்கோடிக்காவல் 37
திருக்கோணமாமலை 191
திருக்கோலக்கா 15
திருக்கோவலூர் 225
திருக்கோழம்பம் 98
திருச்சத்திமுற்றம் 85
திருச்சாத்தமங்கை அய
[வந்தி 144
திருச்சாய்க்காடு 9
திருச்சிராப்பள்ளி, 69
திருச்சிறுப்பள்ளி 69
திருச்சுழியல் 204
திருச்செங்காடு 142
திருச்செஙகோடு 211
திருச்செம்பொன்பள்ளி 105
திருச்சேய்ஞலூர் 41
திருச்சேறை 158
திருச்சோத்துறை 76
திருச்சோபுரம் 220
திருத்தளூர் 229
திருத்தானமுடையார்
[கோயில் 15
திருத்தினைநகர் 219
திருத்துருத்தி 100

திருத்தேவன்குடி	42
திருநணா	**210**
திருநல்லம்	97
திருநல்லூர்ப்பெருமணம்	5
திருநள்ளாறு	**115**
திருநறையூர்	128
திருநனிபள்ளி	**106**
திருநன்னிலத்துப்பெருங் [கோயில்	**134**
திருநாகேச்சுரம்	92
திருநாமநல்லூர்	222
திருநாரையூர்	33
திருநாவலூர்	222
திருநின்றியூர்	**19**
திருநீலக்குடி	95
திருநெட்டாங்களம்	**71**
திருநெய்த்தானம்	52
திருநெல்லிக்காவல்	**180**
திருநெல்வாயிலறத்துறை	**215**
திருநெல்வாயில்	3
திருநெல்வெண்ணெய்	**224**
திருநெல்வேலி	**206**
திருந்துதேவன்குடி	**42**
திருப்பந்துருத்தி	**74**
திருப்பந்துறை	**127**
திருப்பயற்றூர்	**141**
திருப்பரங்குன்றம்	**195**
திருப்பராய்த்துறை	66
திருப்பருப்பதம்	**270**
திருப்பல்லவனீச்சரம்	**10**
திருப்பழமண்ணிப்படிக் [கரை	30
திருப்பழனம்	50
திருப்பழையாறைவடதளி	87
திருப்பளாத்துறை	66
திருப்பறியலூர்	**104**
திருப்பனங்காட்டூர்	**234**
திருப்பனந்தாள்	39
திருப்பனையூர்	**136**
திருப்பாசூர்	252
திருப்பாச்சிலாச்சிராமம்	**62**
திருப்பாண்டிக்கொடுமுடி	**213**
திருப்பாதிரிப்புலியூர்,	**232**
திருப்பாப்பூர்	232
திருப்பாம்புரம்	**122**
திருப்பாலைத்துறை	**82**
திருப்பாற்றுறை	59
திருப்புகலூர்	**138**
திருப்புகலூர்வர்த்தமா [னீச்சரம்	139
திருப்புத்தூர்	198
திருப்புறம்பயம்	46
திருப்புனவாசல்,	
திருப்புனவாயில்	199
திருப்புன்கூர்	**20**
திருப்பூந்துருத்தி	74
திருப்பூவணம்	**203**
திருப்பைஞ்ஞீலி	61
திருமங்கலக்குடி	38
திருமணஞ்சேரி	25
திருமயிலாடுதுறை	**102**
திருமயேந்திரப்பள்ளி	6
திருமருகல்	143
திருமழபாடி	54
திருமறைக்காடு	188
திருமாகறல்	**243**
திருமாணிக்குழி	**201**
திருமாளம்	118
திருமாற்பேறு	**247**
திருமீயச்சூர்	119

திருமுண்டீச்சுரம் 233
திருமுதுகுன்றம் 223
திருமுருகன்பூண்டி 209
திருமுலைவாடி 54
திருமுல்லைவாயில் 7
திருமெஞ்ஞானம் 111
திருமேற்றளி 238
திருவகுளம் 2
திருவக்கரை 266
திருவஞ்சைக்களம் 207
திருவண்ணாமலை 236
திருவதி. திருவதிகை 221
திருவம்பர்பெருந்திருக்
[கோயில் 118
திருவம்பர் மாகாளம் 117
திருவலஞ்சுழி 88
திருவலம்புரம் 107
திருவழுந்தூர் 101
திருவழுவூர் 55
திருவாக்கூர்த்தான்றோன்றி
[மாடம் 109
திருவாசி 62
திருவாஞ்சியம் 133
திருவாடானை 201
திருவாடுதுறை 99
திருவாண்டார்கோயில் 230
திருவாப்பனூர் 194
திருவாமாத்தூர் 235
திருவாய்ப்பாடி 40
திருவாய்மூர் 187
திருவாரூரறநெறி 151
திருவாரூர் 150
திருவாரூர்ப்பரவையுண்
[மண்டளி 152
திருவாலங்காடு 251
திருவாலவாய் 193
திருவாலூர் 150
திருவாவடுதுறை 99
திருவானைக்கா 60
திருவான்மியூர் 261
திருவிடைச்சுரம் 263
திருவிடைமருதூர் 93
திருவியலூர் 43
திருவிளமர் 153
திருவிளம்பூர் 253
திருவிற்குடி 137
திருவிற்கோலம் 250
திருவீங்கிமலை 63
திருவீழிமிழலை 124
திருவுசாத்தானம் 470
திருவூறல் 248
திருவெண்காடு 11
திருவெண்டதுறை 175
திருவெண்ணெய்நல்லூர் 228
திருவெண்பாக்கம் 253
திருவெருக்கத்தம்புலியூர் 218
திருவேகம்பம் 237
திருவேடகம் 196
திருவேட்களம் 2
திருவேட்டக்குடி 112
திருவேதிகுடி 77
திருவேற்காடு 259
திருவைகாவூர் 48
திருவையாறு 51
திருவொற்றியூர் 256
திருவோணகாந்தன்றளி 239
திருவோத்தூர் 244
திலதைப்பதி 121
தில்லை 1
தில்லைத்தானம் 52
தீர்த்தநகரி 219

துறையூர்	229	பிரான்மலை	197
தூங்கானைமாடம்	216	புக்கொளியூர் அவிநாசி	208
தெங்கூர்	179	புஞ்சை	106
தெளிச்சேரி	113	புள்ளமங்கை	79
தென்குடித்திட்டை	78	புள்ளிருக்கும்வேளூர்	16
தென்குரங்காடுதுறை	94	பூவனூர்	166
தென்னலங்குடி	95	பெண்ணாடம்	216
தேரழுந்தூர்	101	பெரும்பள்ளம்	107
தேவூர்	148	பெரும்புலியூர்	53
நல்லூர்	83	பெருவேளூர்	155
நன்னிலம்	134	பேணுபெருந்துறை	127
நாகப்பட்டணம்	145	பேராளம்	119
நாகேந்திரப்பட்டணம்	218	பேரியில், பேரையூர்	177
நாகைக்காரோணம்	145	மதிமுத்தம்	121
நாட்டியத்தான்குடி	181	மதுரை	193
நாத்தூர், நாலூர்மயானம்	159	மத்தியார்ச்சுனம்	93
நீடூர்	21	மயிலாப்பூர்	260
நெடுங்களம்	71	மல்லிகார்ச்சுனம்	270
நெய்வெண்ணெய்	224	மாந்துறை	58
நெல்லிக்கா	180	மாயவரம்	102
பட்டீச்சரம்	86	மீயச்சூரிளங்கோயில்	120
பந்தநல்லூர்,	35	மூக்கீச்சரம்	68
பந்தணைநல்லூர்	35	மேலைத்திருக்காட்டுப்பள்ளி	72
பயத்தங்குடி	141	லாலிகெடி	61
பரசலூர்	104	வஞ்சமாங்கூடலூர்	212
பரிதிநியமம்,	164	வடகுரங்காடு	49
பருத்தியப்பார்கோயில்	164	வடமுல்லைவாயில்	258
பரையவரம்	234	வடுகூர்	230
பவானி	210	வலங்கிமான்	132
பழயனூர்	251	வலிதாயம்	257
பழுவூர்	55	வலிவலம்	184
பழையாறை	87	வல்லம்	246
பள்ளியின்முக்கூடல்	149	வன்பார்த்தான்பனங் [காட்டூர்	245
பனங்காட்டூர்	245	வன்னியூர்	125
பாடி	257	வாட்போக்கி	64
பாதாளீச்சரம், பாமுழை	167		